கனடா
நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

முரசொலி

தெரிவிப்பது நாங்கள் தீர்மானிப்பது நீங்கள்
TEL: 416-751-2022 FAX: 416-498-5065

அவசர பற் சிகிச்சை

முரசு கரைதலை நிறுத்துதல்
பல் வேர்களை அடைத்தல்
அழகுபடுத்தும் பல் சிகிச்சை
முதியோர் பல் பராமரிப்பு

என்றென்றும்
இயற்கைப் பற்களின்
ஆரோக்கியச் சிரிப்புக்கு



நிரந்தரமான செயற்கைப்பற்கள்
குழந்தைகளுக்கான பல் சிகிச்சை
வாய் துர்நாற்றம் அகற்றல்
பல்அடைத்தல்

பிரபல பல் வைத்திய நிபுணர்
டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்
416-750-9969

முரசு 13 ஒலி 16 புதன்கிழமை ஜனவரி 18, 2012 தை 04 இலவச இதழ்




சிதம்பர ஆதி நடேசர் ஆலயத்தில் நடைபெற்ற திருவெம்பாவை உற்சவத்தில் பிரபல யாழ்ற்றன் வர்த்தக நிலைய உரிமையாளர் கண்ணனின் சகோதரிகளான திருமதி சித்திரா சபாநாதன், திருமதி ஆனந்தி வைத்தியநாதன் ஆகியோர் பாடுவதையும், பிரபல மிருதங்க வித்துவான் செல்வநாயகம் சண்முகலிங்கம் மிருதங்கம் வாசிப்பதையும், வேல் புருசோத்தமன் புல்லாங்குழல் வாசிப்பதையும், சயீவன் சபாநாதன் கடம் வாசிப்பதையும் படத்தில் காணலாம்






















சிதம்பர ஆதி நடேசர் ஆலயத்தில் நடைபெற்ற திருவெம்பாவை உற்சவத்தில் பக்தர்கள் திருவெம்பாவை படிப்பதை மேலே உள்ள படத்தில் காணலாம்

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்

சாதனை படைக்கும் நடன ஆசிரியை



ஜனவரி 7ஆம் திகதி 2012ஆம் ஆண்டு TVI STARS என்னும் மாபெரும் நிகழ்ச்சி Chinese Cultural Centre இல் மிகச் சிறப்பாக TVI நிறுவனத்தால் நடத்தப்பட்டது. இதில் நடனத்தாரகை நடனப் போட்டியில் செல்வி மதுமிதா பாஸ்கரன் முதலாம் இடத்தைப் பெற்று நடனத் தாரகை என்னும் பட்டத்தை தனதாக்கிக் கொண்டார். இரண்டாம் இடத்தை செல்வி கீர்த்தனா கதிர்காமநாதன் பெற்றுக் கொண்டார். இவ்விரு மாணவிகளும் பாரதி இந்திய சாஸ்திரிய நடனக் கல்லூரி ஆசிரியர் திருமதி சியாமா தயாளனின் மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது. திருமதி சியாமா தயாளன் அவர்கள் யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் சிறு வயதிலிருந்தே நடனத் துறையில் மிக்க ஆர்வம் கொண்டு கல்வி கற்று வந்தார். இதனை உணர்ந்த இவரின் பெற்றோர்கள் இவரை சென்னைக்கு அனுப்பி, அங்குள்ள திறமான நடன ஆசிரியர்களான திரு. திருமதி தனஞ்செயன் அவர்களிடம் நடனத்தைக் கற்பித்தனர். இவர் முதல்தர மாணவியாக சித்தி அடைந்தார்.

கனடாவாழ் தமிழ் மக்கள் செய்த தவப்பேற்றினால் திருமதி சியாமா தயாளன் கனடாவுக்கு இடம்பெயர்ந்து வந்தார். ரொரன்றோவில் பாரதி இந்திய சாஸ்திரிய நடனக் கல்லூரியை ஸ்தாபித்து மிகவும் திறம்பட நடனக்கலையை கற்பித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் பாடம் கற்பிக்கும் பொழுது எல்லா பிள்ளைகளுக்கும் அன்பு கலந்த கண்டிப்புடன் ஒரு மணி நேரமும் பாடம் சொல்லிக் கொடுப்பார் என இவரிடம் கற்கும் மாணவர்கள் கூறக் கேட்டுள்ளோம்.

திருமதி சியாமா தயாளன் அவர்களிடம் உங்கள் பிள்ளைகளை நடனம் கற்பிக்க அனுப்பினால் அவர்கள் சிறந்த நடனத் தாரகைகளாக வருவது மட்டுமல்லாது சிறந்த ஒழுக்கசீலர்களாகவும் வருவார்கள் என்பதில் ஐயமில்லை.





உத்தம புத்திரனின் உதிர்வு



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் காரை நகரில் ஆரம்பக் கல்வியைக் கற்றவரும் சம்பியா, கனடாவில் கணக்காளராக கடமையாற்றியவருமான திரு. அருணாசலம் கருணாகரன் 30-12-2011 அன்று சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா வேலுப்பிள்ளை நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகலட்சுமியின் அன்புக்கணவரும், பாலகரன்(கண்ணன்), பாலலட்சுமி (கண்ணம்மா), சுபாஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவர்.

இவரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிதம்பர ஆதி நடேசரைப் பிரார்த்திக்கின்றோம்.

இவர் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். சிறந்த பண்பாளர். எவருடனும் அன்புடன் உரையாடுபவர். உதவி என்று இவரை நாடுவோருக்கு பேருவகையுடன் உதவி செய்பவர். பயன் கருதாது பல உதவிகள் புரியும் தருமசீலர். இவர் காரை கலாச்சார மன்றத்தின் தலைவராக இருக்கும்போது எல்லா மக்களையும் ஒன்று கூட்டி பெரும் திரளான மக்களுடன் சேர்ஜோன் மக்டொனால் கலையரங்கில் கலைவிழா நடைபெற்றமை சரித்திரப்பிரசித்தி பெற்றது. இவரின் இழப்பு காரைநகர் வாழ் மக்களுக்கு மட்டுமன்றி ரொறன்ரோ வாழ் தமிழர்களுக்கும் பேரிழப்பாகும்.

பிறப்பில்லா நித்தியானந்தை சிதம்பர நடேசர் அளிக்கப் பிரார்த்திக்கின்றோம்.



ஜப்பானின் டோக்கியோ நகரிலுள்ள தெப்போஸு இராவி புனித ஸ்தலத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற புதுவருடப் பரிசுத்தமாக்கும் நிகழ்வின்போது மக்கள் பனிக்கட்டிகள் நிறைந்த பொய்கையில் நின்றவாறு தமது உடலையும் ஆன்மாவையும் பரிசுத்தப்படுத்த பிரார்த்திப்பதை படத்தில் காணலாம்.

ஆடம்பர மாடிக் குடியிருப்பில் கம்பிக் கூண்டுகளில் வாழும் அவலம்



30 வருட காலமாக கம்பிக் கூண்டில் வாழும் தாய் லுன் (70 வயது)



உலகின் மிகவும் செல்வந்த நகர்களில் ஒன்றான ஹொங்கொங்கிலுள்ள ஆடம்பர மாடிக் குடியிருப்பொன்றில் சின்னஞ்சிறு கம்பிகளால் அடைக்கப்பட்ட கூண்டுகளில் மக்கள் வாழும் அவலம் அம்பலமாகியுள்ளது.

இது தொடர்பான தகவலை பிரித்தானிய 'டெய்லி மெயில' ஊடகம் புதன்கிழமை வெளியிட்டுள்ளது. ஹொங் கொங்கில் வீடுகளுக்கு பெரும் கிராக்கி நிலவுவதால் தங்குமிட வசதியின்றி வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களின் நிர்க்கதியான நிலைமையை தமக்குச் சாதகமாக பயன்படுத்தும் வகையில் ஆடம்பர மாடிக் கட்டடங்களின் உரிமையாளர்கள் அக் கட்டடங்களின் அறைகளை பல பகுதிகளாகப் பிரித்து வழங்கி பெருந்தொகை கட்டணத்தை வாடகையாக வசூலிக்கும் நடவடிக்கையில் ஈடுப்பட்டுள்ளனர்.

இதன் பிரகாரம், ஒரு அறை சுமார் 20 கம்பிக்கூண்டுகளை உள்ளடக்கும் வகையில் பிரிக்கப்பட்டு, ஒரு கூண்டுக்கு மாதம் 200 அமெக்க டொலர் கட்டணம் என்ற வகையில் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. 4 அடி நீளம் இரண்டரை அடி அகலம் உடைய மேற்படி கூண்டுகளில் நீட்டி நிமிர்ந்து படுக்கக் கூட முடியாத துர்ப்பாக்கிய நிலையில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

ஹொங்கொங்கிலுள்ள அதிக சனத் தொகை கூடிய பிரதேசமொன்றில் ஒவ்வொரு சதுர மைலுக்கும் சுமார் 16,500 பேர் வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கடல் சிங்கமொன்றின் வாய்க்குள் தலையை நுழைக்கிறார்



ஆஸ்திரியாவின் வியன்னா நகரிலுள்ள தியர்கர்டென் ஸ்கோயன் பேர்ன் மிருகக்காட்சிசாலையைச் சேர்ந்த கடல் சிங்கமொன்றின் வாய்க்குள் அதனைப் பராமரிப்பவர் தனது தலையை நுழைப்பதை படத்தில் காணலாம்.

இராட்சத உருவங் கொண்ட இந்த கடல் சிங்கமானது மிருகக்காட்சிச் சாலைக்கு வரும் பணியாளர்களை ஈர்த்துவருகிறது.

ஆஸ்தியாவின் வியன்னா நகரிலுள்ள தியர்கர்டென் ஸ்கோயன் பேர்ன் மிருகக்காட்சிசாலையைச் சேர்ந்த கடல் சிங்கமொன்றின் வாய்க்குள் அதனைப் பராமப்பவர் தனது தலையை நுழைப்பதை படத்தில் காணலாம்.

இராட்சத உருவங் கொண்ட இந்த கடல் சிங்கமானது மிருகக்காட்சிசாலைக்கு வரும் பணியாளர்களை ஈர்த்து வருகிறது.

இவன் தான் மனிதன் -17

(பெரும்புலவர் முஹமத் ஹன்ஸீர்)

உணவுப் பொருட்களும் பாலும் பலதும்
அகதிகள் கைகளை அடைவது குறைவு
எனினும் அவைகளைத் திருட்டு வழிகளில்
விற்பனை யாக்கினர் அயோக்கியப் பாலகர்

கல்லூ ரிஅதிபர் முஸ்லிம் அம்மையார்
அவர்களின் கணவர் சட்டத் தரணியார்
கல்லூ ரிவளவுள் அதிபரும் சென்றுதான்
எல்லோ ருமெப்படி என்பதைப் பார்ப்பவர்

அதிபரும் அகதிகள் அவதியைக் கண்களால்
கண்டதும் ஐயகோ அநியாயம் என்றுடன்
கதியிவர் கட்கினி இன்றிது ஆயிடில்
இக்கதி நாளையில் எமக்கெனக் கதறினார்

மந்திரி செல்டன் நடராஜ் அறிந்திட
முந்தியென் றிந்த அதிபர் முறையிட
பிந்திவி டாதுடன் உதவி அரச
அதிபரைப் பொலிஸில் கோவத்தில் ஏசினார்

அற்புத மாயுடன் உணவெலாம் உடனுடன்
அத்துடன் பற்பல உதவிகள் நலமுடன்
கற்பனை யாயிதென் றெண்ணவே வேண்டுமாம்
நற்பல பயனெலாம் நடந்ததே அத்துடன்

பல்கலைக் கழக மண்டபத் தில்லொரு
அகதிமு காமையும் அமைத்திருந் ததனால்
செல்வதற் கங்கே மாற்றம் கேட்டதும்
வசதியென் றேஇனி அவ்விடம் கிடைத்தது

ஆயினும் அங்கும் அல்லலில் ஆவதை
அங்குசென் றதுமுதல் அறிந்திடத் துவங்கினர்
போயிருந் தொருசில நாட்களுக் குள்ளும்
துப்பாக்கி முனையிலே மலைக்குக் கொணர்ந்தனர்

அங்கோ தரையிலே இருந்திடச் செய்தனர்
எவன்தான் புலியெனப் பரிசோ தித்தனர்
தங்கிடச் சென்று தஞ்சம டைந்ததில்
சங்கடம், இவரையும் கைது செய்தனர்

இவர்கள் பதினொரு பேர்களும் கைதிகள்
புலிகளே என்றுதான் இன்னமும் நம்பினர்
இவர்களின் இந்நிலை சட்டியி லிருந்து
அடுப்பினில் விழுந்த அதோகதி யானதே

எங்குசென் றாலுமே இருந்திட முடியா
என்னவென் றாலுமே நடந்திட முடியும்
தங்குதல் எங்குமே பாதுகாப் பில்லையாய்
மங்குதே வாழ்விதே என்றுதான் ஏங்கினர்

8ஆம் பக்கத் தொடர்ச்சி

பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலாநாதன் மற்றும் பலர் அங்கம் வகித்திருந்தனர். அரசியல் தீர்வு என்பதற்காக இன்னுமொரு குழு அமைக்கவும் ஒப்புக்கொண்டார்கள். இதில் தலைவர் சம்பந்தன் தலைமையில் சட்ட நிபுணத்துவம் கொண்டவர்களையும் இணைத்து அமைத்தோம். நாங்கள் அமெரிக்கா மற்றும் கனடா, லண்டனுக்கு சென்றபோது பல்வேறு குழப்பங்களும் பல்வேறு சந்தேக நிலைகளும் அரசாங்கத்தின் புலனாய்வுப் பிரிவால் திட்டமிட்ட வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட, பொய்ப் பிரசாரங்கள் தமிழ் மக்களை நிலைகுலைய வைக்கவில்லை. அவர்கள் தெளிவாகவே இருந்தனர். வெளிநாடுகளில் வாழும் மக்களும் அங்குள்ள அமைப்புகளும் வட்டுக்கோட்டை தீர்மானம் உங்களால்தானே எடுக்கப்பட்டது. ஆனால், நீங்கள் அரசாங்கத்துடன் பேசிக்கொண்டிருக கின்றீர்கள் என்று கேள்வியெழுப்புகின்றனர்.

இந்த நாட்டிலே பேசுகின்றவர்கள், குழம்பியிருப்பவர்கள் யாராகவிருந்தாலும் வேட்புமனுவைத் தாக்கல் செய்து வெற்றிபெற்றதன் பின்னர் பாராளுமன்றத்துக்கு சென்று சத்தியப் பிரமாணம் செய்வது வழக்கம். அங்கு கடமையை பொறுப்பேற்ற பின்னர் அந்த அரசியல் அமைப்பை எங்கள் கையால் எரிக்கும் வழக்கம் கூட எம்மிடம் இருக்கின்றது. இலங்கை பாராளுமன்றத்துக்கு உள்ளேயே மகாராணிக்கு எதிராக போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. அந்த வரலாறுகளை எடுத்துக்காட்டினோம். தற்போது வேட்புமனுவைத் தாக்கல் செய்கின்றபோதே நாங்கள் தமிழீழத்தை கோரமாட்டேன் நாட்டைப் பிரிக்கமாட்டேன் அதற்கு உதவியாக இருக்கமாட்டேன் என சத்தியப்பிரமாணம் செய்துவிட்டுதான் தேர்தலில் போட்டியிட வேண்டும். இன்று இந்த விமர்சனங்களைச் செய்கின்றவர்கள் இதனை மறுக்க முடியுமா. வெளியிலே தமிழீழத்தை பேசுவதற்கு யாரும் ஆயத்தமாகயில்லை. அதனை உச்சரிப்பதற்கு யாரும் ஆயத்தமாக இல்லை. அரசாங்கம் அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆராய்ந்துகொண்டிருக்கின்றது. வெளிநாட்டிலே நாங்கள் பேசுகின்ற பேச்சுகளைப் பார்த்து இங்கு தீவிரவாதிகள் குரல்கொடுத்தார்கள். இங்கு நாங்கள் வருகின்றபோது கைது செய்யப்பட வேண்டும். விசாரணை செய்யப்பட வேண்டும் என்று குரல்கொடுத்தார்கள். எங்கள் கட்சியைத் தடை செய்வதற்கு அரசாங்கம் காத்துக் கொண்டிருக்கின்றது. இந்த மக்களோடு நாங்கள் ஒன்றாக இயங்குவதை அவர்கள் விரும்பவில்லை. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் நாங்கள் புறக்கணிக்கப்படுகின்றோம். வெளிநாட்டு அரசுகள் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கு என்று உதவ வந்தாலும் அதை தாங்கள் செய்தது போன்று வெளிக்காட்டி எங்களைப் புறக்கணிக்கப் பார்க்கின்றார்கள்.

அரசியல் தீர்வில் கூட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஊடாக இந்த மக்களுக்கு நன்மை பெற்றுவிடக்கூடாது என்று எங்களை இழுத்தடித்து மக்களை வெறுப்படையச் செய்து எங்களை ஒரு பயனற்றவர்கள் என்று காட்டிக்கொள்வதற்கும் எங்களால் தான் செய்ய முடியும் என்று மக்களுக்கு ஏதாவது ஒரு துண்டைப் போட்டு ஏமாற்றுவதற்கு ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை வகுத்து எங்களுக்கு எதிராக செயற்படுவதைத் தான் அண்மைய செய்திகள் காட்டி நிற்கின்றன.

சில தினங்களுக்கு முன்னர் காணி அதிகாரம் கொடுக்கமாட்டோம், பொலிஸ் அதிகாரம் கொடுக்கமாட்டோம் என்று கூக்குரலிட்டவர்கள். இன்று வெளிவரும் செய்திகளைப் பார்த்தால் தெரியும் அதனைப் பற்றி பேசவும் தயார் என்று கூறுகின்றனர்.

இன்று நடப்பது ஜனநாயக போர் என்பதற்கு அடுத்தபடியாக ஆயுதப போராட்டம் அல்ல இராஜதந்திர போர் எங்கள் மண்ணிலே டைபெற்றுக் கொண்டிருப்பதை எல்லோரும் உணர்ந்துகொள்ள வேண்டும். அதனது விளைவுகள்தான் அரசாங்கத்தை இன்று அச்சுறுத்தி நிற்கின்றன. ஐ.நா. செயலாளரும் ஜனாதிபதியும் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி போர் முடிவடைந்ததாக அரசாங்கம் அறிவித்ததன் பின்னர் கொழும்பில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி ஒரு கூட்டறிக்கை விட்டார்கள்.

ஜனநாயக விழுமியங்கள் ஜனநாயக அடிப்படை உரிமைகள் பேணப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும் என்பது முதலாவது சாராம்சம். மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் காக்கப்பட வேண்டும். அதன் மீறல்கள் தொடர்பில் விசாரிக்கப்பட வேண்டும். இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இன்று சர்வதேச அரங்கிலே நிபுணத்துவம் மிக்கவர்கள். இராஜதந்திரிகள் போர்க்குற்றம் என்ற குற்றச் சுமத்தலோடு அரசாங்கம் பதில் சொல்லும் கடப்பாடு உடையது என்பதை நிரூபித்து அன்றும் இதேபோன்ற கடப்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இன்று ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் அதன் குழுவினால் இந்த அரசுக்கு எதிராக சொல்லப்பட்டுள்ள போர்க்குற்றம் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலே மிக தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில்தான் இன்று அரசாங்கம் எம்முடன் பேச்சுநடத்த முன்வந்துள்ளது. அந்த போர்க் குற்றத்தில் இருந்துதப்பிப்பதற்குத் தான் இந்த இனப்பிரச்சினை தொடர்பில் ஏதாவது நடவடிக்கையெடுக்காவிட்டால் தனது நிலைமை மோசமாகிவிடும் என்பதற்காகத்தான் இந்த அரசாங்கம் காய்களை நகர்த்திக்கொண்டிருக்கின்றது.

நாங்களும் சர்வதேச இராஜதந்திரிகளும் போர்க்குற்றம் சுமத்துவது மட்டுமல்ல அதற்கு ஈடாக இந்த நாட்டிலே இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கும் இருக்கும் சந்தர்ப்பத்தை நாங்கள் மிக கவனமாகக் கையாள வேண்டிய நிலையில் உள்ளோம்.

இரண்டுக்கும் ஒரு தொடர்பு இருக்கின்றது. அமெரிக்கா, கனடா, லண்டன் ஆகிய வெளியுறவுத்துறை அமைச்சகத்தில் இந்த போர்க்குற்றம் தொடர்பில் உங்கள் கருத்து என்ன என்பதை அறிய ஆவலுடன் இருந்தனர். இனப்பிரச்சினையின் தீர்வு எந்தளவுக்கு செல்கின்றது என்பதை அறிய அவர்கள் ஆர்வம் காட்டினார்கள்.

இங்கே கற்றுக்குட்டிகளாக ஒரு இலட்சியத்துக்காக போரிட்டவர்கள். துப்பாக்கிகளை அரசின் காலடியில் வைத்துவிட்டு ஏதோ முதலமைச்சராக வந்துவிட்டோம் என்று கொடி கட்டி பறப்பவர்கள் சம்பந்தனை விமர்சிக்கின்றனர். அவரின் அறிவு, ஆற்றல் அவர்களுக்கு புரியவில்லை. அமெரிக்க இராஜாங்க அமைச்சிலே கொள்கை வகுப்பாளர்களுக்கு மத்தியிலே நாங்களே ஆச்சரியப்படும் வகையில் ஆணித்தரமாக அவர் கருத்துக்களை தெரிவித்தார்.

போர்க்குற்றம் தொடர்பான அறிக்கை வெளியானதும் இந்த நாட்டிலே ஒரேயொரு அரசியல் கட்சியாக தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தான் அந்த அறிக்கையினை வரவேற்றது என்பதை யாரும் மறந்திருக்கமாட்டார்கள்.

விரைவிலேயே இந்திய வெளியுறவு அமைச்சர், செயலாளர்கள் வருகை தர இருக்கிறார்கள். அதற்கிடையில் தான் அரசாங்கம் தாங்கள் பேசுவதற்கு ஆயத்தம் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். (6ஆம் பக்கம் பார்க்க)

பேச்சு காத்திரமாக நகர இந்தியா இலங்கைக்கு அழுத்தம் தரட்டும்

கிருஷ்ணாவிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையிலான பேச்சுக்களை ஆரம்பிக்க இந்தியாதான் காரணகர்த்தாவாக இருந்தது. ஆகவே பேச்சு சரியான தடத்தில் போகவேண்டுமாயின் இந்தியா தனது காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும். இலங்கை அரசு உணரக்கூடிய வகையில் இந்தியாவின் அழுத்தம் இருந்தால்தான் கொழும்பு ஆட்சியாளர்கள் தீர்வு ஒன்றை காண இணங்கி வருவார்கள். இல்லாவிடின் இந்தப் பேச்சால் எதுவித பயனும் இல்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கு எடுத்துச் சொல்லப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கும் இடையிலான சந்திப்பு ஞாயிறு இரவு 8 மணி முதல் 8.45 வரை இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம். ஏ.சுமந்திரன், பொன்.செல்வராசா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்குபற்றினர். இந்தியத் தரப்பில் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக்.கே.காந்தா மற்றும் பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் இந்தியாவுக்கு கூட்டமைப்பு தெரிவித்தவை வருமாறு:

எமக்கும் அரசுக்கும் இடையில் ஒரு வருட காலமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் பேச்சுவார்த்தை ஒரு அங்குலமும் நகரவில்லை. இலங்கை ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சரும் இந்திய அரசுக்கு பல உறுதி மொழிகள் வழங்கியபோதும் அவை எதுவும் காப்பாற்றப்படவில்லை. 13 ஆவது திருத்தத்தை தாண்டி அதிகாரங்கள் பகிரப்படலாம் என்று தெரிவித்தவர்கள் இப்போது, 13 ஆவது திருத்தத்தை விட குறைவான அதிகாரங்களைக்கூட பகிர தயாராக இல்லை.

13 ஆவது திருத்தத்தையும் தாண்டிய அதிகாரத்தையும் தமிழர்களுக்கு பகிர்வதாக உங்களுக்கு, இலங்கை ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சரும் தந்த உறுதி மொழிகள் எவையும் காப்பாற்றப்படவில்லை. மாறாக 13ஆவது திருத்தத்தைவிட குறைந்த அதிகாரத்தை பகிர்வதற்குக் கூட தயாராக அவர்கள் இல்லை எனவே பேச்சு இப்படியே போக முடியாது. தமிழ் மக்கள் இந்தப் பேச்சு தொடர்பில் எங்களிடம் கேள்வி கேட்கத் தொடங்கியுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு நம்பிக்கையீனம் ஏற்பட்டால் இந்தப் பேச்சைத் தொடர்ந்து நடத்த முடியாது.

பேச்சு தொடர்பான சிக்கல் தீராவிடின் தமிழ் மக்களுக்கான பிரச்சினையும் தீராது. இந்தியாவினது பிரச்சினையும் தீராது. ஆகவே தமிழ் மக்களின் நலன் கருதி இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு இந்தியா காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, இலங்கை அரசை பொறுப்புக் கூறும் கடமையிலிருந்து பாதுகாத்திருக்கின்றது. இறுதிக் கட்ட போரில் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இது தொடர்பான விசாரணைக்கு அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

வெளிப்படையானதும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கக் கூடியதுமான விசாரணை ஒன்று உருவாக்கப்படவேண்டும். உண்மைகள் கண்டறியப்பட்டால் மாத்திரமே இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு ஏற்படும். அதன் மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். இந்த விடயங்களை இந்திய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதியும் சரி மற்றும் அமைச்சர்களும் சரி "வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற முடியாது. மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது" என்று நாடாளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் கூறிவருகின்றனர். இவ்வாறான அதிகாரங்கள் இல்லாமல் எவ்வாறு மாகாண சபையை நடத்துவது? இந்தியாவில் மாகாணங்களுக்கு இதனைவிட அதிகளவான அதிகாரங்களை வழங்கியுள்ளீர்கள். ஆனால் அதனைவிட குறைவான அதிகாரங் களைக் கேட்டால்கூட தரமுடியாது என்கிறார்கள்.

மேலும் நீங்கள் முன்னர் பயணம் செய்தபோது இருந்த கள நிலைமைகள்தான் இப்போதும் வடக்கில் இருக்கின்றன. இராணுவ ஆக்கிரமிப்பு, சிங்கள குடியேற்றம், உயர்பாதுகாப்பு வலயம், தமிழ் மக்கள் இன்னும் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படாமை போன்றவை தொடர்கின்றன.

இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் தாம் பிரச்சினைகளை முன்வைத்தார்கள் என சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் தொடர்பாக தான் இலங்கை அரசுடன் கலந்துரையாடுவார் எனக் கிருஷ்ணா தெரிவித்தார் எனவும் அவர் மேலும் கூறினார்.

முல்லைத்தீவில் தமிழர்களுக்குச் சொந்தமான 1500 ஏக்கர் விவசாய நிலம் படையினரால் ஆக்கிரமிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லையோர கிராமங்களில் பொதுமக்களுக்குச் சொந்தமான 1500 ஏக்கர் வரையான விவசாய நிலம் அரசாங்கத்தினாலும் படையினராலும் திட்டமிடப்பட்ட வகையில் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாக கவலை தெரிவித்துள்ள அப்பகுதி மக்கள், அடுத்த இரு வருடங்களில் எல்லையோர கிராமங்களிலிருந்து தமிழ் மக்கள் துரத்தப்படும் அபாயம் உள்ளதாகவும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

மாவட்டத்தின் எல்லையோர கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருணாற்றுக்கேணி ஆகிய கிராமங்களுக்குச் சொந்தமான மேற்படி விவசாய நிலங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை என்ற காரணத்தை கூறி மக்கள் தமது சொந்த நிலங்களுக்குச் செல்வதற்கான அனுமதியை படையினர் தொடர்ந்தும் மறுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் ஆராய்வதற்கென கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவைசேனாதிராசா மற்றும் சி.சிறிதரன் ஆகியோர் இந்தப் பகுதிக்குச் சென்றிருந்தபோது இது குறித்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அந்த மக்கள் சுட்டிக்காட்டினர்.

இது குறித்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அந்த மக்கள் மேலும் தெரிவிக்கையில், ஆமையன்குளம், உத்தராயன்குளம், அடையக்கறுத்தாள், பூவமடுக்கண்டல், எரிஞ்சகாடு, நாய்க்கடிச்ச முறிப்பு, தட்டாமலை, சகலாத்து வெளி, சுவந்தா முறிப்பு ஆகிய பகுதிகளில் பொது மக்களுக்குச் சொந்தமான சுமார் 1500 ஏக்கர் வரையான நிலம் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் இருந்து வருகின்றது.

இந்நிலையில் யுத்தத்தின் பின்னர் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தமக்குச் சொந்தமான நிலங்களில் விவசாயத்தை மேற்கொள்ள முயற்சித்தபோதும், இதற்கான அனுமதியை படையினர் தொடர்ந்தும் மறுத்து வருகின்றனர். குறிப்பாக இந்தப் பகுதிக்கு செல்வதற்கு கொக்கிளாய் ஆற்றைக் கடந்தே செல்லவேண்டியிருக்கின்றது. இந்நிலையில் இந்த ஆற்றை தமிழர்கள் கடப்பதற்குப் படையினர் அனுமதி மறுத்துள்ளனர். காரணம் கேட்டால், கண்ணிவெடிகள் அற்றப்படவில்லை என தெரிவிக்கின்றனர். இதனால் நிலங்களுக்கான ஆவணங்களை கொண்டிருக்கின்ற மக்கள் தமது சொந்தக் காணிகளை சென்று பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கின்றது. இதேபோல், மீளக்குடியேற்றம் செய்யப்பட்டு பல மாதங்களாகின்றபோதும் வாழ்வாதார நிலைகள் மேம்பாடு காணப்படாத நிலையில் மக்கள் வறுமையின் பிடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த நிலை தொடருமானால் அடுத்த இரு வருடங்களுக்குள் தமிழர்கள் தமது சொந்த இடங்களை விட்டு தொழிலுக்காகவும் தமது குடும்பங்களை பாதுகாப்பதற்காகவும், இடம்பெயர்ந்து மாற்றிடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கும்.

இதேபோல், தமிழர்களுக்குச் சொந்தமான நிலத்தில் அத்துமீறிய வகையில், சிங்கள மக்கள் விவசாயம் செய்து வருகின்றனர். மிகவும் வசதிகளுடனும் அதிக பாதுகாப்புடனும் அவர்கள் விவசாய நடவடிக்கையினை மேற்கொள்கிறார்கள். எனவே அவர்கள் அங்கிருந்து விலகிச் செல்வார்கள் என நாம் நம்பவில்லை, குறிப்பாக கொக்கிளாய் முகத்துவாரம் பகுதி எவ்வாறு சிங்கள, முஸ்லிம் மீனவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றதோ, அவ்வாறான நிலை தமிழர்களுக்குச் சொந்தமான இந்த விவசாய நிலங்களிலும் ஏற்பட்டிருக்கின்றது.

அந்தப் பகுதிகள் சிங்கள மக்களுக்கு அரசாங்கத்தினாலும், படையினராலும் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதனாலேயே அந்தப் பகுதிக்கு மக்கள் செல்வதற்கான அனுமதியை படையினர் மறுத்து வருகின்றனர்.

படையினர் சொல்வதைப் போன்று அங்கு கண்ணிவெடிகள் எவையும் கிடையாது. எனவே இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வலியுறுத்திக் கேட்டனர். தொடரும் நில அபகரிப்பை தடுத்து நிறுத்துமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் சம்மந்தப்பட்டவர்களுடன் பேசி உரிய தீர்வு காணப்படும். மேலும் மக்கள் தமது காணிகளுக்கான ஆவணங்களை பார்த்து வைத்திருக்குமாறும், எக்காரணத்தைக் கொண்டும் தமது நிலங்களை விட்டு வெளியேற வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டனர்

அபிராமி கேற்றறிங்
மணம், சுவை கொண்ட உணவுவை தயார் செய்து விநியோகிப்பவர்கள்
2619 Eglinton Ave. E
(Brimley & Midland)
TEL: 416-266-5372

உதயாஸ் சுப்பர் மார்க்கட்
இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட்கள், உடன் மரக்கறி வகைகள், பால், பழ வகைகள், இறைச்சி, கடலுணவு வகைகள்.
5010 STEELES AVENUE WEST, #14, ETOBICOKE ONTARIO (Kipling & Steeles)
TEL:416-740-7971

காரைநகர்ச் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள www.karainews.com

கதிரைகள் வாடகைக்கு அழையுங்கள்
416-751-2022

விஜய் ரேக் - அவுட் & கேற்றறிங்
$25க்குமேல் கொள்வனவு செய்வோருக்கு 2Lb அவித்த கோதுமை மா இலவசம்
பாலப்பம் இங்கே கிடைக்கும்
130 Westmore Drive #13
Finch & Hwy 27, Etobicoke
Tel: 416-742-8717

VNN
HAPPY MOVERS & TRANSPORTATION
Toronto - Montreal - Ottawa
Local Pick -up and Delivery
Residential and Offices Moving
Selvam 416-450-5902
Raj 416-568-0686
Nirosan 905-760-2324

கனடா-காரை கலாச்சார மன்றத்தின் உப அமைப்பான
காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்
(காரை.இந்துக்கல்லூரி)
பழைய மாணவர் சங்கம்-கனடா

அமைப்புப் பொதுக் கூட்டம்

இடம்: செல்வச் சந்நிதி முருகன் கோயில் திருமண மண்டபம்
1, Goldengate Court Unit # 1 Scarborough (Brimley&Ellesmere).
காலம்: 28-01-2012 சனிக்கிழமை பிற்பகல் 2.30மணி

அன்னை மடியென எம்மையெல்லாம் சுமந்து இந்த உலகினை அறியச் செய்த எம் கல்லூரியின் மீது எமது விசுவாசத்தையும் நன்றியையும் வெளிப்படுத்தும் வகையிலும் நூற்றாண்டிற்கு மேற்பட்ட பழமையும் பாரம்பரியமும் பெருமையும் மிக்க கல்லூரியின் வளர்ச்சிப் பணிகளை முன்னெடுக்கக்கூடிய நிர்வாகம் ஒன்றினை தெரிவு செய்யவும்பழையமாணவர்கள் முன்னைநாள் ஆசிரியர்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டு ஊக்கிவிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கனக.சிவகுமாரன்
இணைப்பாளர் 416 285 4041
கனடா-காரை கலாச்சார மன்றம் 416 642 4912

நடிகர் நடிகைகள் தேவை

நாகு என்கிற படத்தில் நடிப்பதற்கு நடிகர் நடிகைகள் தேவை
www.himabya international.com
தொடர்புகளுக்கு: இந்திரன் 9841981740
Udaya Canada 647 760 5013

CLASSES FOR ALL AGES

அனைத்து வகுப்பினருக்குமான
கணணி, கிற்றார் வகுப்புகள்
தொடர்புகளுக்கு: 416-834-3460

23 ஆம் பக்கத் தொடர்ச்சி

எலிஸபெத் மகாராணியார் அவநம்பிக்கையை அடைந்திருந்ததாக எலிஸபெத் மகாராணியார் தொடர்பான புதிய சுயசரிதை நூல் தெரிவிக்கிறது.
முன்னாள் பேராயரான சால்லி பெடெல் ஸ்மித்தால் எழுதப்பட்ட 'எலிஸபெத் த குயீன்' என்ற புத்தகத்திலேயே மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டயானாவுடனான உறவில் விரிசல் கண்டு கமீலா மீது இளவரசர் சார்ள்ஸ் காதல் கொண்டமையானது, அவரது எதிர்காலத்தையே நாசமாக்கிவிடும் என எலிஸபெத் மகாராணியார் அச்சங் கொண்டிருந்துள்ளார்.

1936 ஆம் ஆண்டு எட்டாம் எட்வேர்ட் மன்னர் வல்லிஸ் சிம்ஸனை மணப்பதற்காக ஆட்சியை கைவிட நேர்ந்தது போன்று தனது மகனான சார்ள்ஸும் ஆட்சிக்குரிய வாரிசு என்ற நிலையை இழக்க நேரிடலாம் என மகாராணியார் கவலை கொண்டிருந்ததாக மேற்படி புத்தகம் கூறுகிறது.

அரச குடும்பத்தினருக்கு நெருக்கமான உறவினர்கள், நண்பர்கள், அரசியல்வாதிகள் உட்பட 200 பேரின் பேட்டிகளை அடிப்படையாக வைத்தே இந்த சுயசரிதை நூல் எழுதப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு அடிபணிந்தது ஜப்பான் ஈரானுக்கு மீண்டும் சறுக்கல்

அமெரிக்காவின் வார்த்தைக்கு அடிபணிந்த ஜப்பான் ஈரானிலிருந்தான எண்ணெய் இறக்குமதியைக் குறைத்துக்கொள்வதாக அறிவித்துள்ளது. அமெரிக்க திறைசேரியின் செயலாளர் திமோதி எப்.கீத்னரின் ஜப்பானுக்கான விஜயத்தின் பின்னரே அந்நாட்டு மத்திய வங்கியின் அதிகாரிகள் இம்முடிவை எடுத்துள்ளதாகத் தெரிகின்றது. ஜப்பான் தனது எண்ணெய்க்கான தேவையில் 10 வீதத்தை ஈரானிலிருந்தே இறக்குமதி செய்கின்றது.இதேவேளை ஐரோப்பிய நாடுகளுக்கான ஈரானின் எண்ணெய் இறக்குமதி மீது ஐரோப்பிய ஒன்றியம் விரைவில் தடை விதிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஈரான் மீதான பொருளாதாரத்
4 ஆம் பக்கத் தொடர்ச்சி
தடையினை விரிவுபடுத்தி அதனை தனிமைப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா தீவிரமாக இறங்கியுள்ளதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதன் ஓர் அங்கமாகவே ஜப்பானை இம்முடிவை மேற்கொள்ள அமெரிக்கா வலியுறுத்தியுள்ளதுடன் அதில் வெற்றியும் கண்டுள்ளதாகத் தெரிகின்றது. அத்துடன் அமெரிக்க திறைசேரியின் பிரதிச்செயலாளர் நீல் வோலின் இதே நோக்கத்திற்காகவே பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் அமெரிக்காவின் இதே கோரிக்கையினை சீனா ஏற்க மறுத்துள்ளது.

ஈரானின் யுரேனிய செறிவாக்கல் நடவடிக்கையானது நீண்டகாலமாக மேற்குலக நாடுகளின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் நடைபெற்று வருகின்றது. எனினும் தமது மின்சாரம் மற்றும் மருத்துவ தேவைகளுக்காகவே யுரேனிய செறிவாக்கல் நடவடிக்கையை மேற்கொண்டுவருவதாக ஈரான் தெரிவிக்கின்றது. இதற்கு தமது எதிர்ப்பினை வெளியிடும் முகமாக ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன ஈரானின் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தியுள்ளன.

இவை மட்டுமன்றி சர்வதேச நிறுவனங்கள் ஈரானில் முதலிடுவதையும், நிதி நிறுவனங்கள் எவ்வித தொடர்புகளையும் பேணாத வண்ணம் ஈரானை முடக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கனடாவில் மாணவர் கருத்தரங்கில் தொற்றுநோய் பரவியது

கனடாவில் விக்டோரியா மாநிலத்தில் மாணவப் பத்திரிகையாளர் நடத்திய கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களுக்குத் திடீரென்று தொற்றுநோய் தாக்கியது. இதனால் தாக்குதலுக்கு உள்ளானவர்கள் தத்தம் அறைகளிலேயே தங்கியிருக்குமாறு தனிமைப்படுத்தப்பட்டனர்.

இவர்களுக்கு வாந்தி, வயிற்றுப்போக்கு, தலைவலி மற்றும் தசையிறுக்கம் ஏற்பட்டது.கனடாவில் பல்கலைக்கழக ஆண்டுக் கருத்தரங்கு (ரேஞர்), ஹார்பர் டவர்ஸ் உணவுவிடுதியில் நடந்தது. இதில் கலந்து கொண்ட 360 பேரில் 60 பேருக்கு நோய்த்தொற்று ஏற்பட்டது. ஊடீஊசெய்திக்கு எம்மா கோட்மேர் தெரிவித்தார். இவரும் பேராளராக வந்து நோய்த்தொற்றுக்கு ஆளானார். மருத்துவர்கள் உணவுவிடுதிக்கு வந்து சிகிச்சை அளிக்கின்றனர்.

செயிண்ட் தாமஸ் பல்கலைக்கழகத்தின் மாணவப் பத்திரிகையாளரான லாரா பிரௌன் அங்கிருந்து வந்த பத்துப்பேரில் ஐந்துபேருக்கு வைரஸ் தாக்குதல் ஏற்பட்டதாகக் கூறினார். இந்த நோய் விரைவாகப் பரவும் என்பதால் அறையிலேயே தங்கியிருக்குமாறு மருத்துவர்கள் கூறியுள்ளனர். இதனால் தங்கும் செலவு மாணவருக்கு அதிகரித்துள்ளது.

உணவு விடுதியில் சாப்பிட்ட பிறகு விக்டோரியா பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சிக்காக பேராளர்கள் அனைவரும் பேருந்தில் வந்தனர். பேருந்திலேயே சிலருக்கு மயக்கம் ஏற்பட்டது. உடனே அவர்கள் அந்த நிகழ்ச்சிக்குப் செல்வதை ரத்துத் செய்தனர். மருத்துவ சிகிச்சையைப் பெற்றனர்.

விக்டோரியாவில் 74ஆவது பல்கலைக்கழக மாணவர்கள் கருத்தரங்கு கடந்த புதனன்று தொடங்கி சனியன்று நிறைவு பெற்றது. இக்கருத்தரங்கை விக்டோரியப் பல்கலைக்கழகத்தின் மாணவப் பத்திரிகையான மார்ட்லெட்டும் காமோசும் கல்லூரியின் மாணவப் பத்திரிகையான நெக்ஸசும் நடத்தின.

இந்தியா-மியான்மர் இடையே பேச்சுவார்த்தை விரைவில் தொடக்கம்

இந்தியா-மியான்மர் இடையே உள்துறை அமைச்சக மட்டத்திலான பேச்சுவார்த்தை வருகிற 19ம் திகதி தொடங்க உள்ளது. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான இமாச்சல பிரதேசம், நாகலாந்து, மணிப்பூர், மிசோரம் ஆகிய மாநிலங்கள் மொத்தம் 1640 கி.மீ. தொலைவில் மியான்மர் வரை பரவி உள்ளன.

இப்பகுதிகளில் போதைமருந்து கடத்தல், ஆயுதம் கடத்தல் உட்பட சமூகவிரோத செயல்களும், பயங்கரவாத செயல்களும் ஏற்படுவதாக புகார் எழுந்தது. மேலும் இந்தியாவில் செயற்பட்டுவரும் உல்பா, எம்.எஸ்.சி.என் எனப்படும் நாகா பிரிவு ஆகிய பயங்கரவாத அமைப்புகளுக்கும் கடத்தல் புகாரில் தொடர்பு இருப்பதாக கூறப்படுகிறது.

KUMAR Learning Centre

1085 Bellamy Road, Scarborough
Bellamy & Ellesmere

Brimley & Eglinton
அபிராமி கேற்ரறிங்கிற்கு மேல்

ALL GRADES
- MATH
- SCIENCE
- ENGLISH
- CHEMISTRY
- BIOLOGY
- PHYSICS
- UNIVERSITY CALCULUS

Contact:
Kumar Nagarajah
B.Sc, M.Sc, PGDCA, B.Ed (Canada)
Ontario College of Teachers
Certified High School Math Teacher
Tel: 647-340-8625
Cell: 416-318-3950

ACCOUNTING & TAX SERVICES

- Specialized in Business Accounting
- Specialized in Business TAX
- Specialized in Incorporation of Business
- Bookkeeping
- Payroll
- HST
- Financial Statement preparation
- Business combination & reorganisation

CALL: THIRU NATHAN
416-568-7223

சம்புவே கேளாய். ஜலந்தனில் மீனை நம்பி வம்புறு வடையைப் போட்டு வானத்தை பார்ப்பதேனே - விவேக சிந்தாமணி

மரண அறிவித்தல்கள்

திருமதி மனோன்மணிதேவி பவானந்தன்

பருத்தித்துறை விநாயகமுதலியார் தெருவைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு சிவசக்தி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணிதேவி பவானந்தன் 14.01.2012 சனிக்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் (16.01.2012) திங்கட்கிழமை நடைபெற்றது

நித்தியானந்தசர்மா சரோஜினிதேவி

உடுவில் கற்பக்குணப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், சங்குவேலி, சிவஞானப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட நித்தியானந்தசர்மா சரோஜினிதேவி (16.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் (17.01.2012) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஜெயானந்தம் வசந்தராணி

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், நல்லூர் மூத்த விநாயகர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட ஜெயானந்தம் வசந்தராணி (14.01.2012) சனிக்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் (17.01.2012) செவ்வாய்கிழமை நடைபெற்றது.

கனகராயர் சிவபாலன் (துரை)

(இளைப்பாறிய கணக்காளர், CTB கோண்டாவில்)

அம்பனைச் சந்தி, பன்னாலை, தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகராயர் சிவபாலன் (16.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் (17.01.2012) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கமலாதேவி (மணி) புஸ்பராசா

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி புஸ்பராசா கடந்த 09.01.2012 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இறுதிக்கிரியைகள் 18.01.2012 புதன்கிழமை நடைபெற்றது.

திருமதி முருகேசபிள்ளை அன்னம்மா

இளவாலை, விளானைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசபிள்ளை அன்னம்மா (16.01.2012) திங்கட்கிழமை காலமானார்

இறுதிக்கிரியைகள் (17.01.2012) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இரத்தினம் சின்னமணி

புத்தூர் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சின்னமணி (15.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இளையப்பு முத்துவேலு

நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையப்பு முத்துவேலு நேற்று (15.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2012) திங்கட்கிழமை

சிவபாதம் சிவறஞ்சன்

(சிறைச்சாலை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)

கைதடி நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதம் சிவறஞ்சன் (13.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

இறுதிக் கிரியைகள் (16.01.2012) திங்கட்கிழமை நடைபெற்றது.

திருமதி பூமணி செல்வரெட்ணம்

கரம்பன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் 97, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பூமணி செல்வரெட்ணம் 13.01.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் (16.01.2012) திங்கட்கிழமை நடைபெற்றது.

கந்தையா தாமோதரம்பிள்ளை

யாழ்ப்பாணம், தையிட்டிப்புலத்தை (வித்தகபுரம்) பிறப்பிடமாகவும் நகுலேஸ்வரா வீதி, அளவெட்டி வடக்கு, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தாமோதரம்பிள்ளை நேற்று (15.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் (16.01.2012) திங்கட்கிழமை நடைபெற்றது.

வேலு இராமு

விக்னேஸ்வரா வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலு இராமு 14.01.2012 இயற்கையெய்திவிட்டார்.

இறுதிக்கிரியைகள் (16.01.2012) திங்கட்கிழமை நடைபெற்றது.

கருணாமூர்த்தி நந்தினி

பூந்தோட்டம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட (தும்பி) கருணாமூர்த்தி நந்தினி (15.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலாமாகிவிட்டார்

இறுதிக்கிரியைகள் (16.01.2012) திங்கட்கிழமை நடைபெற்றது.

கனகசபை நடராசா

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் தற்பொழுது நல்லூரில் வசித்தவருமான கனகசபை நடராசா 12012012 வியாழக்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் (16-01-2012) திங்கட்கிழமை நடைபெற்றது.

வேலாயுதர் கோபாலகிருஷ்ணன்

கைதடிமேற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் கோபால கிருஷ்ணன் (14.01.2012) சனிக்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் (16.01.2012) திங்கட்கிழமை நடைபெற்றது.

கந்தையா பொன்னையா

(பிரபல வர்த்தகர்)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னையா நேற்று (13.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

15ஆம் பக்கம் பார்க்க

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

போரிலே நாங்கள் தோற்றுவிட்டோம் தமிழ் மக்களே தோற்றுவிட்டார்கள் அவர்களுடைய குரல் எழக்கூடாது என்று ஒவ்வொரு வீட்டிற்கும் இராணுவம் இருப்பதைப் போல எங்கள் மண் முழுவதும் இராணுவத்தை வைத்துக்கொண்டு நாங்கள் வெற்றிபெற்றுவிட்டோம் என்று தென்னிலங்கைக்கு சொல்லிகொண்டு அங்கிருந்து ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான சிங்கள மக்களை காட்சிப் பொருட்களை பார்ப்பதற்கு அனுப்பு வதைப் போல எங்கள் பகுதிகளுக்கு அனுப்பிக்கொண்டிருக் கின்றார்கள். இராணுவத்தை நாங்கள் திருப்பிப்பெறமாட்டோம் முகாம்களை வைத்திருப்போம் என்று அரசாங்கம் சொல்கிறது. எங்கள் மண்ணிலிருந்து ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை இராணுவம் கைப்பற்றியிருக்கின்றது. இந்த இராணுவத்திற்கு யார் அமைச்சுப் பொறுப்பு கொடுத்தது. எங்கள் தீர்மானங்களில் முதன்மையானது எங்கள் மண்ணிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்பதாகும். எதிர்காலத்தில் நாங்கள் ஒரு இயக்கத்தை வைத்திருப்பதாக இருந்தால் இதுவே அடிப்படையாகும். எமது வழக்கை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு இடைக்கால தீர்ப்பு வழங்கியிருக்கிறது. நாங்கள் அரசுடன் பேச வேண்டும் என்று மக்களிடம் வேண்டுகோள் விடுத்தோமோ அதனடிப்படையில் தான் செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த ஆணையை ஒவ்வொரு தேர்தல் சந்தர்ப்பத்திலும் நாங்கள் பெற்றிருக்கின்றோம். அதற்காக நாங்கள் அரசுக்கு அடிபணிந்துகொண்டு எங்கள் அடிப்படைகளை விட்டுக்கொடுத்து எந்த ஒரு தீர்வுக்கும் செல்ல மாட்டோம்.

நாங்கள் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்க மாகாணத்திற்கு என்ன அதிகாரங்கள் இருக்க வேண்டும் மத்திய அரசுக்கு என்ன அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்பவற்றை மிகத்தெளிவாக சொல்லியிருக்கின்றோம். மத்தியினுடைய அரசு மாகாணத்தினுடைய அரசு தீர்மானிக்கப்பட்ட பல விடயங்களில் தலையிடுவதற்கு இடமிருக்கக்கூடாது. சட்ட ஆக்கத்தில் நிறைவேற்று அதிகாரத்தில் மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் அவரவர் பிரிக்கப்பட்ட விடயங்களிலே நிறைவேற்றுவது சட்டத்தை ஆக்குவதில் அதிகாரம் சமமாக இருக்கிறது. வடக்கு, கிழக்கு இணைந்த மாநிலத்தில் தான் இந்த அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்.

நாங்கள் தனியான ஒரு இனம். எங்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. ஒரு மக்கள் கூட்டத்திற்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்று சர்வதேச சட்டங்கள் சொல்கின்றன. வரலாற்று ரீதியாக ஒரு மொழியை கலாசாரத்தைக் கொண்ட இனம் தொடர்ச்சியாக நிலப்பரப்பைக் கொண்டிருக்கின்ற இனம் சுயநிர்ணய உரிமையைக் கொண்டிருக்கிறது என்று சோவியத் தீர்மானித்தது. எங்களுக்கு இரண்டு அங்கங்கள் பொருத்தமாக இருந்தன. ஒன்று நாங்கள் முன்பு எங்கள் தேசத்தை ஆண்டவர்கள். மீண்டும் ஒருமுறை ஆள விரும்புகிறோம். இறைமை எங்களிடம் திரும்பியிருக்கிறது. அந்த இறைமையைப் பாவித்து எங்கள் மண்ணை ஆள்வதற்கு உரித்து உண்டு என்று சொல்கின்ற தத்துவம். இரண்டாவது சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தின் அடிப்படையில் மனிதனுக்கு மக்கள் கூட்டத்திற்கு இனத்திற்கு தேசிய இனம் என்று வர்ணிக்கக்கூடிய அந்த இனத்திற்கு இருக்கக்கூடிய சுயநிர்ணய உரிமை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தினாலே ஏழு ஆண்டுகள் பரிசீலிக்கப்பட்டு புதிய ஒரு தீர்மானம் உருவாகியிருக்கிறது. சுதந்திரமடைந்த நாட்டிற்குள் ஒரு குடிமகனோ குடிமக்களோ இனமோ பிராந்தியக் குழுவோ அந்த நாட்டின் அரசியல் அமைப்புக்குள் தங்களுக்கு நீதி கிடைக்கவில்லை தங்கள் பிரச்சினைக்கு அவர்கள் தீர்வு காணவில்லை என்று சொல்வார்களானால் உள்நாட்டிலே அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும். அப்படிப் பெறாவிட்டால் சட்டவல்லுநர்களுடன் ஆலோசித்து அரசுக்கும் எங்களுக்குமிடையில் நடக்கின்ற பேச்சுவார்த்தை அர்த்தமுள்ளதாக சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிதாக எங்கள் அடிப்படைகளை விட்டுக்கொடுக்காததாக இருக்கவேணடும்.

22ஆம் பக்கம் பார்க்க

கவிதைப் பெண்ணே!

(செய்யுள் உறுப்பியல்)

பெரும்புலவர் முஹமத் ஹன்ஸீர்

கண்ணே எந்தன் கவிதைப் பெண்ணே
உன்னைக் காணா திருந்திட இயலா
என்னால் ஏதோ என்றிட இருக்குது
உன்மேல் காதல் கடுமை யாகுது

எழுத்து அசைசீர் அடிதொடை தளையென
உறுப்புகள் உன்னை உடலழ காக்குது
பழுத்து இனிக்க நீதரும் இனிமை
இனிக்க வைத்துப் பருகிடத் துடிக்குது

குறில்நெடில் குற்றிய விகர லுகரம்
குறுக்கம் ஆய்தம் உயிர்மெய் உயிரொடு
குறிக்கும் வல்லின மெய்யின இடையின
அளபெடை என்றெலாம் அணிகலன் உன்னதே

அசையும் நேரசை நிறையசை யென்று
இனசந்து கொடுத்து அசைந்து ஆடும்
அசைச்சீர் இயற்சீர் வெண்சீர் வஞ்சி
பொதுச்சீர் என்றுநீர் அசைத்தீர் ஆஹா

நேரொன் நிறையொன் இயற்சீர் வெண்சீர்
ஒன்றிய ஒன்றாக் களித்தலை யென்று
வேறொன் றில்லா எழுவகைத் தளைகளைத்
தாங்கி நிற்கும் பெண்நீ யன்றோ

குறளடி சிந்தடி அளவடி நெடிலடி
கடிநெடி லடியெனும் களிப்புறு அடியுடன்
சிறப்பெனத் தொடைகள் நாட்பத்தி மூன்றை
குறிப்பெனக் கொண்டு கோலம் படைத்தாய்

கவிதைப் பெண்ணே கவிதைப் பெண்ணே!
இடையில் உன்னில் விடைபெறு கின்றேன்
புவியில் நீஎன் நிரந்தரப் பெண்ணே
புவிமறந் தாலும் நான்மறக் கேனே!

புத்திமான் பலவான் ஆவார். பலமுள்ளவன் புத்தி கெட்டால் எங்கனும் இடர் அது வந்தே தீரும். - விவேக சிந்தாமணி

கணபதி கடை

HAIR OIL

Amla Plus	300ml	$3.54
Amla	300ml	$2.99
Amla	200ml	$2.29
Jasmine	200ml	$2.49
Vatika (olive)	300ml	$4.09
Kesavardhini		$4.59
Aswini	200ml	$2.99
Aswini	400ml	$5.49

குரக்கன் மா 900g 99¢

சீயாக்காய் ஷாம்பூ	$4.99
Herbal Shampoo 2 For	$3.50

அவல்	1Lb	69¢
புளி	200g	49¢
புளி	400g	90¢
வெந்தயம்	1Lb	99¢

மோர் மிளகாய்	500g	$1.99
செத்தல் மிளகாய்	1Lb	$2.99

BIGEN HAIR DYE
$1.99

DANA
பஸ்மதி அரிசி 40 Lb
$32.99

நீராவி அமுக்கத்தில்
இட்லி சமைக்கும் யந்திரம்
$25.00

புளி

200g	49¢
400g	99¢

உழுத்தம் மா	$2.99
பயிற்றம் மா	$2.99

புகையில்லாத
கற்பூரம்
$3.49

பருப்பு வகைகள்

மைசூர் பருப்பு 1LB	59¢
உழுந்து	$1.29
முழுப்பயறு	$1.49
குஸ்குஸ்	99¢
துவரம் பருப்பு	$1.49
பாதிப் பயறு	99¢
கடலைப் பருப்பு	69¢
சாம்பார் பருப்பு	99¢
வறுத்த பயற்றம் பருப்பு	79¢

கடலை
ரின்
59¢

BRU COFFEE
$1.99

Sardines
மீன்ரின்
29¢

Rohini
Sampoo
சீயாக்காய்
$4.99

பாக்கர் பேனா
Re Fill
$1.99

சாம்பிராணி

தசாங்கம் (10 கட்டிகள்)	$0.99
சுகந்தி சாம்பிராணி (24 கட்டிகள்)	$1.49
தசாங்கப் பவுடர்	$1.49
உடனடிச் சாம்பிராணி (12 கட்டிகள்)	$1.29
ஸ்ரீ அம்பாள் சாம்பிராணி	$3.99

Wafers
Strowberry,
Chocolate
99¢

ஊதுபத்தி

பத்மினி நீளம் குறைந்த ஊதுபத்தி (12 பொதிகள்)	$0.99
பத்மினி ஊதுபத்தி (6 பொதிகள்)	$4.49
(மூன்று விதமான வாசனை - றோசா, சந்தனம், பக்தி சொட்டும்)	
அபூர்வ ஊதுபத்தி (அதி நீளம் சுடியது)	$3.99
ஓறியென்ரல் சந்தனக் குச்சி (6 பொதிகள்)	$8.99
அம்பாள், சிவசங்கரி (12 பொதிகள்)	$6.99
கீத் கௌரி (12 பொதிகள்)	$6.49
சுதர்சிகா மல்லிகைப்பூ (12பொதிகள்)	$9.99
சத்திய சாயிபாபா நாக் சம்பா ஊதுபத்தி (12 பொதிகள்)	$8.99
3 IN 1 சைக்கிள் ஊதுபத்தி (12 பொதிகள்)	$3.99
வெற்றிலை விநாயகர் ஊதுபத்தி	$9.99
மணிகண்டன் ஊதுபத்தி	$9.99

பரதநாட்டிய அலங்கரிப்புப் பொருட்கள்

PAN CAKE 5.99		(Pink Powder)	
PAN STICK	4.99	Juva Pins (Hair pins)	0.99
ஒட்டியாணம்	19.99	Necklace	14.99
முடிமயிர்	6.99	Jimiki	5.99
முடிமயிர்	8.99	Stud	8.99
முடி (கிரீடம்)	24.99	Step Chutty	6.99
அடுக்குமாலை (தலைக்கு வைப்பது)	7.99	Haram	34.99
		Nose ring	2.99
தலைமாலை	4.99	Chutty	8.99
ஒட்டியாணம்	23.99	Mango Necklace	25.99
முத்துமாலை	9.99	Flower (meter)	4.99
சூரியன், சந்திரன்	6.99	Waist Belt (metal)	2.99
பொட்டு	0.59	Sivan Set	99.99
குஞ்சரம்	10.99	Ring	1.99
சூலம்	9.99	Mixed Flower	2.99
வேல்	8.59	Sweetex வியர்வை ஒற்றி	5.99
Manai	6.99		
Eye Liner	0.99	Ragodi (முத்து)	7.99
Rooge	1.29	Ragodi Round	5.99

2191 WARDEN AVENUE (Warden & Sheppard),SCARBOROUGH
TEL: 416-751-2022

வடக்கு, கிழக்கில் இன்று இராஜதந்திர யுத்தம்

காணி அதிகாரம் கொடுக்கமாட்டோம், பொலிஸ் அதிகாரம் கொடுக்கமாட்டோம் என்று கூக்குரலிட்டவர்கள் இன்று அதனைப்பற்றி பேசவும் தயார் என்று கூறுகின்றனர். இன்று நடப்பது ஜனநாயக போர் என்பதற்கு அடுத்த படியாக ஆயுதப் போராட்டம் அல்ல இராஜதந்திரபோர். இது எங்கள் மண்ணிலே நடைபெற்றுக்கொண்டிருப்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ளவேண்டும். அதனது விளைவுகள்தான் அரசாங்கத்தை இன்று அச்சுறுத்தி எங்களுடன் பேசச் செய்கின்றது என தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனா திராசா தெரிவித்திருக்கின்றார். மட்டக்களப்பில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மாவட்ட குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர்இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்

கடந்த 12 ஆண்டுகளில் இடம்பெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் 60 ஆண்டுகாலமாக தந்தை செல்வாவின் இலட்சியத்தின் கொள்கையை ஏற்றுக்கொண்டு அந்த இலட்சியத்தில் இருந்து தங்கள் மண்ணை தாங்களே ஆள வேண்டும் என்ற உறுதிப்பாட்டோடும் திடசங்கற்பத்தோடும் மீண்டும் நாங்கள் இருக்கின்றோம் என்பதை இறுதியாக நடந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் நிரூபித்துள்ளனர். இந்த இறுதித் தேர்தல் பற்றி கூறவேண்டுமானால் சர்வதேச ரீதியில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் போர்க்குற்றங்கள் இந்த அரசாங்கத்துக்கு எதிராக ஜனாதிபதிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றங்கள் பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னர் ஜனாதிபதி வடக்குக்கு வந்து முகாமிட்டு ஏற்கனவே வடக்கில் நிலைகொண்டிருந்த முப்படை, பொலிஸ் படைகளின் கட்டமைப்புகள் இந்தத் தேர்தல் காலத்தில் வேட்பாளர்களை அரசுக்காக தேடியிருந்தன. எங்களது வேட்பாளர்கள் புலனாய்வுத் துறையினரால் அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்ட நிலை. தேர்தல் தினமான ஜூலை 23 ஆம் திகதிக்கு முன்தினமான 22 ஆம் திகதி இரவு முதல் அதிகாலை வரைக்கும் வீடுவீடாகச் சென்று படையினர் எங்களது மக்களை அரசுக்கு வாக்களிக்க வேண்டும் என்று வற்புறுத்தியதை நீங்கள் அறிவீர்கள்.

ஜனாதிபதி அமைச்சர் பட்டாளத்துடன் வந்து பலகோடி பணம் செலவு செய்து இந்தத் தேர்தலில் தான் எப்படியாவது வெற்றிபெற்றிட வேண்டும் என்று சர்வதேசத்துக்கு வடக்கு தமிழ் மக்கள் என்னை ஆதரிக்கின்றார்கள் என்று காட்டுவதற்கான அவசியம் காரணமாக வெற்றிபெற்றுத்தான் ஆகவேண்டும் என்பதற்காக அனைத்து முயற்சிகளையும் தேர்தல் சட்ட விதிகளை மீறி ஜனநாயக விழுமியங்களை மீறி ஒரு ஜனாதிபதியே நேரடியாக வந்து வெற்றியை பெற முனைந்ததை யாவரும் அறிவர்.

அமைச்சின் செயலாளர்களில் இருந்து கிராம சேவகர் உட்பட பொதுமக்கள் அரசாங்கத்தின் தேர்தல் கூட்டங்களுக்கு ஒருவர் 10 பேரைக் கூட்டிவரவேண்டும் என கட்டளையிட்டிருந்தனர். இவையெல்லாம் நடந்த பிறகு தமிழ் மக்கள் மிகத்தெளிவாக பருத்தித்துறை தொடக்கம் அம்பாறை வரைக்கும் இடம்பெற்ற அத்தனை தேர்தல் களத்திலும் ஒரே தீர்வாக அரசாங்க ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சின்னத்துக்கு அதன் தேர்தல் அறிக்கைக்கு திடசங்கற்பம் பூண்டு வாக்களித்தனர். உலகம் அதனை மெச்சியது. பல நாட்டுத் தலைவர்கள் எங்களுக்கு புகழாரம் சூட்டினர். தந்தை செல்வா கூறினார் கிழக்கு மக்களுக்கு வடக்கு மக்களின் பலத்தைக் கொடுக்க வேண்டும் என்று கூறினார். வடக்கில் இருந்து கிழக்கு பிரிக்கப்பட்ட பின்னரும் தமிழ் அமைச்சர் என்று ஒருவரை முன்னிலைப்படுத்திய பின்னரும் ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளின் அடுத்த தளபதியாக இருந்தவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேச பக்தனாக மாறி அமைச்சராக இருந்தபொழுதிலும் கிழக்கு மக்கள் வடக்கு மக்களுக்கு ஈடாகவும் அதற்கு மேலாகவும் மிகத்தெளிவாகவே ஒவ்வொரு தேர்தலிலும் வாக்களித்துள்ளனர். கிழக்கு மக்கள் அவ்வளவு நம்பிக்கையோடு அவ்வளவு திட சங்கற்பமாக வடக்கு மக்களோடு நாங்கள் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள். நாங்கள் ஒன்றாகத்தான் ஆளுவோம், ஒன்றாகத்தான் வாழுவோம் என்று மிக தெளிவாகவே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். இது கிழக்கு மக்களுக்கு நன்றி சொல்வதற்காக மட்டுமல்ல வடக்கு மக்களுக்கு ஒன்றை உதாரணமாக எடுத்துச் சொன்னேன். கிழக்கு மக்கள் பல்லின மக்களுடன் வாழும் வேளையில் அவர்களுக்கு வடக்கு மக்களின் பலம் குறைந்து சென்றால் அதனால் வடக்கு மக்களுக்கு சொன்னேன் இன்றைக்கு கிழக்கு மக்களின் எழுச்சி அவரகளுடைய திடசங்கற்பம் வடக்கு மக்களுக்கு தேவைப்பட்டிருக்கின்றது என்று அன்றே நான் குறிப்பிட்டுச் சொன்னேன்.

அந்தளவு படித்தவர் பட்டம் பெற்றவர்களே எமது மக்களை குழப்பிக் கொண்டு வந்திருக்கின்றார்கள். தேர்தலிலே நூற்றுக்கணக்காக படித்தவர்கள் பட்டம் பெற்றவர்கள் குவிந்துநின்று போட்டியிட்டுக்காட்டினார்கள். ஆனால், மக்கள் எந்த இடத்திலும் நிலைகுலையாமல் திடசங்கற்பமாக வாக்களித்து வந்துள்ளனர். இந்தியாவின் பிரதமர் எங்களைச் சந்தித்தபோது இத்தனை பேரவலங்களுக்குப் பிறகும் உங்களுடைய மக்கள் உங்களுடன் தான் நிற்கிறார்கள் அதை நான் கருத்திலே கொண்டிருக்கிறேன் எனச் சொன்னார்.

இறுதி உள்ளூராட்சித் தேர்தலிலே ஜனாதிபதி யாழ்ப்பாணத்திலே முகாமிட்டிருந்த போது நாங்கள் ஒரு கருத்தை முன்வைத்தோம். முள்ளிவாய்க்காலிலே போரிலே வெற்றிபெற்றுவிட்டோம் என்ற சிங்கள மக்கள் மத்தியிலே எக்காளமிட்டிருக்கின்ற ஜனாதிபதி தமிழ் மக்களை ஒரு தோல்வி மனப்பான்மைக்குள் சித்தாந்த ரீதியாக உள்ளாக்கிவிட்டு இவர்கள் தோல்வியடைந்துவிட்டார்கள் என்று பிரசாரம் செய்து கொண்டு சிங்கள மக்களை உசுப்பேற்றிக்கொண்டு அந்தத்தொனியோடு தேர்தலிலே வெற்றி பெறுகின்றளவுக்கு இருந்ததை நாங்கள் நினைவுபடுத்தினோம். அமைச்சரவைப் பட்டாளத்தோடு இங்கு வந்து தேர்தலில் எங்களை தோற்கடிக்க வேண்டும் என்று அவர் நினைக்கிறார். எங்களுடைய மக்கள் அவருக்கு சரியான பதிலை வழங்க வேண்டும் அவரைத் தோற்கடிக்க வேண்டும். தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியாக வெற்றி பெற வேண்டும் என்று மக்களிடம் வேண்டுகோள் விடுத்தோம். அரசாங்க ஊழியர்களைப் பற்றி பலர் எங்களுக்கு தவறான அபிப்பிராயங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் விட்டிருந்த கண்ணீர் எங்களுக்குத் தெரியும். வடக்கிலிருந்து கிழக்கு வரை 95 வீதத்திற்கும் மேலான அரசாங்க ஊழியர்கள் எங்களுடைய கட்சிக்காக வாக்களித்திருக்கின்றார்கள். எமது மக்களில் அவர்கள் முக்கியமான அங்கம். அவர்களுக்கு நாங்கள் நன்றி சொல்லியிருந்தோம். நன்றி சொல்வோம். அரசு உங்களை எப்படிப் பயன்படுத்தினாலும் என்ன விலை கொடுத்து எங்கள் மக்களை வாங்க வேண்டும் என்று நினைத்தாலும் எங்கள் மக்கள் ஒரே தாயின் வயிற்றுப்பிள்ளைகளாக இருப்பவர்கள். திடசங்கற்பமாக எங்கள் மண்ணில் நாங்கள் எங்களை ஆள வேண்டும் என்று ஜனநாயக ரீதியாக தங்கள் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றார்கள் என்பதை தெளிவாக மக்களுக்கும் உலகிற்கும் நாங்கள் சொல்லி வந்திருக்கிறோம்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் வன்னியில் இடம்பெற்ற பேரழிவுக்குப் பின் அங்கிருந்து வந்த மக்கள் இராணுவம் சூழ்ந்திருக்க உளவாளிகள் அவர்கள் மத்தியில் நிற்க அந்த முகாம்களுக்கே வந்த மூன்று இலட்சத்து 17 ஆயிரம் பேர் பதிவு செய்யப்பட்டிருக்க, மனிதாபிமானமற்ற முறையில் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களைக் கூட பார்க்க அனுமதிக்காமல் தேர்தல் காலத்தில் கூட அனுமதிக்காத நிலையில் அரசாங்கம் ஜனாதிபதியும் அவர்கள் மத்தியில் பிரசாரம் செய்த போதிலும் தனது கணவனை மனைவியை பிள்ளைகளை இழந்தவர்கள் குடும்பம் குடும்பமாக புதையுண்டு போனதை கண்ணால் கண்டவர்கள், அங்கவீனமானவர்கள் அவர்கள் எல்லோரும் ஜனாதிபதிக்கு எதிராக வாக்களித்தார்கள்.

அதுவும் சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்தார்கள். அந்த மக்கள் எங்கள் மீது பூரண நம்பிக்கை வைத்துள்ளனர். அவர்கள் மீது நாங்கள் விசுவாசமாக இருக்க வேண்டும். அந்த மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அந்த மக்கள் தங்கள் பிரதேசத்திலே வாழவும் ஆளவும் உழைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அரசியல் தீர்வொன்றைக் காண வேண்டியவர்களாக இருக்கின்றோம். நாங்கள் பேச்சுவார்த்தையில் 2010 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி முதலாவது பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டோம். ஆரம்பத்தில் அரசாங்கத்துக்கு எங்களுடன் பேச வேண்டும் என்ற அக்கறை இருக்கவில்லை. நாங்கள் எல்லாம் வென்றுவிட்டோம். எல்லாம் முடிந்துவிட்டது என்ற சிந்தனையைக் கொண்டிருந்தார்கள்.

எனினும் சர்வதேச ரீதியில் இருந்துவந்த அழுத்தங்களினால் அமெரிக்காவின் அழுத்தத்தினால் அதனை விட அதிகமாக இந்தியாவின் நெருக்குதல் காரணமாக அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைக்கு வந்தனர். ஜனாதிபதியுடன் நாங்கள் ஆரம்பத்தில் பேச்சுவார்த்தை நடத்தியபோது இரண்டு குழுக்கள் நியமிக்க அவர் ஏற்றுக்கொண்டார். ஒன்று அன்றாட பிரச்சினையாக இருகக்க் கூடிய எமது மண்ணில் உள்ள இராணுவப் பிரசன்னத்தை எங்களது நிலங்களின் ஆக்கிரமிப்பில் இருந்து அவர்கள் வெளியேற்றப்பட வேண்டுமென்பதற்காக அடுத்து சிறைகளில் நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமென்பதற்காக. போர்க் காலத்தில் போர் முனையில் சரணடைந்தவர்கள் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட வேண்டுமென்பதற்காக இன்றைக்கும் சட்ட பூர்வமற்ற முறையில் ஆயுதங்களைக் கொண்டுள்ள இயக்கங்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைய வேண்டுமென்பதற்காக மீளக்குடியேற்றம் அவர்களது மீள்கட்டமைப்பு, வாழ்வாதாரங்கள் கட்டியெழுப்பப்பட வேண்டுமென்பதற்காக அரசாங்கம் ஒரு பேச்சுவார்த்தைக் குழுவை அமைக்க ஒத்துக்கொண்டது.

3ஆம் பக்கம் பார்க்க

KING COPY
11"x 8.5 COLOUR COPIES
AS LOW AS
29¢
(Per copy)
BINDING
AS LOW AS
$1.50
11x8.5 BLACK & WHITE COPY
AS LOW AS
1.5¢
(Per copy)
1- 500 2¢
5001-1000 1.75¢
1001 and up 1.5¢
TEL: 416-751-2022
2191 Warden Ave. (Warden & Sheppard)

தூணாய் நின்ற தமிழன் துரும்பானதன் காரணம் என்ன?

இந்திய மக்கள்தொகையில் ஏறத்தாழ பதினாறில் ஒரு பங்கு தமிழர்கள் வாழ்ந்தாலும் அவர்களுக் குரீய அங்கீகாரம் என்பது இந்திய அரசியலில் அளிக்கப்படவில்லை. இந்திய அரசும் சரி, அகில இந்திய அரசியல் கட்சிகளும் சரி தமிழர்களின் தலையாய பிரச்சினைகளைக் குறித்துக் கொஞ்சம் கவலைப்படுவதில்லை.

தமிழ்நாட்டின் அண்டை மாநிலங்கள் தமிழகத்திலிருந்து உணவுப்பொருட்கள், துணி, சீமெந்து, மின்சாரம் போன்ற பலவற்றை எவ்விதமான தங்குதடையுமில்லாமல் பெற்றுக்கொள்கின்றன. இயற்கையி லேயே தண்ணீர்ப் பற்றாக்குறையான தமிழகத்துக்குத் தங்களிடம் மிகையாக உள்ள தண்ணீரைக்கூடத் தர அவர்களுக்கு மனமில்லை. பிடிவாதமாக மறுக்கின்றனர்.

இந்திய விடுதலைப் போரில் தமிழகம் செலுத்தியிருக்கிற பங்கு அளப்பரியதாகும். தென்னாபிரிக்காவில் வழக்கறிஞராகப் பணியாற்றிய மோகன் தாஸ் காந்தியின் அறப்போராட்டங்களுக் குத் துணையாக நின்று அவரை மகாத்மா காந்தியாக ஆக்கியவர்கள் தமிழர்கள். அவர் அழைப்பை ஏற்றுச் சிறை புகுந்தவர்களில் பெரும்பாலா னோர் தமிழர்கள். அவர்களில் ஒருத்தி யான தில்லையாடி வள்ளியம்மை தனது உயிரைத் தியாகம் செய்து காந்தி யடிகளின் அறப்போராட்டத்துக்கு முக்கியத்துவத்தை ஏற்படுத்தினார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ராஜாஜி, சத்திய மூர்த்தி, காமராஜ் போன்ற பல தலைவர்களும் எண்ணற்ற தொண்டர் களும் காந்தியடிகளை உளமாறப் பின்பற்றி எண்ணற்ற தியாகங்களைச் செய்தார்கள். அண்ணலின் அழைப்பை யேற்று அறப்போரில் தடியடிக்கு ஆளாகி உயிர்நீத்தான் திருப்பூர்குமரன்.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சிங்கப்பூரில் முதலாவது இந்திய சுதந்திர அரசை நிறுவி, இந்திய தேசிய இராணுவத்தை அமைத்தபோது அவருக்குத் தோள்கொடுத் துத் துணை நின்றவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள்.

முதலாவது சுதந்திர இந்திய அரசு அமைக்கப்பட்டபோது நிதியமைச்சர் பொறுப்பைத் தமிழரான ஆர்.கே.சண்முகம் செட்டியாடம் பிரதமர் நேரு ஒப்படைத்ததைத் தொடர்ந்து, முதலாவது கவர்னர் ஜெனரலாக ராஜாஜி, மத்திய அமைச்சர்களாக டி.டி.கிருஷ்ணமாச்சாயார், ஓ.வி. அளகேசன், ஆர். வெங்கட்ராமன், சி. சுப்பிரமணியம் போன்ற பலர் பெரும் பொறுப்புகள் வகித்துச் சிறப்பாகத் தொண்டாற்றி தமிழகத்துக்குப் பெருமை ஈட்டிக்கொடுத்தார்கள். அவர்களுடன் நமக்குக் கருத்து மாறுபாடு இருக்கலாம். ஆனால், அவர்கள் ஒருபோதும் தமிழுக்கோ, தமிழினத்துக்கோ, தமிழகத் துக்கோ சிறுமை தேடித் தரவில்லை. அகில இந்திய கட்சிகளின் தலைவர்களாகவும் பல தமிழர்கள் சிறந்து விளங்கி னார்கள். காங்கிரஸ் தலைவராகக் காமராஜ், முஸ்லிம் லீக் தலைவராக 'காயிதே மில்லத்' முகமது இஸ்மாயில், பார்வர்ட் பிளாக் கட்சித் தலைவராக உ. முத்துராமலிங்கத்தேவர் மற்றும் பி.கே. மூக்கையாத் தேவர் போன்ற பலர் பொறுப்பு வகித்து அந்த பதவிகளுக்குப் பெருமை தேடித் தந்தார்கள்.

இந்தியாவில் இப்படிப் பிற மாநிலத்தவர்களால் மதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்த தமிழர்களின் இன்றைய நிலையை எண்ணிப்பார்த்தால் பதாபப்படவேண்டி உள்ளது. தமிழ கத்தை வாட்டி வதைத்து வரும் பல் வேறு உயிர்நாடியான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழிதெரியாமல் தமிழன் திகைத்துக் கிடக்கிறான். அவன் தலை யில் மிளகாய் அரைக்கும் வேலையை மற்ற மாநிலங்கள் செய்கின்றன.

30 ஆண்டு காலத்துக்கு மேலாக முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை தமிழகத்தின் 5 தென் மாவட்டங்களை அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. உறுதியாக நிற்கும் முல்லைப் பெரியாறு அணை பலவீனமாக இருக்கிறது என கேரள அரசியல் வாதிகள் இணைந்து நின்று பொய்மைக் கூப்பாட்டைக் கிளப்பி தமது நோக் கத்தில் வெற்றி பெற்றுவிட்டார்கள்.

மத்திய நீர்வள ஆணையம் கூறியபடி அணை 12.5 கோடி ரூபா செலவில் நாம் அணையை மேலும் வலுப்படுத்தினோம். முழுமையாக வலுப்படுத்தியபிறகு அணையின் நீர்மட்டத்தை உயர்த்திக் கொள்ளலாம் என மத்திய நீர்வள ஆணையம் கூறியதைக் கேரளம் ஏற்றுக் கொண்டது. ஆனால், அணையின் மராமத்து வேலைகள் முடிந்த பிறகும் இன்றுவரை நீர்மட்டத்தை உயர்த்த மறுக்கிறது.

வேறுவழியில்லாமல் உச்ச நீதிமன்றத்தில் தமிழகம் முறையிட்டது. அவர்களும் விசாரித்து இறுதியாக 2006ஆம் ஆண்டில் 142 அடிக்கு நீர்மட்டத்தை உயர்த்திக் கொள்ளலாம் எனத் தீர்ப்பு அளித்தனர். ஆனால், அந்தத் தீர்ப்பையும் நம்மால் நிறைவேற்ற முடியவில்லை. கேரளத்தின் முடிவை மீறி மத்திய அரசும் எதுவும் செய்ய வில்லை. அதற்குக் காரணம், மத்திய அரசில் அங்கம் வகிக்கும் கேரள அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப் பினர்களும், கேரள உயர் அதிகாரிகளும் இணைந்து நின்று உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை அமுலாக்கவிடாமல் சாதிப்பதில் வெற்றி பெற்று விட்டார்கள்.

தமிழகத்துக்குத் தண்ணீர் கேரளத்துக்குப் பாதுகாப்பு அதற்கு ஒரே வழி புதிய அணை கட்டுவது என்று கேரளம் கூறுகிறது. மத்தியில் பதவி வகிக்கும் கேரள அமைச்சர்கள், கேரள முதலமைச்சர் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் குழு ஆகியோர் பிரதமரையும் மற்ற மூத்த அமைச்சர் களையும் சந்தித்து தங்கள் திட்டத்துக்கு ஆதரவு திரட்டியிருக்கிறார்கள்.

அதேவேளையில் மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கிற தமிழக அமைச்சர்கள் நமது கடமை வாய்மூடி கிடப்பதே என்ற ரீதியில் மௌனம் சாதிக்கிறார்கள். தமிழ்நாட்டில் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை குறித்து கேரள அரசியல்வாதிகளைக் கண்டிக்கும் வகையில் ஏதோ சொன்னார் என்பதற்காக அவர் மீது அவர்கள் பாய்ந்தார்கள். உடனே அவர் தான் கூறியவற்றையெல்லாம் திரும்பப் பெறுவதாகக் கூறிச் சரணாகதி அடைந்தார்.

இவ்வளவுக்கும் பிரதமருக்கு அடுத்த பதவியான உள்துறை அமைச்சர் பொறுப்பில் இருப்பவர் ப.சிதம்பரம். அவரையே மிரட்டிப் பணியவைக்கக் கேரள அரசியல் வாதிகளால் முடிகிறது. மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சரான ஏ.கே.அந்தோனி கடற்படையைச் சேர்ந்த நீரமூழ்கி வீரர்களை அனுப்பி பெரியாறு அணையின் வலிமையைச் சோதனை புரிய ஆணை பிறப்பித்தார். பிரச்சினை உச்ச நீதிமன்ற பரிசீலனையில் இருக்கும்போது அதில் தலையிட்டு தமிழகத்துக்கும் தெரிவிக்காமல் இத்தகைய அடாவடியில் அவர் ஈடுபட்டபோது அவரைக் கண்டிக்கக்கூட மத்திய அரசில் அங்கம் வகிக்கும் ஒரு தமிழக அமைச்சர்கூட முன்வரவில்லை.

அதைப்போல காவிப் பிரச் சினையில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகக் காவிரி நதிநீரில் நமக்குள்ள உரிமையைக் கர்நாடகம் தட்டிப் பறித்தது. பேச்சுவார்த்தை என்ற பெயரில் இழுத்தடித்துக் காலம்கடத்தி, அதற்கு நடுவே புதிய அணைகளைக் கட்டித் தண்ணீரைத் தடுத்து வேறு வழியில் லாமல் நடுவர் மன்றம் அமைக்கும்படி மத்திய அரசிடம் வேண்டிக்கொண்டோம். ஆனால், மத்திய அரசு அதைச் செய்ய ன்வரவில்லை.

உச்ச நீதிமன்றத்தில் முறை யிட்டு உச்ச நீதிமன்றம் தலையிட்டு நடுவர் மன்றத்தை அமைக்கும்படி மத்திய அரசுக்கு ஆணை பிறப்பித்தது. நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பு ஒன்றை வழங்கி ஆண்டுதோறும் 205 டி.எம்.சி. நீரைத் தமிழகத்துக்கு அளிக்க வேண்டும் என ஆணையும் பிறப்பித்தது. நடுவர் மன்றத்தின் ஆணையை ஏற்பதற்கு கர்நாடகம் மறுத்து விட்டது.

இடையில் நடுவர் மன்றத்தைச் செயல்படாமல் முடக்குவதற்கும் கர்நாட கம் சதி செய்தது. கர்நாடகத்தைச் சேர்ந்த தேவகௌடா மத்தியில் பிரதமர் பொறுப்பை ஏற்ற பிறகு ஏற்கெனவே அவர் முதலமைச்சராக இருந்தபோது நடுவர் மன்றத் தலைவர் மீது வழக்குத் தொடர்ந்த காரணத்தால் நடுவர் மன்றத் தலைவர் பதவி விலக நேர்ந்தது.

இதற்குக் காரணமான தேவ கௌடாவை பிரதமராக்கியதில் தி..மு.க.வுக்குப் பெரும் பங்குண்டு. நடுவர் மன்றத்துக்கு மீண்டும் புதிய தலைவரை நியமிப்பதற்குக் காலம் கடத்தப்பட்டது. இறுதியாக ஒருவர் நியமிக்கப்பட்டு நடுவர் மன்றம் ஒரு இறுதித் தீர்ப்பையும் வழங்கிற்று. ஆனால், இடைக் காலத் தீர்ப்புக்கு ஏற்பட்ட கதியே இறுதித் தீர்ப்புக்கும் ஏற்பட்டது. இரண்டு தீர்ப்பு களையும் கர்நாடகம் மதிக்க மறுத்தது. அதன் மீது நடவடிக்கை எடுக்க மத்திய அரசு இன்றுவரை முன்வரவில்லை. மத்திய அரசில் அங்கம் வகிக்கும் ஒரு தமிழக அமைச்சர்கூட அதற்காகக் கவலைப்பட வில்லை.

ஈழத் தமிழர் பிரச்னையிலும் இதே போக்கு தொடர்ந்தது. 2009ஆம் ஆண்டில் விமான குண்டு வீச்சுக்கும், பீரங்கித் தாக்குதலுக்கும், ஆளாகி மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் தவித்தபோது அவர்களைக் காப்பாற்றத் தமிழகம் எவ்வளவோ போராடியும்கூட மத்திய அரசு அலட்சியம் செய்தது. எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியதுபோல இலங்கைஅரசுக்கு ஆயுதங்களை அள்ளிக் கொடுத்து இந்திய அரசு துணைநின்றது.

இதன் விளைவாக, ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் பாதிக்கப்பட்டார்கள். மூன்று இலட்சத் துக்கு மேற்பட்ட தமிழர்கள் முள்வேலி முகாமுக்குள்ளே அடைபட்டுப் போதுமான உணவு, தண்ணீர், மருந்து இல்லாமல் பெரும் துன்பத்துக்கு ஆளா னார்கள். இந்திய அரசைத் தடுக்க வேண்டிய தமிழக தி..மு.க. அரசு இரட்டை வேடம் பூண்டது. அப்போது மன்மோகன் சிங்கின் அரசு தி..மு. க.வின் 15 பாராளுமன்ற உறுப்பினர் களின் தயவில்தான் பதவியில் இருந்தது என்பதுதான் அதை விடக் கொடுமை.

இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யப்படாவிடில் எங்கள் ஆதரவைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம் என்று சொல்கிற துணிவு தி..மு.க.வுக்கு வரவில்லை, போகட்டும். குறைந்தபட்சம் இந்திய அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மத்திய தி..மு.க. அமைச்சர்கள் பதவி விலகியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யக்கூட அவர்கள் துணியவில்லை. செய்ய வேண்டியதைச் செய்யாமல் சென்னைக் கடற்கரையில் சாகும்வரை உண்ணா விரதம் என 3 மணி நேர நாடகம் ஒன்றை கருணாநிதி அரங்கேற்றினார்.

மன்னிக்க முடியாத வரலாற்றுப் பெருந் தவறை ஈழப் பிரச்சினையில் தி.மு..க. செய்தது என்று சரித்திரம் அந்தக் கட்சியின் துரோகத்தைப் பதிவு செய்யும்.

ஈழத் தமிழர்களை மட்டுமா, தமிழக மீனவர்களை ஒரேயடியாகக் கைகழுவிவிட்டது மத்திய அரசு. 30 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை வேட்டையாடுகிறது. விரட்டி விரட்டிச் சுடுகிறது. இந்தியக் கடற்படையோ வேடிக்கை பார்க்கிறது. இது வரை 500க்கு மேற்பட்ட மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் அங்கவீன மாகி இருக்கிறார்கள். பல கோடி ரூபா பெறுமான மீனவர்களின் படகுகள், வலைகள் சேதமாக்கப்பட்டு இருக் கின்றன. இத்தனைக்கும் மௌன சாட்சி யாக மத்திய அரசு விளங்குகிறது.

உலகில் எந்த நாட்டிலும் கடலில் எல்லை தாண்டினார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் சுட்டுத்தள்ளுவ தில்லை.

உலகத்திலேயே அவ்வாறு செய்கிற ஒரே நாடு இலங்கைதான். தன்னுடைய குடிமக்கள் கொல்லப்படுவதை வேடிக்கை பார்க்கும் ஒரே நாடும் இந்தியாதான்.

17ஆம் பக்கம் பார்க்க

உங்கள் பெற்றோர் தமிழ்பேசி ஆனால் நீங்கள் தமிழ் பேசாவிட்டால் உங்களை தமிழன் என்று கூறமுடியாது

சனிப் பெயர்ச்சிப் பலன்கள்

21-12-2011 முதல் 16-12-2014 வரை

விருட்சிகம்

உங்களுக்கு இப்பொழுது, ஏழரைச்சனி தொடங்கி விட்டது. மற்ற ராசிக் காரர்களை போல, நீங்கள் பயப்படத்தேவையில்லை. உங்கள் ராசிக்கு 3, 4 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக சனி விளங்குகிறார். சகாய ஸ்தானம் மற்றும் சுக ஸ்தானத்திற்கு அதிபதியாக விளங்கும் சனி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது சுகமாக வாழ வழி வகுப்பார். அதற்கு தேவையான செலவுகளுக்கு ஏற்ப வரவுகளையும் வரவழைத்து கொடுப்பார்.

மார்கழி 5-ம் தேதி முதல் துலாம் ராசியில் சனி சஞ்சரிக்கப் போகிறார். அது உங்கள் ராசிக்கு 12-வது இடமாகும். அந்த இடத்தில் சனி உச்சம் பெறுவதால் யோகம் தான். அங்கிருந்து கொண்டு 2, 6, 9 ஆகிய இடங்களை பார்த்து புனிதப்படுத்துகிறார்.

எனவே குடும்பம், வாக்கு, தனம், எதிர்ப்பு, கடன், பூர்வ புண்ணியம், தந்தை, ஜீவன வகை, வாகன யோகம், உத்யோக அனுகூலம், தொழில் விருத்தி, ஆரோக்கியம் ஆகிய இடங் களுக்குரிய ஆதிபத்தியங்களை நல்ல முறையில் செயல்படுத்தப்போகிறார்.

உங்கள் ராசிக்கு 12-ம் இடத்தில் சஞ்சரிக்கும் சனியின் பார்வை 2, 6, 9 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே குடும்பச்சுமை கூடும். கொள்கை பிடிப்பை சில சமயங்களில் தளர்த்தி கொள்ளும் சூழ்நிலை உருவாகும். அனுசரித்து சென்றால் இந்த காலத்தில் உங்களுக்கு ஆதாயங்கள் அதிகமாக இருக்கும். திருமணத்தடை அகலும். சுபகாரிய பேச்சுகள் நல்ல முடிவுக்கு வரும். நீண்ட நாளாக பேசி விலகிப்போன கல்யாண காரியம் மீண்டும் வந்து முடிவாவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

ஆறாம் இடத்தை பார்க்கும் சனியால் அற்புத யோகம் உங்களுக்கு காத்திருக்கிறது. 3-க்கு அதிபதி ஆறாமிடத்தை பார்க்கும் போது விபரீத ராஜயோக அடிப்படையில் எதிர்பாராத விதத்தில் நல்ல காரியங்கள் பல நடைபெற போகின்றன. அதே நேரத்தில் மறைமுக எதிர்ப்புகள் மற்றும் உறவினர் பகைகள் உருவாகலாம்.

குருப்பெயர்ச்சிக் காலம்

சனிப்பெயர்ச்சி காலத்தில் சுமார் 3 முறை குருப்பெயர்ச்சி ஆகிறது. 17-5-2012-ல் ரி'ப ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். 28-5-2013-ல் மிதுன ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். 13-6-2014-ல் கடக ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார்.

ரிஷபத்தில் குரு சஞ்சரிக்கும் போது அதன் பார்வை பலத்தால் உடல் ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். பணவரவு திருப்தி தரும். ஊர் மாற்றச் சிந்தனை கள் நல்ல முடிவிற்கு வரும். வெளிநாட்டுப் பயணத்திற்கான அறிகுறிகள் தோன்றும்.

மிதுன ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை பலம் 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிவதால் குடும்ப ஒற்றுமை கூடும். செல்வாக்கு மேலோங்கும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிக பொறுப்புகள் வந்து சேரும். வீடு கட்டிக் குடியேற வேண்டும் என்ற எண்ணம் பூர்த்தியாகும். வெளிநாட்டில் இருக்கும் உறவினர்களால் வியக்கும் செய்தி ஒன்று வந்து சேரும். வாகனம் வாங்கும் யோகம் கிட்டும்.

கடக ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை பலம் 1, 3, 7 ஆகிய இடங் களில் பதிவதால் எடுத்த முயற்சிகள் எல்லாம் வெற்றி பெறும். இல்லத்தில் இருப்பவர்கள் உங்கள் உள்ளத்தைப் புரிந்து கொண்டு செயல்படுவர். வரன்கள் வாயில் தேடி வந்து நிற்கும். குரு பார்வையால் குதூகலங்கள் அதிகரிக்க தென்முகக் கடவுளை இன்முகத் தோடு வரவேற்பது நல்லது. எனவே தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருக்கருகாவூர் சென்று அங்குள்ள முல்லை வனநாதர், கர்ப்ப ரட்சகாம்பிகை, அனுகூலம் தரும் நவக் கிரகம் மற்றும் யோக தட்சிணாமூர்த்தியை முறையாக வழிபட்டு வருவது நல்லது.

ராகு-கேது பெயர்ச்சிக்காலம்

2-12-2012-ல் துலாம் ராசியில் ராகுவும், மேஷ ராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார். 21-6-2014-ல் கன்னி ராசியில் ராகுவும், மீன ராசியில் கேதுவும் உலா வர போகிறார்கள். முதல் ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில் இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றங்கள் ஏற்படும். பொருளாதார நிலை உயரும். புகழ், கீர்த்தி மேலோங்கும். அருளாளர் களின் ஆலோசனைகளின் பெயரில் சிக்கல்களில் இருந்து விடுபடுவீர்கள். தங்கம், வெள்ளி போன்றவற்றை தாராளமாக வாங்கி சேர்க்க உகந்த நேரமிது. குடும்பத்தினர்களின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். பெண் குழந்தைகளின் திருமணத்தை முன்னிட்டு, அதற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி சேர்ப்பீர்கள். உத்யோகத்தில் எதிர்பார்த்தபடியே ஊதிய உயர்வு, பதவி உயர்வுகள் கிடைக்கலாம். வெளிநாட்டு பயணம் விரும்பியபடியே அமையும்.

அடுத்த ராகு-கேது பெயர்ச்சி காலத்தில் லாப ஸ்தானமும், புத்திர ஸ்தானமும் வலுவடைவதால் பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் கிடைக்கும். தொழிலில் பெரிய அளவில் லாபங்கள் வந்து சேரும். லட்சியத்தோடு வாழ்ந்த உங்கள் கரங்களில் லட்ச, லட்சமாக புரள இப்பொழுது புதிய தொழில் உருவாகும். வாகன மாற்றம் செய்ய முன் வருவீர்கள். சர்ப்ப சாந்தியை முறையாக செய்தால் சந்தோ'ம் தானாகவே வந்து சேரும்.

சனியின் வக்ர காலம்

துலாம் ராசியில் உச்சம் பெறும் சனி 5 முறை வக்ரமடைந்து நிவர்த்தியாகிறார். உங்கள் ராசிக்கு 3, 4-க்கு அதிபதியான சனி வக்ரம் பெறுவதால், ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை செலுத்துவது நல்லது. பிறருக்கு வாக்கு கொடுக்கும் முன் யோசிப்பதும், பிரச்சினைகளை தீர வழி வகுக்கும் தெய்வங்களை இந்த காலங்களில் பூஜிப்பது யோகம் தரும். குறிப்பாக, குடும்ப பெரியவர்களை ஆலோசித்து எந்த முடிவெடுத்தாலும் வெற்றி தரும். ஒரு சொத்தை விற்றால் உடனடியாக மற்றொரு சொத்தை வாங்குவது நல்லது.

சனியின் சஞ்சாரப் பலன்கள்!

இதுவரை உங்கள் ராசிக்கு 11-ம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், இப்பொழுது 12-ம் இடத்தில் சஞ்சரிக்க போகிறார். அதன் பார்வை பலம் உங்களுக்கு பக்கபலமாக அமையும். அதன் ஆதிபத்தியம் உங்களுக்கு போதிய அளவு வளர்ச்சியைக் கொடுக்கும்.

ஹபனிரெண்டில் சனி வந்தால்,
பயணத்தால் பலன் கிடைக்கும்!
இனி அமையும் புதிய தொழில்
லாபத்தை உருவாக்கும்!
அணி திகழும் ஈஸ்வரனை
அன்றாடம் வழிபட்டு,
துணிவோடு செயல்பட்டால்
தொடர்ந்து வரும் நலம் யாவும்!"

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, நிறைய வாய்ப்புகள் வந்து சேரப்போகிறது. புதிய ஒப்பந்தங் களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள்.

தனுசு

மார்கழி 5-ம் தேதி முதல் துலாம் ராசியில் சனி சஞ்சரிக்கப் போகிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் ராசியையும், ஐந்து, எட்டு ஆகிய (1, 5, 8) இடங்களையும் பார்க்கப் போகிறார். இதன் விளைவாக உடல்நலம், உற்சாகம், மாமன், மைத்துனர் வழி உதவி. பிள்ளைகளால் ஏற்பட்ட முன்னேற்றங்கள், பூர்வீக சொத்துக்களில் வரும் ஆதாயம், மறை முக நோய்கள், குடும்ப ஒற்றுமை, தொழில் மாற்றச் சிந்தனைகள், விரயங்கள் போன்ற ஆதிபத்தியங்களை சனி நிர்ணயிக்கப் போகிறார்.

ஆரோக்ய தொல்லைகளை சனி கொடுத்தாலும் கூட அன்றாட வரவு, செலவுகளை திருப்தியாக வைப்பார். வரவு வந்து கொண்டே இருக்கும். ஆயினும் வீண் விரயங்கள், தவிர்க்க முடியாததாக அமையும். பிள்ளைகளின் வழியில் ஏற்படும் பிரச்சனைகளை நாசுக்காக தீர்த்துக் கொள்வது நல்லது.

சனியின் லாப ஸ்தான சஞ்சாரம் ஒரு சிலருக்கு நீண்டதூர பயணங்களைக் கொடுக்கலாம். குடும்ப உறுப்பினர்கள் அனைவரின் ஜாதகத்தையும் அலசி, ஆராய்ந்து, அதில் அஷ்டமாதிபதி, விரயாதிபதி ஆதிக்க திசை நடப்பவர்கள் அதிகம் பேர் இருந்தால் தொழில் செய்யும் எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். லாபாதிபதி திசை நடப்பவர்களின் எண்ணிக்கை அதிகம் இருந்தால் துணிந்து தொழில் தொடங்கலாம்.

ஜென்ம ராசியைப் பார்க்கும் சனி உடல் ஆரோக்கியத்திற்கு சில பாதிப்புகளைக் கொடுத்து அகற்றுவார். 1, 5, 8 ஆகிய மூன்று இடங்களிலும் சனியின் பார்வை பதிக்கின்றது. தனாதிபதியாகவும், சகாய ஸ்தானாதி பதியாகவும் விளங்கும் சனி தனவரவையும் கொடுத்து, வந்த மறுநிமிடமே செலவா கவும் வைப்பார். எனவே இக்காலத்தில் பெருந் தொகைகள் வரும்பொழுது உடனடியாக ஒரு நல்ல காரியத்திற்கு செலவிட வேண்டும்.

சனியின் பார்வை 5-ம் இடத்தில் பதிவதால் பூர்வீக சொத்துக்களை விற்றுப் புதிய சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகும். புத்திர ஸ்தானம் வலுவடையாமல் இருக்கும் ஜாதகர் களுக்கு இக்காலத்தில் பிள்ளைகளால் சில பிரச்சினைகளை ஏற்கும் சூழ்நிலை உருவாகும். முறையாக வழிபாடுகளைச் செய்தால் மன அமைதி கிடைக்கும். திசை மாறிய தெய்வங்களை வழிபடுவதும் நல்லது.

அஷ்டம ஸ்தானத்தைச் சனி பார்ப்பதால் தொழில் கூட்டாளிகள் உங்களை விட்டு விலகலாம். வீடு மாற்றங்கள், உத்யோகத்தில் இலாகா மாற்றங்கள் ஒரு சிலருக்கு ஏற்படலாம். நோய்க்கான அறிகுறிகள் தோன்றும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

குருப்பெயர்ச்சிக் காலம்

சுமார் 2½ ஆண்டுகளுக்கும் மேலாக துலாம் ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். அப்பொழுது மூன்று முறை குருப் பெயர்ச்சி நடைபெற இருக்கிறது.

17.5.2012-ல் ரிஷப ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். 28.5.2013-ல் மிதுன ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். 13.6.2014-ல் கடக ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார்.

ரிஷபத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 2,10,12 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே குடும்ப ஒற்றுமை கூடும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும்.

பத்தாமிடத்தில் பார்வை பதிவதால் தொழில் வளம் சிறப்பாக நடக்கும். புதிய திட்டங்களை தீட்டி வெற்றி பெறுவீர்கள். பதவி உயர்வு பற்றிய செய்தி வந்து சேரும். அரசு வழியில் தடைபட்ட காரியங்கள் மளமளவென்று நடைபெறத் தொடங்கும்.

மிதுன ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை 1, 3, 11 ஆகிய இடங்களில் பதிவதால் உடல் ஆரோக்கியம் சீராகும். உறவினர் பகை மாறும். வெளியில் சொல்ல முடியாமல் இருந்த நோய்கள் வேகம் குறைந்து வியப்பை உருவாக்கும். சகோதர ஒற்றுமை பலப்படும். கடல் பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்பு உண்டு.

கடக ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது 2, 4, 12 ஆகிய இடங்களைப் பார்த்து புனிதப்படுத்துவதால் தாய்வழி ஆதரவு பெருகும். கட்டிய வீட்டில் மேல் மாடிகட்டி வாடகைக்கு விடலாம் என்ற எண்ணம் மேலோக்கும்.

இதுபோன்ற காலங்களில் வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குரு தெட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது. அது மட்டுமல்லாமல், அம்பிகை வழிபாட்டிலும் ஆர்வம் காட்டினால், இன்பங்களை மட்டுமே சந்திக்கலாம்.

ராகு-கேது பெயர்ச்சிக்காலம்

2.12.2012-ல் துலாம் ராசியில் ராகுவும், மே' ராசியில் கேதுவும் சஞ் சரிக்கப் போகிறார்கள். 21.6.2014-ல் கன்னி ராசியில் ராகுவும், மீன ராசியில் கேதுவும் உலா வரப்போகிறார்கள்.

முதல் ராகு - கேது பெயர்ச்சி காலத்தில் முன்னேற்றங்கள் அதிகரிக்கும். வெளி நாட்டிலிருந்து வியக்கும் செய்தி வந்து சேரும். பிள்ளைகளின் கல்யாண கனவுகளை நனவாக்க முன் வருவீர்கள்.

அடுத்த ராகு, கேது பெயர்ச்சி காலத்தில் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொகை கேட்ட இடத்திலிருந்து கிடைக்கும். வாகனம் வாங்கி மகிழும் வாய்ப்பு கிட்டும். தாய்வழி ஆதாயம் உண்டு.

சனியின் வக்ர காலம்

துலாம் ராசியில் உச்சம் பெறும் சனி 5 முறை வக்ரமடைந்து, வக்ரமடைந்து நிவர்த்தி யாகிறார்.

16ஆம் பக்கம் பார்க்க


ஆதி நடேசர் ஆலயத்தில் நடைபெற்ற மார்கழி திருவெம்பாவை உற்சவத்தில் எடுக்கப்பட்ட படங்கள்



















மார்க்கெட் போய்டுச்சா... சேச்சே..!



தமிழில் தனக்கு மார்க்கெட் போய்விட்டதாக வரும் செய்திகளில் உண்மையில்லை என்கிறார் நடிகை ஸ்ரேயா. ராசியில்லாத நடிகை என்ற லிஸ்டிலிருந்த ஸ்ரேயா, சிவாஜியில் ரஜினி ஜோடியாக நடித்ததன் மூலம் இந்தியாவின் பிரபல நடிகையாக மாறினார்.

தமிழ், இந்தி, தெலுங்கு, ஆங்கிலம் என டாப் கியரில் போய்க் கொண்டிருந்தவர், இந்திரலோகத்தில் நா அழகப்பன் என்ற படத்தில் வடிவேலுவுடன் டூயட் பாடிய திலிருந்து சரிவுக்குள்ளானார்.

சமீப காலமாக அவர் நடித்த படங்கள் பெரிதாகப் போகவில்லை. இப்போது அவருக்கு படங்களும் சொல்லிக்கொள்ளும்படி இல்லை. கடைசியாக ரௌத்திரம் படத்தில் நடித்தார். ஸ்ரேயா மார்க்கெட் சரிந்து விட்டதாகவும் புதுப் படங்களுக்கு தயாரிப்பாளர்கள் அவரை ஒப்பந்தம் செய்ய மறுக்கிறார்கள் என்றும் செய்திகள் வெளியாகி உள்ளன.

இதுபற்றி ஸ்ரேயாவிடம் கேட்ட போது, "நான் பன்னிரெண்டு வருடமாக சினிமாவில் இருக்கிறேன். என்ன கேரக்டர் கொடுத்தாலும் நடிப்பேன் என்ற பெயரைப் பெற்றுள்ளேன்.

நல்ல நடிகைகளுக்கு மார்க்கெட் என்ற வரையறையே கிடையாது. எனக்கு மார்க்கெட் போய் விட்டது என்றும் படவாய்ப்புகள் இல்லை என்றும் சொல்லப்படுவதில் உண்மை இல்லை.

வந்த புதிதிலும் எல்லா படங்களையும் ஒப்புக் கொண்டேன். சில படங்களில் தயாரிப்பாளர், இயக்குனர் வேண்டப்பட்டவராக இருந்ததால் நடித்தேன். இப்போது அப்படியெல்லாம் நடிக்க வேண்டிய அவசியமில்லையே. பணக்கஷ்டம் இல்லை. எனவே தேர்ந்தெடுத்து நடிக்கப் போகிறேன். நல்ல கதைகளாக இருந்தால் மட்டுமே நடிப்பது என்று முடிவு செய்துள்ளேன். இதை வைத்து எனக்கு பட வாய்ப்புகள் இல்லை என்று வதந்தி பரப்புகிறார்கள். எனக்கு நிற்க நேரமில்லாத அளவுக்கு வேலை. ஒரு பாட்டுக்கு ஆடுவது, விளம்பரங்கள், நிகழ்ச்சிகள், சேவை அமைப்புகள் என நான் ரொம்ப பிஸி," என்றார்.

3-ம் தேதி உலகெங்கும் 'கொலவெறி' புகழ் '3'



2011 மற்றும் 2012ன் அதிரடி ஹிட் பாடலான 'ஒய் திஸ் கொலவெறிடி...' இடம்பெற்ற தனுஷின் '3' படம் வரும் பிப்ரவரி 3-ம் தேதி உலகமெங்கும் வெளியாகிறது. பாமரன் தொடங்கி பிரதமர் வரை பாராட்டிய பாடல் இந்த கொலவெறி. அதே நேரம் விமர்சனங்களுக்கும் குறைவில்லை.

இந்த நிலையில் இந்தப் பாடல் இடம்பெற்றுள்ள '3' படம் வரும் பிப்ரவரி 3-ம் தேதி உலகமெங்கும் ரிலீஸ் ஆகிறது. சூப்பர் ஸ்டார் ரஜினியின் மகள் ஐஸ்வர்யா இயக்க, தனுஷ் ஜோடியாக ஸ்ருதி ஹாஸன் நடித்துள்ள இந்தப் படத்துக்கு பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளதால், அதிக திரையரங்குகளில் வெளியிடத் திட்டமிட்டுள்ளனர்.

மும்பையைச் சேர்ந்த நிறுவனம் பெரும் விலைக்கு இந்தப் படத்தின் வெளியீட்டு உரிமையை வாங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. படத்தில் பிரபு, ரேஹினி, மயக்கம் என்ன படத்தில் நடித்த சுந்தர் மற்றும் சிவ கார்த்திகேயன் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். அனிருத் இசையமைத்துள்ளார். இதற்கிடையே, கொலைவெறிப் பாடல் சூப்பர் ஹிட்டான சந்தோஷத்தை நண்பர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுடன் பகிர்ந்து கொண்டனர் தனுஷும் அவர் மனைவியும் இயக்குநருமான ஐஸ்வர்யாவும்.

ஜிஆர்டி ஹோட்டலில் நடந்த இந்த நிகழ்ச்சியில் படத்தின் முக்கிய கலைஞர்களும் பங்கேற்றனர்.

கொலைவெறிப் பாடலுக்கு கிடைத்த வெற்றி, படத்துக்கும் கிடைக்க வேண்டுமே என்ற பதட்டம் தனக்கு இருப்பதாக ஐஸ்வர்யா தெரிவித்தார்.

இதுநாள்வரை மீசை, தாடியுடன் தோற்றமளித்த தனுஷ் இப்போது, மழுமழு முகத்துடன் 'துள்ளுவதோ இளமை' ஸ்டைலில் வந்திருந்தார்.



என்றென்றும்
இயற்கைப் பற்களின்
ஆரோக்கியச் சிரிப்பிற்கு

உங்கள் பூரண
திருப்திக்கு
உத்தரவாதம்
அளிக்கும் பிரபல
பல் வைத்தியர்

ஆதிகணபதி
சோமசுந்தரம்



சிகிச்சைக்கு முன்



சிகிச்சைக்குப் பின்

- முரசு கரைதலை நிறுத்துதல்
- பல் வேர்களை அடைத்தல்
- அழகுபடுத்தும் பல் சிகிச்சை
- முதியோர் பல் பராமரிப்பு
- கிளிப் போடுதல்
- பற்களை வெண்மையாக்கல்
- ஞானப்பல் எடுத்தல்
- கட்டுப்பற்கள்
- நிரந்தரமான செயற்கைப்பற்கள்
- பவுண்பல் கட்டுதல்
- குழந்தைகளுக்கான பல் சிகிச்சை
- வாய் துர்நாற்றம் அகற்றல்
- பல்அடைத்தல்

2191 Warden Ave,
Scarborough, ON.
416-750-9969

ஆதி நடேசர் ஆலயத்தில் நடைபெற்ற மார்கழி திருவெம்பாவை உற்சவத்தில் எடுக்கப்பட்ட படங்கள்

















காமெடிக்கு மாறியது ஏன்? சொல்கிறார் ஊர்வசி



நகைச்சுவை வேடங்கள் சவாலானவை. என்னுடைய நகைச்சுவை நடிப்பு மக்களுக்கு பிடித்துவிட்டதால்தான், கதாநாயகியாக இருந்தபோதே, நகைச்சுவை வேடங்களை ஏற்று நடித்தேன், என்கிறார் நடிகை ஊர்வசி.

முந்தானை முடிச்சு மூலம் நாயகியாக அறிமுகமானவர் நடிகை ஊர்வசி. தொடர்ந்து பல வெற்றிப் படங்களின் நாயகியாக வலம் வந்தவர், திடீரென காமெடி ரூட்டைப் பிடித்தார்.

மைக்கேல் மதன காமராஜன், வனஜா கிரிஜா, இரட்டை ரோஜா, மகளிர் மட்டும் படங்களில் ஹீரோயின் மற்றும் காமெடி வேடங்களில் கலக்கினார்.

ஒரு இடைவெளிக்குப்பிறகு, அவர் அம்மா வேடங்களில் நடித்தார். ஆனால் அதிலும் நகைச்சுவையே பிரதானமாக அமைந்ததால் நல்ல வரவேற்பு கிடைத்தது. உதாரணம், வாமனன், சிவா மனசுல சக்தி.

இப்போது, பேச்சியக்கா மருமகன் படத்தில் நடித்து வருகிறார். இதில் தருண் கோபிக்கு மாமியாராக நடித்துள்ளார் ஊர்வசி. மலையாளம் தாய்மொழி என்றாலும், மதுரைத் தமிழ் பேசி நடித்துள்ளார் ஊர்வசி.

தனது சினிமா அனுபவம், நகைச்சுவைக்கு மாறியது குறித்து அவர் கூறுகையில், “400 படங்களில் கதாநாயகியாக நடித்த பின் நகைச்சுவை வேடம் விட்டேன். அதன்பிறகு நகைச்சுவை வேடங்களிலும், குணச்சித்ர கதாபாத்திரங்களிலும் நடித்து வருகிறேன். நகைச்சுவையாக நடிப்பது ஏன்? என்று நிறைய பேர் கேட்கிறார்கள்.

நகைச்சுவை நடிப்பில், ஆச்சி மனோரமாவுடன் வேறு யாரையும் ஒப்பிட முடியாது. அவருடைய இடத்தை யாரும் நிரப்ப முடியாது. பொதுவாகவே சினி-மாவில் பெண்கள் நகைச்சுவை வேடங்களில் நடிப்பது, குறைவாக இருக்கிறது.

கதாசிரியர்கள், பெண்கள் நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து கதைகள் எழுதுவதில்லை. எனக்கு “மாயாபஜார்,“ வனஜா கிரிஜா,“ இரட்டை ரோஜாக்கள்“ ஆகிய படங்கள் திருப்பமாக அமைந்தன. ‘மைக்கேல் மதன காமராஜன்,“ மகளிர் மட்டும்“ படங்களுக்கு கிடைத்த வரவேற்பு, நகைச்சுவை வேடங்களில் நடிப்பதற்கு ஆர்வத்தை ஏற்படுத்தின.

இடையில், கொஞ்ச காலம் படங்களில் நடிப்பதை தவிர்த்தேன். ‘பேச்சியக்கா மருமகன‘ படம், தொடர்ந்து நிறைய படங்களில் நடிக்க வேண்டும் என்ற உற்சாகத்தை தந்திருக்கிறது,” என்றார்.

நான் தனுஷை நம்புகிறேன்!

சமீபத்தில் கோடம்பாக்கத்தையே கலக்கிய செய்தி என்றால் அது தனுஷ் - ஸ்ருதி ஹாஸன் விவகாரம்தான்.

செய்தி வெளியான அன்றே அதை மறுத்திருந்தார் ஸ்ருதி. ஆனால் தனுஷ் ஒன்றும் பேசவில்லை. மாறாக அன்று மாலை நடந்த 3 படப்பிடிப்பில் மனைவி ஐஸ்வர்யாவுடன் ஜாலியாக போஸ் கொடுத்திருந்தார் அவர்.



ஆனால் ஒரு மனைவியால் இதுபோன்ற செய்திகளை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியுமா...

ஐஸ்வர்யா கொஞ்சமும் அலட்டிக் கொள்ளவே இல்லை. சூப்பர் ஸ்டார் மகள் அல்லவா...

தனுஷ் - ஸ்ருதி விவகாரம் குறித்து அவர் சமீபத்தில் கூறுகையில், “நான் இருப்பது சினிமா துறை. இங்கே அனைத்தையும் எதிர்கொண்டாக வேண்டிய சூழல். ஆனால் தனுஷ் - ஸ்ருதி பற்றி வந்தது வெறும் வதந்திதான். அதில் எந்த உண்மையும் இல்லை. தனுஷை நன்கு புரிந்தவள் நான். அவர் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. நாங்கள் ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் நம்பிக்கை, எங்கள் குடும்பத்தின் பக்கபலத்துடன் இதுபோன்ற சோதனைகளைக் கடந்துவிடுவோம் என்ற நம்பிக்கை உள்ளது,”

கோச்சடையானில் வித்யா பாலன்?



கோச்சடையான் படத்தில் ரஜினி ஹீரோ... சினேகா தங்கச்சி என்பதைத் தவிர வேறு எந்த தகவலும் இன்னும் உறுதி செய்யப்படாததாகவே உள்ளது.

ஆரம்பத்தில் அனுஷ்காதான் ஹீரோயின் என்றார்கள். அப்படியே கத்ரினா கை.ஃப், கரீனா கபூர், தீபிகா படுகோன் என ஒரு ரவுண்ட் அடித்து மீண்டும் கத்ரினா கை.ஃதான் ஹீரோயின் என்றார்கள். ஆனால் அவரோ வேறு படங்களில் பிஸியாக உள்ளாராம் சௌந்தர்யா கேட்கும் தேதிகளில்.

எனவே இப்போது வித்யா பாலன் நடிப்பார் என்கிறார்கள். ஏற்கெனவே ராணா படத்தில் இவர் நடிப்பதாக இருந்து, பின்னர் விலகியவர் என்பதால், ரஜினி பட ஹீரோயின் என்ற வாய்ப்பை அவர் இந்த முறை பெற விரும்புவதாகத் தெரிகிறது. தி டர்ட்டி பிக்சருக்குப் பின் வித்யாபாலனின் மார்க்கெட் பாலிவுட்டில் வலுவாக உள்ளதால் அவரை சௌந்தர்யா ஓகே செய்திருப்பதாகக் கூறுகிறார்கள்.

இதற்கிடையே, கோச்சடையானுக்காக மோஷன் கேப்சரிங் பணிகள் நடந்து வருவதாகவும், இதில் ரஜினி பங்கேற்றதாகவும் கூறப்படுகிறது.

நண்பன் படத்துக்கு முழு வரிவிலக்கு




நண்பன் படத்துக்கு முழு வரிவிலக்கு அளித்துள்ளது. அரசு. ஜெயலலிதா ஆட்சியில் வரிவிலக்கு பெற்றுள்ள முதல் படம் நண்பன் என்பது குறிப்பிடத்தக்கது.தமிழில் தலைப்பு வைத்தாலே போதும், வரி விலக்கு உண்டு என்று முன்பு கருணாநிதி ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்டது. இதனால் தரமற்ற குப்பைப் படங்களும் தமிழில் தலைப்பு வைத்ததற்காக வரி விலக்கு பெற்றன.ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும், தமிழில் பெயர் வைத்தால் மட்டும் போதாது... அனைவரும் பார்க்கத்தக்க யு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும், தரமான படமாக இருக்க வேண்டும். அப்போதுதான் வரிவிலக்கு என நிபந்தனைகள் விதித்தது.

வரிவிலக்கு பெறத் தகுதியான படங்களை தேர்வு செய்ய 22 பேர் கொண்ட குழுவையும் அமைத்தது அரசு. இதில் இயக்குநர்கள், நடிகர்கள், தயாரிப்பாளர்கள், இசையமைப்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழு பார்த்து பரிந்துரைக்கும் படத்துக்கே வரிவிலக்கு கிடைக்கும். வரிவிலக்குக்கு படங்களை அனுப்ப ரூ 10000 கட்டணம் உண்டு.

இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் விஜய் நடித்துள்ள நண்பன் படம் இருப்பதால் படத்துக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஷங்கர் இயக்கத்தில், விஜய்யுடன் ஜீவா, ஸ்ரீகாந்த், சத்யராஜ் நடிக்க பொங்கலுக்கு வெளியாகியுள்ள இந்தப் படத்து ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த நிலையில் வரிவிலக்கு அறிவித்துள்ளது வசூலை மேலும் அதிகரிக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

சட்டம் உங்களுக்கு



பாகம் 38

சிந்தனைச் செம்மல் முஹமத் ஹன்ஸீர்
416-282-0681, 647-522-1357

குற்றம் என்பதன் முக்கிய உறுப்பான குற்றமனம் என்னும் விடயங்களை ஏற்கனவே பார்த்து விட்டாலும் கனடா நாட்டில் அச்சட்டம் எவ்வாறு செயல்படுகின்றது என்ற விடயம் பற்றிக் கூறுவதாகச் சென்றமுறை கூறியிருந்தேன். குற்றவிடயங்களைப் பற்றி கூறப்பட்டுள்ள இந்நாட்டுக் குற்றவியல் கோவை இதனைப் பற்றிய விடயங்களைப் பல இடங்களில் கூறியுள்ளது.

ஒரு கொலைச் செயல் குற்றமனதுடன் செய்யப்பட்டதா? அல்லது குற்றமனமின்றித் தற்செயலாகச் செய்யப்பட்டதா என்ற விடயம், ஒரு குற்றச் செயலை நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் பொழுது ஆராய்கிறது. குற்றச் செயல் எனக் கூறும்பொழுது கொலை மாத்திரமல்ல வேறு எது வாகவும் இருக்கலாம். குற்றமனதுடன் செய்தவை என நிரூபிக்கப்பட்டால் குற்றவாளி எனவும் தீர்ப்புக் கூறப்படுகின்றது. அவ்வாறு நிரூபிக்கப்படாவிட்டால் குற்றவாளி அல்ல எனவும் தீர்ப்பு கூறப்படுகிறது. இவ்விடயம் கனடாவிலும் அவ்வாறே இருக்கின்றது.

கனடாவின் நீதிமன்றங்கள் பலவகையான குற்றமனங்களை ஏற்றுக்கொண்டுள்ளன. அவை நோக்கம், அறிவு, அசட்டுத் துணிவு, வேண்டுமென்றே விருப்பமின்மை, என்பவற்றோடு இன்னும் பல இருக்கின்றன. அவற்றைக் காலப் போக்கில் அறிந்துகொள்வோம்..

நோக்கத்துடன் செயல்படுதல் என்னும் விடயத்தில் ஒரு அரசாங்க அதிகாரி தன்கடமையைச் செய்யும் பொழுது அதற்கு இடையூறு விளைவித்தல் அல்லது தடுத்தல் என்னும் விடயம் பற்றிப் பார்ப்போம். இவ்விடயமாக கனடா குற்றவியல் கோவையின் 129 ஆம் இலக்கச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கின்றது. அதன்படி ஒரு சமாதான அதிகாரி அல்லது அரசாங்க அதிகாரி தன் கடமையைச் செய்யும் பொழுது அதனைச் செய்யவிடாது தடுத்து, அல்லது செய்யவிடாது இடையூறு விளைவித்தால் அதனை நோக்கத்துடன் செய்தால் அல்லது தவறாக எதிர்த்தால் அல்லது தலையீடு செய்தால் ஒரு குற்றச் செயலைச் செய்தவராகின்றார். இங்கு நோக்கம் முக்கியமாக இருக்க வேண்டுமென்பதும், எதிர்ப்பு, தடை, தலையீடு என்பவற்றைச் செய்வதன் மூலம் என்ன விளைவுகளை எதிர்பார்த்திருந்தார் என்பதை நிரூபித்தாலும், குற்றமன நோக்கம் இருக்கின்றது எனவும் நீதிமன்றங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.

நோக்கம் எனக் கூறப்படும் பொழுது கனடாக் குற்றவியல் சட்டத்தில் குறிப்பிட்ட நோக்கம் என்னும் விடயமும் கூறப்பட்டுள்ளது. கனடா குற்றவியல் கோவையின் 348, 348(1) இதனைக் கூறுகின்றது. அதாவது சில குற்றச் செயல்களின் விஷேட நோக்கம், அல்லது கடைசி நோக்கம் என்ன எனவும் பார்க்கப்படுகின்றது. இவை குறிப்பிட்ட நோக்கங்களையுடைய குற்றங்களாகக் கருதப்படுகின்றன. ஒருவர் ஒரு செயலைச் செய்யும்பொழுது அது குற்றச்செயல் போன்று தென்படலாம். ஆயினும் அச்செயலைச் செய்ததன் நோக்கம் என்ன என்று அறிந்து கொள்வதன் மூலம் தான் அது குற்றச் செயலா இல்லையா என்பதைக் கண்டு கொள்ளலாம். குற்றவியல் கோவை இலக்கம் 348(1) இன்படி ஒரு குற்றச் செயலைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் ஒரு இடத்தை உடைத்துக்கொண்டு உட்புகுந்தால் அவர் ஒரு பெரிய குற்றத்தைச் செய்த குற்றவாளியாவான். இங்கு குற்றம் என்பதைக் காட்டும்பொழுது ஒருவர் வீட்டை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றார் என்பதைக் காட்டுவதோடு அவ்வாறு உடைத்துக்கொண்டு உள்ளே சென்றது ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை அதாவது திருடுவதை நோக்கமாகக் கொண்டு சென்றுள்ளதையும் காட்ட வேண்டும். அவ்வாறாயின் அது கடும்பொறுப்புக் குற்றமாகும்.

அதே சேயலை இன்னொருவர் இன்னொரு நோக்கத்துடன் செய்தால் குற்றவாளியாக மாட்டான். தன்னைக் குளிரிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக ஒரு இடத்தை இடித்து உள்ளே சென்றால் 348(1) A யின்படி குற்றவாளியல்ல. எனவே இங்கும் செயலைச் செய்ததன் நோக்கம் முக்கியமாகக் கருதப்படுகின்றது.

கொள்ளையடித்தல் என்னும் விடயமாகக் குற்றவியல் கோவையில் இலக்கம் 343, 344 என்றும் பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன. இலக்கம் 343(C) ஒருவரிடமிருந்து களவாடும் நோக்கத்திற்காக அவரைத் தாக்குதல் கொள்ளையடித்தலாகக் கருதப்படும். என்று கூறுகின்றது. அதாவது, கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் தாக்குதல் நடைபெறுவது கொள்ளையடித்தல் என்னும் செயலைச் செய்ததாகக் கருதப்படுகின்றது.

இங்கு ஒருவரைத் தாக்குதல் மாத்திரம் குற்றச் செயலாகக் கருதப்படுவதில்லை. தாக்குதலின் நோக்கம் களவாடும் ஒரு செயலை நோக்கமாகக் கொண்டிருப்பதையும் கருதப்படுகின்றது.

மேலும் விவரங்களை அடுத்த இதழில் காண்போம்.

6ஆம் பக்கத் தொடர்ச்சி

இறுதிக்கிரியைகள் (13.01.2012) வெள்ளிக்கிழமை நடைபெற்றது

மரியதாசன் பார்பரா (நிர்மலா)

யாழ்பாணம், ஆஸ்பத்திரி வீதியை பிறப்பிடமாகவும் 517/6, ஸ்ராலின் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாசன் பார்பரா (நிர்மலா) 13-01-2012 கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்

செல்வரட்ணம் பூமணி

கரம்பனைப் பிறப்பிடமாகவும், இல. 97, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் பூமணி (13.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

பொன்னையா சிறிநடராஜ்

(முன்னாள் மோட்டார் போக்குவரத்து திணைக்கள லிகிதர், மனேஜர், Cv part)

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், பழம் வீதி, கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா சிறிநடராஜ் (13.01.2012) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

இறுதிக்கிரியைகள் (13.01.2012) வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

திருமதி கனகலிங்கம் திருமேனிப்பிள்ளை

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, குணானந்த மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் திருமேனிப்பிள்ளை 12.01.2012 வியாழக்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் (16.01.2012) திங்கட்கிழமை நடைபெற்றது.

தில்லையம்பலம் சுப்பிரமணியம்

(முன்னாள் தலைவர், ஆலங்கன்டி, வைரவர் கோயில்)

காரைநகர், வேதரடைப்பைப் பிறப்பிடமாகவும், நீர்கொழும்பு, கொச்சிக் கடையில் வசித்தவருமான தில்லையம்பலம் சுப்பிரமணியம் (11.01.2012) புதன் கிழமை சிவபதமடைந்தார்.

இறுதிக்கிரியைகள் (12.01.2012) வியாழக்கிழமை நடைபெற்றது.

திருமதி பிலோமினா மகாதேவன்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிலோமினா மகாதேவன் (09.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் (12.01.2012) வியாழக்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டது.

இராமபிள்ளை சேதுராசா

(ஓய்வு பெற்ற கிராம சேவை உத்தியோகத்தர் (தரம்1))

ஆனந்தன் வடலிவீதி அரியாலையைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 28, பாரதி வீதி கச்சேரி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை சேதுராசா (09.01.2012) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இறுதிக்கிரியைகள் (11.01.2012) புதன்கிழமை நடைபெற்றது.

இராஜா யோகராஜா

(சமாதான நீதிவான், மூத்த விநாயகர் சனசமூக நிலைய முன்னாள் செயலாளர், கிராம அபிவிருத்திச் சபை அங்கத்தவர்)

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராஜா யோகராஜா அவர்கள் (10.01.2012) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

இறுதிக்கிரியைகள் (11.01.2012) புதன்கிழமை நடைபெற்றது.

திருமதி இரத்தினம் தங்கரத்தினம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் தங்கரத்தினம் 09.01.2012 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இறுதிக்கிரியைகள் (11.01.2012) புதன்கிழமை நடைபெற்றது.

சபாபதி இராஜநாயகம்

(Retired Chief Telecomunication Engineer, Former Jaffna College Technical Institute Director)

காரைநகர், அலவில் வீதியைப் பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியா அடிலேயட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி இராஜநாயகம் 06.01.2012 வெள்ளிக்கிழமை காலமானார். இறுதி நல்லடக்கம் 15.01.2012 ஞாயிற்றுக் கிழமை அவுஸ்திரேலியாவில் நடைபெற்றது.

சின்னத்துரை செல்வரெத்தினம்

(உரிமையாளர் செல்வம் புடைவையகம், கல்வியங்காடு)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை செல்வரெத்தினம் (09.01.2012) திங்கட கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இறுதிக்கிரியைகள் (10.01.2012) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

திருமதி பொன்னுத்துரை பகவதி

சிறுவிளான், இளவாலையைப் பிறப்பிடமாகவும், தாவடி, பாடசாலை வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை பகவதி 07.01.2012 சனிக்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் (09.01.2012) திங்கட்கிழமை நடைபெற்றது.

வேலாயுதம் சுப்ரமணியம்

(நாதஸ்வர வித்துவான்)

சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கு, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் சுப்ரமணியம் (08.01.2012) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

இறுதிக்கிரியைகள் (09.01.2012) திங்கட்கிழமை நடைபெற்றது.

வன்னித்தம்பி வைரவநாதன்

(டேவிட்)

கீரிமலை, கருகம்பனையைப் பிறப்பிட மாகவும், நிரந்தர வதிவிடமாகவும், ஜீவ ஒளி மிஷன் மாகியம்பதி, சண்டிலிப் பாயைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வன்னித்தம்பி வைரவநாதன் நேற்று (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

நல்லடக்க ஆராதனைகள் (09.01.2012) திங்கட்கிழமை நடைபெற்றது.

முரசொலி

எப்பொருள் யார் யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

ஆசிரியர்
பல்கலைச் செல்வன்

முரசொலியில் வரும் கட்டுரைகள், கதை, கவிதைகளின் கருத்துக்கள் அவற்றை ஆக்கியோரே பொறுப் பாளிகள்.

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 416-751-2022
தொலைநகல்: 416-498-5065

பணிமனை முகவரி
2191 WARDEN AVENUE
SCARBOROUGH, ON.
MIT 3N9

கதிரைகள்
வாடகைக்கு
416-751-2022

சனிப் பெயர்ச்சிப் பலன்கள்

10ஆம் பக்கத் தொடர்ச்சி

உங்கள் ராசிக்கு 2, 3 ஆகிய இடங்களுக்கு அதிபதியாகிறார். எனவே, இக்காலத்தில் பணப்புழக்கம் சரளமாக இருக்குமா? என்பது சந்தேகம் தான். ஒரு தொகை செலவழிந்தால் தான் மற்றொரு தொகை வந்து சேரும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கலாம். உடன் பிறப்புகள் உங்களை விட்டு விலகா திருக்க அனுசரிப்புத் தேவை. பாகப் பிரிவினைகள் இழுபறி நிலையில் இருக்கலாம்.

இதுவரை உங்கள் ராசிக்கு பத்தாமிடத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் இப்பொழுது, பதினொரா மிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். லாப ஸ்தானத்தில் உச்சம் பெறப்போவதால், பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பலாம். ஆதாயம் கூடும்.

பதினொன்றில் சனி வந்தால்
பண வரவு அதிகரிக்கும்.
மதிப்பு மிகும், சமூகத்தில்
மரியாதை மிகக்கூடும்.
நதிபோல துயர் ஓடும்.
நலம் யாவும் தேடிவரும்,
விதிப் பயனால் எதிர்பார்க்கும்
வெளிநாட்டு யோகம் வரும்"

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில், வரவு அதிகரித்து வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளப் போகிறீர்கள். உறவு, பகை பாராமல் உதவி செய்யும் உங்களுக்கு சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தை ஏற்படுத்தும்.

மகரம்

மகர ராசி நேயர்களே!

மார்கழி 5-ம் தேதி முதல் துலாம் ராசியில் சனி சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் ராசிநாதன் சனி உச்சம் பெறு கிறார் அல்லவா? எனவே, உற்சாகத் துடன் பணிபுரிந்து உள்ளம் மகிழும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளப்போகிறீர்கள். அதன் பார்வை (4, 7, 12) நான்கு, ஏழு, பனிரெண்டு ஆகிய இடங்களில் பதிகிறது. இதன் விளை வாக, சுக ஸ்தானம், தாய், வாகனம், களத்திரம், ஊர்மாற்றம், பயணங்கள், குடும்பச்சுமை, செலவு நடை, குழந்தைகள் நலன், இடம், பூமி விற்பனை, விலை உயர்ந்த பொருள் சேர்க்கை போன்றவற்றிற்குரிய ஆதிபத்தியங்களில் எல்லாம் நல்ல பலன்களை அள்ளி வழங்குவார்.

சனிப்பெயர்ச்சி காலத்தில் விரயாதிபதி குரு சனியைப் பார்ப்பதால் விரயங்களே அதிகரிக்கும் என்றாலும், ரிஷ குருவின் பெயர்ச்சிக்குப் பின்னால் உங்கள் ராசியை ஒன்பதாம் பார்வையாக குரு பார்க்கப் போவதால் குருப் பெயர்ச்சிக்கு மேல் சனிப் பெயர்ச்சி சாதகமான பலன்களை அதிக அளவில் அள்ளி கொடுக்கலாம்.

தொடக்கத்தில் செவ்வாய் அஷ்டமத்தில் சஞ்சரிப்பதால், அதன் வக்ர கால இயக்கம் முடியும் வரை ஆரோக்யத்திலும் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். அதிகப் பிரயாசை எடுக்கும் காரியங்களிலும் தாமதம் ஏற்படலாம். செவ்வாய் தோறும் அம்பிகை வழிபாடும், சனிக் கிழமை தோறும் சனீஸ்வரர் வழிபாடும் செய்து வருவதோடு, காகத்திற்கு எள் கலந்த சோறு வைப்பது நல்லது.

உங்கள் ராசிக்குப் பத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் 4, 7, 12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். அதன் பார்வை பதியும் இடங்களில் இனி பலவித மாற்றங்கள் உருவாகும். குறிப்பாக சுக ஸ்தானத்தில் பதிவதால் ஆரோக்யத்தில் கூடுதல் அக்கறை செலுத்துங்கள். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதால் ஆரோக்யம் சீராகும். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. 7-ஆம் இடத்தைச் சனி பார்ப்பதால் சுப விரயங்கள் அதிகரிக்கும். வரன்கள் வாயில்தேடி வந்து கொண்டிருக்கும். இந்த நேரத்தில் செவ்வாய் மற்றும் சனியின் அமைப்பு மற்றும் பொருத்தங்கள் வந்த வரனில் திருப்தியாக இருக்கிறதா என்பதை அறிந்து முடிவெடுப்பது நல்லது.

சனியின் பார்வை பனிரெண்டா மிடத்தில் பதிவதால் தனாதிபதியின் பார்வை விரய ஸ்தானத்தில் பதியும் பொழுது எதிர்பாராத சில விரயங்கள் ஏற்படும். வீடுகட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டு வீர்கள். விலை உயர்ந்த பொருட்களான தங்கம், வெள்ளி போன்றவைகளின் சேர்க்கையும் ஏற்படும். பொதுவாக இது போன்ற விரத காலங்களில் சனிக்கிழமை விரதமிருந்து அனுமனை வழிபடுவது நல்லது.

குருப்பெயர்ச்சி காலம்!

துலாம் ராசியில் சனி சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெறுகிறது. 17.5.2012-ல் ரிஷப ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறது. 28.5.2013-ல் மிதுன ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். 13.6.2014-ல் கடக ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார்.

ரிஷபத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை நேரடியாக உங்கள் ராசியில் பதிகிறது. அதுமட்டு மல்லாமல் உங்கள் ராசிக்கு 1, 9, 11 ஆகிய இடங்களிலும் பதிகிறது. அதன் விளைவாகப் பூரண வியாழ நோக்கம் ஏற்படுகிறது. கல்யாணக் கனவுகள் நனவாகும். களத்திர ஒற்றுமை பலமாகும். தந்தை வழி ஒற்றுமை கிடைக்கும்.

மிதுன ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது 2, 10, 12 ஆகிய இடங்களில் அதன் பார்வை பதிவதால் தொழில் வளம் மேலோங்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். கடல் பயண வாய்ப்பு கைகூடும்.

கடக ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை 1, 3, 11 ஆகிய இடங்களில் பதிவதால் பணத்தேவைகள் பூர்த்தியாகும். பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். தொழி லில் லாபம் இருமடங்காக உயரும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேர்வர்.

ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!

2.12.2012-ல் துலாம் ராகுவும், மேஷ ராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். 21.6.2014-ல் கன்னி ராசியில் ராகுவும், மீன ராசியில் கேதுவும் உலா வரப்போகிறார்கள். முதல் ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில் முன்னேற் றங்கள் அதிகரிக்கும். மூலதனம் இல்லாமலேயே செய்த தொழிலுக்கு மூலதனம் வந்து சேரும். பழைய கூட்டாளிகள் விலகுவர். தாய்வழித் தனலாபம் கிடைக்கும். என்ன தொழில் செய்தால் லாபம் வரும் என்பதை ஜாதகப்படி அறிந்து செய்தால் பொன்னான எதிர்காலம் அமையும்.

அடுத்த ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில் நீண்டதூரப் பயணங்கள் வந்து சேரும். நேசித்தவர்களுடன் யோசித்து பேசும் சூழ்நிலை உருவாகலாம். சகோதரர்கள் வழியில் ஏற்படும் சுபகாரியங்களை முன்நின்று நடத்தி வைப்பீர்கள். சிவகங்கை அருகில் உள்ள கொல்லாங்குடி காளியம்மன் வழிபாடும், கீழச்சிவலப்பட்டியில் உள்ள மாரியம்மன் வழி பாடும், தஞ்சை மாவட்டம் புன்னைநல்லூர் மாரியம்மன் வழிபாடும் உகந்ததாக அமையும்.

சனியின் வக்ரகாலம் .

துலாம் ராசியில் உச்சம்பெறும் சனி ஐந்து முறை வக்ரமடைந்து நிவர்த்தியாகிறார். உங்கள் ராசிநாதனாகவும், 2-ம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் சனி வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. மருத்துவச் செலவு கூடும். குடும்பப் பிரச்சினை தலை தூக்கலாம்.

இதுவரை உங்கள் ராசிக்கு 9 மிடத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் இப்பொழுது பத்தாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். பத்தாமிடம் என்பது தொழில் ஸ்தானமாகும். ராசிநாதன் தொழில் ஸ்தானத்தில் உச்சம் பெறும் பொழுது தொழில் வளம் மேலோங்கும்.

உத்யோகத்தில் இருப்பவர்கள், கூட்டுத்தொழில் செய்யும் வாய்ப்புகளும் உருவாகும். ராசிநாதனின் பலத்தைப் பொறுத்தே தனித்தியங்குவதா? கூட்டாக செய்வதா? என்பதை யோசித்துக் கொள்ளுங்கள்.

ஹபத்தில் சனி வந்தால்
பார்போற்றும் நிலை அமையும்!
மெத்தவே சுகம் கிடைக்கும்!
மேலோரின் பாசம் வரும்!
பெற்றவரின் பாசம் வரும்!
பிள்ளைகளும் ஒத்து வரும்!
முத்தான சனியதனை
முறையாக வழிபடுவீர்!"

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது பத்தாமிடத்திற்குச் சனி வந்தால் முத்தான தொழில் வாய்க்கும். பழைய தொழிலில் இருந்து மாற்றம் காண்பீர்கள். புதிய தொழில் தொடங்கும்பொழுது குடும்பத்தில் யார் பெயருக்கு தொழில் ஸ்தானம் வலுவாக இருக்கிறதோ, அவர்கள் பெயரில் தொழில் தொடங்கு வதே நல்லது.

கும்பம்

மார்கழி 5-ம் தேதி முதல் துலாம் ராசியில் சனி சஞ்சரிக்கப் போகிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் ராசிக்கு 3, 6, 11 ஆகிய இடங்களைப் பார்த்து பலன்களை வழங்கப் போகிறார். உச்ச சனியாக இருந்து பார்ப்பதாலும், அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் முடிவடைவதாலும் அற்புத பலன்கள் இனி உங்களுக்கு வந்து சேரப் போகின்றன.

பொதுவாக, சனி விலகும் பொழுது நல்லதையே செய்வார். யோக பலம் பெற்ற நாளில் சுய ஜாதக ரீதியாக வழிபாடுகளையும் மேற்கொண்டால், மாலை கிடைக்காதவர்களுக்கு மாலை கிடைக்கும். மழலை பிறக்காதவர்களுக்கு மழலை பிறக்கும். வேலை கிடைக்காதவர் களுக்கு வேலை கிடைக்கும். விருப்பங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறும். செவ்வாய் பலம் பெற்றிருப்பவர்களுக்கு வீடு கட்டும் யோகம் வந்து சேரும். குரு பலம் பெற்றிருப்ப வர்களுக்கு பதவி வாய்ப்புகள், அரச யோகம் வந்து சேரும். பணப் புழக்கம் அதிகரிக்கும்.

உங்கள் ராசிக்கு 9-ல் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை 3, 6, 11 ஆகிய இடங்களில் பதிவாகிறது. இதுவரை மன அமைதியின்றி தினமும் பிரச்சினைக்கு மத்தியில் வாழ்ந்த உங்களுக்கு மன நிம்மதி கூடப்போகிறது.

சகோதரர்கள் அடிக்கடி உங்க ளுக்கு சச்சரவுகளைக் கொடுத்தாலும் முடிவில் உங்கள் கருத்திற்கு ஒத்து வருவர். தொழில் ரீதியாக உடன் பிறப்புகள் வழியில் சேர்ந்த கூட்டு இனிப் பிரியலாம். தனித்து இயங்கினாலும், தக்க ஒருவருடைய உதவியோடு செயல்படக் கூடிய சூழ்நிலை உருவாகும். காரணம் ராகு-கேதுக்களின் ஆதிக்கம் 4 மற்றும் 10-ல் இருப்பதால் ஆறாமிடத்தைச் சனி பார்ப்பதால் எதிரிகள்சரணடைவர்.

இல்லம் தேடி நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோக உயர்வு, உத்தி யோக மாற்றம், இலாகா மாற்றங்களை எதிர்பார்த்தவர்களுக்கு குறிப்பிட்டபடி வந்து சேரும். வங்கிகளில் கடனுதவி பெற்றுச் சுயதொழில் செய்யலாம் என்ற எண்ணம் மேலோங்கலாம். ஆனால் ஆறாமிடத்தைச் சனி பார்ப்பதால் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையை உருவாக்கி விடலாம். எனவே ஒப்பந்தங்களை யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது.

சனியின் பார்வை லாப ஸ்தானத்தில் பதிவதால் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். பொருள் வளர்ச்சி கூடும். மாற்று மருத்துவம் உடல் நலத்தை சீராக்கும். அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும்.

குருப்பெயர்ச்சி காலம்!

துலாம் ராசியில் சனி சஞ்சரிக்கும் பொழுது, மூன்று முறை குருப்பெயர்ச்சி நடை பெறுகிறது. 17-5-2012ல் ரிஷ ராசியிலும், 28-5-2013ல் மிதுன ராசியிலும் 13-6-2011ல் கடக ராசியிலும் குரு பகவான் சஞ்சரிக்கப் போகிறார்.

ரிஷபத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே இழப்புகளை ஈடு செய்யும் வாய்ப்புக் கிட்டும். அஷ்டமத்துச் சனியால் மூடிக்கிடந்த தொழிலில் திறப்பு விழாச் செய்வீர்கள். வெளிநாட்டுப் பயணத்தில் இருந்த தடை அகலும்.

மிதுனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது உங்கள் ராசியில் அதன் பார்வை முழுமையாகப் பதிகிறது. அதோடு 9, 11 ஆகிய இடங்களிலும் பதிகிறது. எனவே தொட்ட காரியங்கள் அனைத்தும் நிறைவேறும், துணையாக இருந்தவர்கள் தோள் கொடுத்து உதவுவர். வெற்றிகள் வந்து சேர முன்னோர் படைப்புகளையும், மனித தெய்வ வழி பாடுகளையும் மேற் கொள்வது நல்லது.

கடகத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிவதால் குடும்பத்தில் சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். மின்சார சாதனங்களை வாங்கி மகிழ்வீர்கள்.

ராகு - கேது பெயர்ச்சிக் காலம்!

2-12-2012ல் துலாம் ராசியில் ராகுவும், மேஷ ராசியில் கேதுவும் சஞ்சரிக்கப்போகிறார்கள். 21-6-2014ல் கன்னி ராசியில் ராகுவும், மீன ராசியில் கேதுவும் உலா வரப்போகிறார்கள்.

முதல் ராகு - கேது பெயர்ச்சிக் காலத்தில் பூர்வீக சொத்துக்களில் இருந்த வழக்குத் தீரும். பங்காளிப் பகை மாறும். கூட இருப்பவர்களால் ஆதாயம் கிடைக்கும்.

அடுத்த ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில் திடீர் இடமாற்றம், ஊர் மாற்றங்கள் வந்து சேரலாம். குடும்பத்தில் குழப்பங்கள் வந்து சேரும். நிம்மதியும், நிலையான செல்வமும் வந்து சேர சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்வது நல்லது. அஷ்டமத்தில் சஞ்சரிக்கும்

18 ஆம் பக்கம் பார்க்க

சாந்தி நான் தான் மனோவை நீ காதலித்தால் குறைந்தா போய்விடுவாய் எனக் கட்டாயப் படுத்தினாள். அதை நான் இல்லையென்று சொல்லமாட்டேன். ஆனால் நீயோ மனோவிடம் உன்னை யல்லவா கொடுத்துவிட்டு வந்து நிற்கின்றாய். அத்துடன் அவனின் வாரிசையும் அல்லவா சுமந்து கொண்டு நிற்கின்றாய். பவானி ஒரு விபத்து போல் எல்லாம் நடந்து முடிந்து விட்டது. நாமிருவர் எம்மைத் தவிர யாருமற்ற தனிமை. தவறு நடப்பதற் குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்து விட்டது.

சாந்தி சந்தர்ப்பத்தை ஆண்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி விடுவார்கள். நாங்கள் பெண்கள் தான் சந்தர்ப்பக்களுக்குள் சிக்காது விலத்தி நடக்கப்பழக வேண்டும். பவானி நீ என்னுடைய நண்பி. எனக்குச் சரியான பயமாக இருக்குதடி. இந்த இக்கட்டான சூழ்நிலையில் என்ன செய்யலாம் என நினைக்கின்றாய். சாந்தி உன்னுடைய எல்லா வேதனைகளுக்கும் மனோவின் கடிதம் தான் மருந்தாக அமையும். அவனுடைய கடிதம் வரும்வரைக்கும் நீ பொறுமையாக இருப்பது தான் சிறந்தது. அவனுடைய கடிதம் உனக்கு ஒரு துருப்புச்சீட்டாக அமையும். அதன் பிறகு உன்னுடைய பெற்றோர்கள் உனது காதலை ஏற்றுக்கொள்ளும் நிலையொன்று உருவாகலாம். சாந்தி இதில் என்ன பகிடியென்றால்.

எல்லோரும் திருமணம் முடித்த பிறகு தான் பிள்ளையைப் பெற்றுக் கொள்வார்கள். ஆனால் நீயோ பிள்ளையைப் பெற்றுப்போட்டு தான் திருமணம் செய்து கொள்ளப் போகின்றாய். பவானி என்னுடைய நிலமையைத் தெரியாமல் பகிடி விட்டுக்கொண்டு இருக்க வேண்டாம். பவானி சில வேளை மனோவின் கடிதம் வராவிட்டால் என்ன செய்வது. சாந்தி மனோ மேல் நம்பிக்கை யில்லாமலா உன்னையே நீ

தொடர்கதை
கரை சேர்ந்த உள்ளங்கள்
பாகம் 32 சோ. சோதிபாலன்

கொடுத்தாய். அவன் மேல் எவ்வளவு நம்பிக்கை உனக்கு இருந்திருக்க வேண்டும். அவனுடைய கடிதம் கட்டாயம் வருமென நம்பியிருக்கவும். பவானி எவ்வளவு காலத்திற்கு வயிற்றில் வளர்ந்து கொண்டிருக்கும் பிள்ளையை மறைக்க முடியும். சாந்தி எத்தனையோ பெண்கள் குழந்தையை பெற்று குப்பைத் தொட்டியில் போடும் வரைக்கும் மறைக்கின்றார்கள்.

நீ பேப்பர் படிப்பதில்லையா? சாந்தி நான் சும்மா உதாரணத்திற்காக தான் சொன்னேன். என்னைத் தப்பாக நினைக்க வேண்டாம். மனோவின் கடிதம் வரும்வரைக்கும் நீ மறைத்துத் தான் ஆகவேண்டும். சரி பவானி அப்படியே செய்வோம். மனோ கனடாவிற்குப் போய் மூன்று மாதங்கள் ஆகின்றது. அவனிடம் இருந்து எந்தக் கடிதமும் எனக்கு வரவில்லை. அவன் கனடாவில் எந்தப் பிரச்சனையில் இருந்தாலும் ஒரு நாலு வரியில் கடிதம் எழுதி போடுவதற்குக் கூட நேரம் இல்லாமலா இருக்கின்றான்.

என்னை ஏமாற்றி விட்டானோ? என நினைக்கத் தோன்றியது. என்னையே கொடுக்கும் அளவிற்கு அவன் மேல் நம்பிக்கை வைத்திருந்தேனே? இப்படியொரு இக்கட்டான நிலை எந்தப் பெண்ணிற்கும் வந்துவிடக்கூடாது. என்னுடைய கணக்கின்படி எனக்கும் மூன்று மாதம் முழுமையாக முடிந்து நாலாவது மாதத்தில் காலடி எடுத்து வைத்தேன். வயிரும் கொஞ்சம் கொஞ்சமாக பெரிதாக வந்தது.

உடல் நிலையும் ஏலாமல் இருந்தது. மனப் பாரம் ஒரு புறம். யாரிடமும் சொல்லி ஆறமுடியாத போராட்டம். உடல் உளரீதியாக பெரிதும் பாதிக்கப் பட்டேன். என்னுடைய காதலை



வேணுமென்றால் மறைத்து விடலாம். ஆனால் வயிற்றில் வளர்ந்து கொண்டிருக்கும் பிள்ளையை எவ்வளவு காலத்திற்கு மறைக்க முடியும். எனக்கு யாராவது ஆறுதலாக இருக்கமாட்டார் களா என ஏங்கினேன்.

என்னால் பொறுமையாக இருக்க முடியவில்லை. இனிமேல் எதையும் மறைப்பதால் பலனில்லை. என்றோ ஒரு நாள் தெரியத்தானே போகின்றது. அது இன்றே தெரிந்து விட்டுப் போகட்டுமே. பயந்து பயந்து சாவதைவிட யாராவது என்னைக் கொன்று விட்டால் நிம்மதி யாகப் போய் விடலாம் என நினைக்கத் தோன்றியது. யாரிடமும் சொல்லாமல் அனுபவிக்கும் மனவேதனையைவிட யாரிடமும் சொல்லி பெற்றுக் கொள்ளும் தண்டனை சிறந்ததென முடிவெடுத்தேன்.

சாவதற்குக் கூடத் தயாராகிவிட்டேன். இனி ஏன் பயப்பட வேண்டும். மனதை திடப்படுத்திக் கொண்டேன்.

நான் சொல்லப் போகும் விசயத்தால் தீர்வு கிடைக்குதோ இல்லையோ கட்டாயம் தண்டனை மட்டும் கிடைக்கும் என்பதை உறுதியாக நம்பினேன். பயத்துடன் கூடிய துணிவு என்னை ஆட்கொண்டது. அப்பாவும் அம்மாவும் கோலில் இருந்து ஏதோ கதைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களை நோக்கி வந்தேன். நடந்த சம்பவங்களை எல்லாம் அழுதபடி ஒன்றும் விடாமல் இருவருக்கும் கூறினேன்.

அப்பா ருத்ர தாண்டவம் ஆடுவார் என எதிர்பார்த்தேன். அவர் எதுவுமே கதைக்காமல் அமைதியாக இருந்தார். அப்பாவினுடைய அசாதரண அமைதி எனக்கு அச்சத்தை ஊட்டியது. அம்மா விற்குக் கோபம் தலைக்கேறியது. தாறுமாறாக எனக்கு அடித்தார். என்னுடைய தங்கை சுகந்தி ஓடிவந்து அம்மா அக்காவிற்கு அடிக்க வேண்டாம் என தடுத்தாள். அம்மா என்னைக் கொன்றுவிடுங்கள்.

நான் நிம்மதியாகப் போய்விடு கின்றேன். அடியே சாந்தி பெண்புத்தி பின்புத்தி என்று சொல்லுவார்கள் பிள்ளையும் வயிற்றில் சுமந்து கொண்டல்லவா வந்து நிற்கின்றாய். நாங்கள் இவ்வளவு காலமும் கட்டிக் காத்து வந்த குடும்ப கௌரவம் எல்லாம் கப்பல் ஏறப்போகும் நிலை யல்லவா வந்துவிட்டது. இனி எந்த முகத்தோடு வெளியில் தலைகாட்டப் போகின்றோமோ தெரியாது. ஒரு பெண் எதை இழக்கக்கூடாதோ அதை யல்லவா இழந்து விட்டு வந்து நிற்கின்றாய்.

20ஆம் பக்கத் தொடர்ச்சி

தான் முதல் முறையாக காந்தியை சந்தித்தனர். அதன் பின்னர் எனது தாய் பென்சிலால் அவரது உருவத்தை ஓவியமாக தீட்டி வந்தார். காந்தியுடன் என் பெற்றோர் நட்பு கொண்டிருந்தனர் என்றார். இந்த அபூர்வ ஓவியங்கள் வரும் 24ம் திகதி லண்டன் லட்லோ ரேஸ்கோர்ஸ் வளாகத்தில் அபூர்வ மனிதர்களின் வாழ்க்கை வரலாறுகள் சரித்திர புகழ்பெற்ற ஆவணங்கள் ஆகியவற்றை ஏலம் விடும் நிகழ்ச்சியில் ஏலம் விடப்படுகின்றன.

9ஆம் பக்கத் தொடர்ச்சி

நமது மீனவர்களைப் பாது காக்கும் பொறுப்பும் கடமையும் மத்திய அரசுக்கு உண்டு. தமிழ்நாட்டு மீனவர்களை இந்தியக் குடிமக்க ளாகவே அரசு கருதவில்லை என்று மத்திய அரசில் அங்கம் வகிக்கும் ஒரு தமிழக அமைச்சர்கூட எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

தமிழகத்தின் பல கனவுப் பெருந்திட்டங்கள் நீண்டகாலமாகவே கிடப்பில் கிடக்கின்றன. மேற்கு நதிநீரைக் கிழக்கே தமிழ கத்துக்குத் திருப்புதல், கங்கைகாவிரி இணைப்புத் திட்டம், சேதுக்கால்வாய் திட்டம் போன்ற நிறைவேறாத திட்டங்கள் பல உண்டு. ஆனால், முன்னவை இரண்டும் பரிசீலனைக்கே எடுத்துக்கொள்ளப படாத நிலையில் சேதுக்கால்வாய்த் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு, கோலாகலமான தொடக்க விழா மதுரையில் நடத்தப்பட்டது.

சோனியா காந்தி, மன்மோகன் சிங், கருணாநிதி போன்றவர்கள் பங்கெடுத் துக் கொண்டனர். வேகமாக வேலை களும் தொடங்கப்பட்டு 3,000 கோடி ரூபாவுக்கு மேல் கடலில் கொட்டப பட்டது. ஆனால், இராமர் பாலம் என்ற பிரச்சினையை முன்வைத்து இத்திட்டத்துக்குச் சவக்குழி தோண்டப் பட்டது. பல்லாண்டு காலமாக இந்தத் திட்டம் செயலற்றுக் கிடக்கிறது. நூறாண்டு காலத்துக்கு மேலான தமிழர்களின் கனவுத் திட்டமாகும் இது. இத்திட்டத்தின் எதிர்காலம் என்ன என்பது தெரியாமல் தமிழகம் இருளில் வைக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றம் விதித்த தடையாணையை விலக்கி இத்திட்டத்தை தொடர்வதற்கான நடவடிக்கை எதனையும் மத்திய அரசு மேற்கொள்ளவில்லை. மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தமிழக அமைச்சர் களும் அதைப்பற்றிக் கவலைப்பட வில்லை.


பிற தென்மாநிலங்கள் தங்களுக்குத் தேவையில்லை என்று ஒதுக்கித் தள்ளிய அணு மின் திட்டத்தைத் தமிழகத்தின் தலையில் கட்டியது மத்திய அரசு. கூடங்குளம் அணுமின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் முக்கத் தமிழகத்துக்குக் கிடைத்தாலும் பரவா யில்லை. ஆனால், பிற தென்மாநிலங் களுக்கும் அதில் பங்களித்துவிட்டு எஞ்சியதுதான் தமிழகத்துக்குக் கிடைக்கும். ஆனால், அணு உலை வெடிக்குமானால் அதனால் வரும் அபாயம் முழுக்க முழுக்க தமிழகத் துக்கு மட்டுமே. இதுதான் மத்திய அரசு தமிழனுக்கு வழங்கி யிருக்கும் நீதியாகும்.

இந்திய அரசியலில் தமிழகம் பகடைக்காய் ஆக்கப்பட்டுவிட்டது. ஒரு காலத்தில் மத்திய அரசில் தமிழகத்துக்கு இருந்த செல்வாக்கின் விளைவாக பெரும் கனரகத் திட்டங்கள் தமிழகத்தில் தொடங்கப்பட்டு தமிழகம் தொழில் வளத்தில் இந்தியாவில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியது. ஆனால், இன்று தமிழகம் ஒவ்வொரு துறையிலும் பின்னோக்கிச் செல்கிறது.

இதுவரை இந்திய வரலாறு கண்டறியாத வகையில் அலைக்கற்றை ஊழல் போன்ற மாபெரும் ஊழலைச் செய்து ஒட்டுமொத்தத் தமிழகத்தைத் தலைகுனிய வைத்து திகார் சிறை யாளர்களாக மாறிய சாதனைக் குரியவர்கள் தமிழர்கள் என்ற பெருமை மட்டுமே இப்போது டில்லியில் எஞ்சி நிற்கிறது. இந்திய அரசியலை ஒரு காலகட்டத்தில் தூணாகத் தாங்கி நின்ற தமிழன் இப்போது சிறு துரும்பாகக் கருதப்பட்டு அலட்சியப் படுத்தப்படு கிறான். காரணம், தங்களது பதவி சுகத்துக்காக மத்திய அமைச்சர வையில் அங்கம் வகிக்கும் ஒரு தமிழக அமைச்சர்கூடத் தமிழகத் தின் நலனுக்காகக் குரலெழுப்பத் தயாராக இல்லை. மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜிக்கு இருக்கும் வீரம், வேட்டி கட்டிய தமிழக அமைச்சர்களில் ஒருவருக்குக்கூட இல்லாததுதான் என்பதை நாம் சொல்ல வேண்டாம், இந்தியாவே கூறும்.


தூணாய் நின்ற தமிழன் துரும்பானதன் காரணம் இதுதான் என்று சத்திரம் இவர்களை இகழும்!

கனகாம்பிகை தங்க நகை மாளிகை



22கரட் அசல் தங்க ஆபரணங்கள்
வைரக்கற்கள் (பவளம் முத்து)
மாணிக்கக் கற்கள், காது குத்துதல்
நவரத்தின மோதிரங்கள்
பரிசுப் பொருட்கள், தாலிக்கொடி

சிங்கப்பூர் புதிய டிசைன் நகைகள் அனைத்தும் நகரில் வேறு எங்கும் பெறமுடியாத மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
குறித்த நேரத்தில் உங்கள் எண்ணங்களுக்கு ஏற்றவாறு நகைகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்.



அரச அங்கீகாரம் பெற்ற
அடைவு நகைமாடம்

3160 Eglinton Ave. East, Unit 3, Scarborough, ON. MIJ 2H3
Tel: 416-269-7198

சனிப் பெயர்ச்சிப் பலன்கள்

16ஆம் பக்கத் தொடர்ச்சி

ராகுவிற்கு அவசியம் பரிகாரம் செய்ய வேண்டும்.

சனியின் வக்ரகாலம்

துலாம் ராசியில் சனி உச்சம் பெறும்பொழுது ஐந்து முறை வக்ரமடைந்து நிவர்த்தியாகிறார். உங்கள் ராசிக்கு அதிபதியாகவும், 12-க்கு அதிபதியாகவும் இருப்பதால் இந்த வக்ர இயக்கம் வளர்ச்சியையும் கொடுக்கும், தளர்ச்சியையும் கொடுக்கும். உடல் நலத்திற் கென்று ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும். பொது வாழ்வில் கொடுக்கப்பட்ட பொறுப்புகளில் மாற்றம் ஏற்படும். இக்காலத்தில் எள் தீபம் ஏற்றி சனி கவசம் பாடி வழிபடுவது நல்லது.

இதுவரை உங்கள் ராசிக்கு எட்டாமிடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், இப்பொழுது ஒன்பதாம் இடத்தில் அடியெடுத்து வைக்கப் போகிறார். ஒன்பதில் உச்சம்பெறும் சனி பொன், பொருள்களையும் கொடுப்பார்.

ஹஒன்பதில் சனி வந்தால்
உயர்வுகள் வந்து சேரும்!
பண்பிலார் பழக்கம் மாறும்!
பகையெல்லாம் விலகி ஓடும்!
நண்பர்கள் அதிகம் சேர்வர்!
நல்லதோர் பதவி வாய்க்கும்!
கண்படும் விதத்தில்- உங்கள்
கனிவான வளர்ச்சி கூடும்!" என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் தொழிலில் லாபம் கூடும். தொல்லை தந்த எதிரி கள் விலகுவர். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். நண்பர்கள் நல்ல காரியத்தை முடித்துக் கொடுப்பர். வீடு கட்டி குடியேறும் யோகம் உண்டாகும்.

மீனம்

மார்கழி 5-ம் தேதி முதல் துலாம் ராசியில் சனி சஞ்சரிக்கப் போகிறார். அங்கிருந்து கொண்டு முறையாக, 2, 5, 10 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கும் சனி, எதையும் திட்டமிட்டு செய்ய இயலாத சூழ்நிலையை ஏற்படுத்தும்.

அஷ்டமத்துச்சனியின் ஆதிக்கத்தில் அடிக்கடி ஆரோக்யத்தில் அச்சுறுத்தல் ஏற்படும். எனவே, நோய்க்கான அறிகுறி தெரியும் முன்பே அதற்குரிய மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. உங்கள் ராசியைப் பொறுத்தவரை சனி பனிரெண்டாமிடத்திற்கும் அதிபதி என்பதால், 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கிணங்க, நீங்கள் திட்டமிடாது செய்யும் காரியங்கள் வெற்றி பெற்று மகிழ்ச்சியைக் கொடுக்கும். நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

இருப்பினும், சனியின் ஆதிக்கத்தில் சிக்கி இருக்கும் உங்களுக்கு சந்தோ'ங்களே நாளும் வந்து சேரவும், பிள்ளைகளால் ஏற்பட்ட தொல்லைகள் அகலவும், பிரச்சனைகளி லிருந்து விடுபடவும், ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதம் இருப்பதோடு, எட்டு எள்தீபம் ஏற்றி, சனி கவசம் பாடி சனி பகவானை வழிபட்டு வாருங்கள். கும்பகோணம் அருகில் உள்ள கதிராமங்கலம் வனதுர்க்கை, மதுரை நகரின் மத்தியில் உள்ள நன்மை தருவார் கோவில், தஞ்சை பெரிய கோவிலில் உள்ள விஸ்வரூப நந்தீஸ்வரர் ஆகிய தெய்வ வழிபாடுகளை இது போன்ற காலங்களில் மேற்கொண்டால், நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். குல தெய்வ வழிபாட்டிலும் கவனத்தை செலுத்துங்கள்.

உங்கள் ராசிக்கு 8-ல் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை 2, 5, 10 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது. வீட்டு பராமரிப்புச் செலவுகள் கூடும் சேமிப்புகள் கரையும். கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலுமா? என்பது சந்தேகம் தான்.

சனியின் பார்வை 5-ம் இடத்தில் பதிவதால் பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட பிரச்சனைகள் படிப்படியாக தீரும். அவர்களின் உயர் கல்விக்காகச் செலவிடுவீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். வெளிநாட்டு முயற்சியிலும் வெற்றி கிடைக்கும்.

சனியின் பார்வை 10-ம் இடத்தில் பதிவதால் புதிய தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் கைகூடி வரலாம். ஆனால் கூட்டாளிகள் சரியானவர்களா? என்பதை யோசித்துக் கொள்ளுங்கள். பங்குதாரர்கள் சரியாக அமையாவிட்டால் ஏமாற்றத்தைச் சந்திக்கும் சூழ்நிலை உருவாகும் அல்லவா? எனவே விழிப்புணர்ச்சி கூடுதலாகச் செலுத்த வேண்டிய நேரமிது. பெற்றோர்களின் உடல்நலத்திலும் கவனம் தேவை.

குருப்பெயர்ச்சிக் காலம்!

துலாம் ராசியில் சனிபகவான் சஞ்சரிக்கும் பொழுது மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெறப் போகிறது. 17.5.2012ல் ரி'பத்திலும், 26.5.2013ல் மிதுனத்திலும் 13.6.2014ல் கடகத்திலும் குரு சஞ்சரிக்கப் போகின்றார்.

ரிஷபத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை பலத்தால் 7, 9, 11 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன. எனவே கல்யாணக் கனவுகள் நனவாகும். கொடி கட்டிப் பறந்த குடும்ப பிரச்சனைகள் அகலும்.

மிதுனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே இழப்புகளை ஈடுசெய்ய வாய்ப்புகள் உருவாகும். இருப்பினும் ஆலங்குடியில் உள்ள குரு தெட்சிணாமூர்த்தி, திருவெண்காடு, மேதா தெட்சிணாமூர்த்தி, திருச்செந்தூர் முருகப் பெருமான் மற்றும் தெட்சிணாமூர்த்தி, திசைமாறிய தென்முகக் கடவுளான சிவகங்கை மாவட்டம் பட்டமங்கலம் தெட்சிணாமூர்த்தி நெடுங்குடி கைலாச நாதர் திருக்கோவில் தெட்சிணாமூர்த்தி மற்றும் அறுபத்து மூவர் வழிபாடுகளையெல்லாம் தாராபலம் பெற்ற நாட்களில் செய்து வந்தால் தடைக் கற்கள் எல்லாம் படிக்கற்களாக மாறும். இடையூறாக வந்த எதிரிகளும் விலகுவர்.

கடகத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை 1, 9, 12 ஆகிய இடங்களில் பதிவதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். பதவி வாய்ப்புகள் வந்து சேரும். வீடு கட்டிக் குடியேறும் முயற்சியிலும் வெற்றி காண்பீர்கள்.

ராகு-கேது பெயர்ச்சிக்காலம்

2.12.2012ல் துலாம் ராசியில் ராகுவும், மே' ராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். 21.6.2014-ல் கன்னி ராசியில் ராகுவும், மீன ராசியில் கேதுவும் உலாவரப் போகிறார்கள்.

முதல் ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். எதிர்பாராத சில இழப்புகளைச் சந்திக்க நேரிடும். குடும்பத்தில் இருப்பவர் களை அனுசரித்துச் செல்வது நல்லது. பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

அடுத்த ராகு கேது பெயர்ச்சிக் காலத்தில் நீண்ட தூரத்திற்கு மாறுதல் ஆகும் வாய்ப்பு கிட்டும். சுய ஜாதகம் வலுவாக இருந்தால் அந்நிய தேசப் பயணம் கூட கிட்டும். மன நிம்மதிக்கு கும்பகோணம் அருகில் உள்ள பட்டீஸ்வரம் சென்று துர்க்கை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். 2, 9-க்கு அதிபதியாக செவ்வாய் விளங்குவதால் சிவகங்கை மாவட் டம் குன்றக்குடியில் வீற்றிருந்து அருள் வழங்கும் ஆறுமுகப் பெருமான், வள்ளி -தெய்வானையையும் வழிபட்டு வாருங்கள்.

சனியின் வக்ரகாலம்

துலாம் ராசியில் உச்சம் பெறும் சனி ஐந்து முறை வக்ரமடைந்து, நிவர்த்தியாகிறார். உங்கள் ராசிக்கு 11, 12-க்கு அதிபதியான சனி வக்ரம் பெறுவதால் வளர்ச்சியும், தளர்ச்சியும் இணைந்தே செயல்படும். 12-க்கு அதிபதி வக்ரமடைவது நல்லதுதான். பணம் பலவழிகளிலும் வந்து பையை நிரப்பும். லாபாதிபதி வக்ரம் பெறுவதால் உடனுக்குடன் அது செலவாகி விடும். எனவே இந்த வக்ரகாலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் செயல்படுவது நல்லது.

இதுவரை உங்கள் ராசிக்கு சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், ஏராளமான குடும்பப் பிரச்சனைகளைச் சந்திக்க வைத்திருப்பார். 11, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனிபகவான், லாபத்தைக் கொடுத்தாலும் இருமடங்கு விரயத்தையும் கொடுத்திருப்பார். வங்கிச் சேமிப்பு கரைந்திருக்கலாம். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடல்நிலைத் தொல்லைகளைக் கொடுத்து மனநிம்மதியையும் இழக்க வைத்திருக்கலாம்.

எட்டில் சனி வந்தால்,
எதிர்பாரா மாற்றம் வரும்!
பெட்டிப் பணத்திற்கும்
பெரும் விரயம் காத்திருக்கும்!
ஒட்டும் உறவெல்லாம்,
ஒதுங்கிவிடும் என்றாலும்,
வெற்றி வர சனியதனை,
விரும்பி வணங்கிடுவீர்!"

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

சனியை நம்பினால் சந்தோஷம் கிடைக்கும். பணியில் ஏற்பட்ட தொய்வும் அகலும். பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கையும் கூடும். வீடு மாற்றம், இடமாற்றங்கள், நாடு மாற்றம், வாகன மாற்றம் போன்றவைகள் விரும்பியபடியே அமையும்.

வடக்கில் உள்ள பாடசாலைகள் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து நேரடியாக உதவிகளைப் பெற முடியாது

இது தொடர்பான சுற்றுநிருபத்தைக் கீழே காணலாம்

மொழிபெயர்ப்பு

கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சு

வட மாகாண சபை

செம்மணி வீதி. நல்லூர், யாழ்ப்பாணம்.

எனது இல:-NP/03/06/NEEDS   Date:-13.12.2011

1. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
2. சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
3. சகல பாடசாலை அதிபர்கள்
4. பணிப்பாளர்கள், பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
5. பணிப்பாளர்கள், விளையாட்டுத் திணைக்களம்

வடமாகாணக் கல்வி நிறுவனங்களுக்கிடையில் சுற்றறிக்கையிடப்படுவதற்கான முக்கிய விடயங்கள் தங்கள் திணைக்களம்/ நிறுவனங்களுக்கிடையில் சுற்றறிக்கையிடப்படுவதற்காகப் பின்வரும் விடயங்கள் தங்களுக்கு அறிவிக்கப்படும் படியாக வடமாகாண கௌரவ ஆளுநர் எனக்குப் பணித்தள்ளார்.

1. எதிர்காலத்தில் எந்த ஒரு அலுவலரும், கல்வியமைச்சின் செயலாளர் - பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு அவர்களின் அனுமதியின்றி எந்த ஒரு முகவருக்கும் வேண்டுகோள்களையோ / முன்மொழிவுகளையோ சமர்பிக்கக்கூடாது.
2. வேளிநாட்டு / உள்நாட்டு நிறுவனங்களுடன் அல்லது குழுக்களுடன் கூட்டுச் சேரவோ அல்லது அவர்களிடமிருந்து நேரடி உதவிகளைப் பெறுவதற்கோ தாங்கள் அனுமதிக்கப்படவில்லை.அங்ஙனம் எவராவது /ஏதாவது நிறுவனம் முன்வந்து உதவும்பொழுது அதுபற்றி உடனடியாக செயலாளர், கல்வியமைச்சு மற்றும் மாகாணகல்விப் பணிப்பாளர் ஆகியோருக்க அறிவிக்கப்படல் வேண்டும்.
3. கல்வி நிறுவனங்களின் சகல பாடசாலைகளினதும் பாடசாலை அபிவிருத்தி குழுவை (SDC) பதிவுசெய்வதற்கான உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.பதிவு செய்யப்படாத பாடசாலை அபிவிருத்திக் குழுவினது செயற்பாடுகள் எதிர்காலத்தில் அனுமதிக்கப்படமாட்டாது.
4. நிதி, உபகரணம், தளபாடம், வாண்மைப்பயிற்சி போன்றவிதமாக அளிக்கப்படும் அன்பளிப்புகளை வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் மற்றும் மாகாணகல்விப்பணிப்பாளரின் அனுமதியின்றி ஏற்றுக் கொள்ளக்கூடாது.


மேற்கூறிய விடயங்களுக்கு அமைவாக செயற்படாத அலுவலர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மனவருத்தத்'துடன் அறியத்தருகின்றேன். இந்த விடயம் தொடர்பாக உடனடிக் கவனம் எடுக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள்(ZDE) வேண்டப்படுகின்றீர்கள்.
இக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்ட மேற்கூறிய விடயங்களை தங்களின் மேற்பார்வையின் கீழ் செயற்படும் சகல நிறுவனங்களினதும் கவனத்திற்கு கொண்டு வரவும்.

L.இளங்கோவன்

செயலாளர்

பிரதி:-

1. ஆளுநரின் செயலாளர், வ.மா
2. மா.க.ப. வ.மா
3. பிரதம செயலாளர், வ.மா



பின்பனிக் காலம்

(பிரயாணக் கதை)

23

கற்பனைச் சிற்பி
பசுந்தீவு கோவிந்தன்

இது உனக்குக் கிடைச்சிருக்கின்ற நல்லதோர் சந்தர்ப்பம் என்று எண்ணிக்கொண்டு ஏறு, நாங்கள் உதவி பண்ணுகிறம்,'' என்று சொன்னதும் உசார் அடைந்த அருள் ஏறிக்கொண்டான் கீசனதும் கோவிந்தனதும் உதவியுடன். ஆரம்பத்தில் நடந்துசென்ற குதிரை அப்புறம் மெதுவாய் ஓடத் தொடங்கியது. தொடர்ந்து சற்று வேகமாய் ஓடப்பண்ணினான் கீசன். பத்து யார் அளவில் ஓடியதும் 'ஐயோ' என்று குளறும் சத்தம் கேட்டது. மறுகணம் உருண்டு விழுந்தான் அருள்.

உடனே கோவிந்தும் கீசனும் ஓடிச்சென்று ஆளைத் தூக்கி இருத்திக்கொண்டு,

"உனக்கு ஒன்றும் ஆகவில்லையே! தலைகிலை அடிபடவில்லையே?" என்று சற்று பதட்டத்துடன் கேட்டனர். உடனே ஒன்றும் பேசமுடியாதிருந்த அருள் சில நிமிடங்கள் கழித்து,

''தலை அடிபட்டதாய்த் தெரியவில்லை. வலது கை நல்லாய் உராயப்பட்டுள்ளது. வேறு பெரிய பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளதாய்த் தெரியவில்லை. எதற்கும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்,'' என்று கூறிக்கொண்டு மெதுவாக எழும்பினான். அப்பொழுது கீசன்,

"நல்ல காலம், பாரதூரமாய் ஒன்றும் நிகழாமல் தப்பிவிட்டீர்கள். குதிரையால் விழுபவன் இப்படி தப்புவது அரிது. உங்களுடைய நல்லகாலம் என்பதைவிட எங்களுடைய நல்லகாலம் என்றுதான் சொல்வேண்டும். விசேடமாய் கோவிந்தினுடைய நல்லகாலம் என்றுதான் சொல்ல வேண்டும். நீர் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நீர் ஊருக்குத் திரும்பிப் போவதற்கு முன் எல்லாம் சரியாய்ப் போய்விடும்,'' என்று கூற அதைக் கேட்ட அருள் மற்றையவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக புன்சிரிப்பை உதிர்த்துக்கொண்டு,

"நான் ஒன்றைப் பற்றியும் கவலைப்படவில்லை. காரணம் குதிரையால் விழுந்தாலும் குதிரைச் சவாரி பண்ணி எனது வாழ்நாளில் ஒரு சாதனை புரிந்திருக்கிறேன் என்ற ஒரு மனத்திருப்தி, சந்தோசம் ஏற்பட்டுள்ளது. விழுவதற்கு முன் ஆகாயத்தில் பறப்பது போன்ற உணர்வை அனுபவிக்க முடிந்தது. அந்த உணர்வு நான் சவாரி பண்ணியுள்ளேன் என்பதற்குச் சாட்சி. அது போதும். வாழ்க்கையிற் பெரிய ஓர் அனுபவம்,'' என்றுகூற நண்பனின் உணர்வினைப் புரிந்துகொண்டவன் போன்று.

"நீ ஒரு நிமிடம் நல்ல சவாரி பண்ணினாய் அருள். அதைப் பார்த்து நாங்களே சந்தோசப்பட்டோம். அது பெரிய சாதனை. நெடுந்தீவிற் பிறந்து வளர்ந்த எத்தனையோ பேர், அதாவது பெரும்பாலான மக்கள் குதிரைச் சவாரி பண்ணவில்லை. அப்படி இருக்கும்போது நெடுந்தீவைப் பார்க்க வந்த நீ குதிரைச் சவாரி பண்ணியிருக்கிறாய் என்றால் அது ஒரு சாதனை,'' என்று கூறினான் கோவிந். இதைக் கேட்டு மேலும் உசாரடைந்த அருள்,

"சரியாய்ச் சொன்னாய் கோவிந். இது எனது வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வு மட்டுமல்ல, இதை ஒரு சாதனையாகவும் கருதுகிறேன். இந்த ஊரில் ஏற்கனவே பெற்றுக்கொண்ட ஈச்சம்முள்ளு, தேனீக்கள், சவர்த்தண்ணீர் என்பனவற்றுடன் குதிரைச் சவாரியும் சேர்ந்து கொள்ளட்டும். இந்த ஊர் வாழ்க்கையிலும் ஒரு திறிலும் சந்தோசமும் இருக்கத்தான் செய்கின்றன,'' என்று சொல்லிப் பெருமிதம் பட்டுக்கொண்டான். இதைப் பார்த்த கீசன்,

"இன்னொரு தடவை சவாரி பண்ணிப் பார்க்கப் போறீங்களா?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டான். உடனே ஒரு வழிந்த சிரிப்போடு,

"வேண்டாம் வேண்டாம், இவ்வளவு சாதனையும் போதும்,'' என்று கூற, அவனின் உள்ளக்கிடக்கையைப் புரிந்துகொண்ட கீசன் கோவிந்தைப் பார்த்து,

''அப்ப... போயிட்டு வாறன் மணியண்ண,'' என்று கூறிவிட்டு பாய்ந்து ஏறினான் குதிரையின் மீது. மறுகணம் புளுதி கிளம்பப் பறந்தது குதிரை. அதைப் பார்த்து நன்கு ரசித்துக்கொண்டு நின்ற அருளைப் பார்த்து,

"கிளம்புவமா அருள்,'' என்றான் கோவிந். குதிரை போன போக்கைப் பார்த்து ரசித்துக் கொண்டு நின்ற அருளுக்கு கோவிந் சொன்னது கேட்கவில்லை. மறு நிமிடம்,

"என்னமாதிரி மச்சான் உனது நண்பன் சவாரி பண்ணிக்கொண்டு போகிறான். பார்க்க ஆசையாய்த்தானிருக்கு,'' என்று சொல்லிக்கொண்டு கோவிந்தைப் பார்த்தான். உடனே கோவிந்,

"நீ சொல்லுவது உண்மைதான். அதற்கு நிறையப் பயிற்சி வேண்டும். அது சரி..... இப்ப நாமள் கிளம்புவமா?'' என்றான் மறுபடியும். கிளம்பிச் சென்றுவிட்டனர். அன்றைய பொழுது இவ்வாறு கழிந்துவிட்டது.

மறுநாட்காலை இருவரும் வெளியே கிளம்பிச் சென்று கொண்டிருந்தபொழுது எதிரில் தம்பு வந்துகொண்டிருந்தான். அவனின் தலையில் ஒரு கடகம், கடகத்திற்குள் ஒரு புதிய மண்பானை, பானையிற்குள் ஓர் அகப்பை என்பன காணப்பட்டன. அவனோடு அவனுடைய அம்மா, ஒரு தம்பி, ஒரு தங்கை. அவர்களுடைய கைகளில் ஓலைப் பைகளும் அவற்றுள் சில பொருட்களும் இருந்தன. அவர்களைப் பார்த்ததும் கோவிந்திற்கு அனுபவம் பேசியது. உடனே

"எந்தக் கோயிலுக்குப் பொங்கல்? நேத்திக் கடனை நிறைவேற்றப் போய்க்கொண்டிருக்கிறீங்கள் போலும்?'' என்று கேட்டதும் நண்பன் சரியாக ஊகித்துக் கொண்டான் என்பதைப் புரிந்துகொண்டு,

"எப்படி கோவிந் சரியாகக் கண்டுபிடிச்சாய்,'' என்றான். எனக்கொன்றும் விளங்காது போல் கேட்கிறான் என்று எண்ணிய கோவிந்,

"என்ன கேள்வி கேட்கிறாய் மச்சான்! நான் என்ன அமெரிக்காவிலிருந்தே வந்தனான்? இதைப்போல எத்தனை தடவை நான் காவியிருப்பேன். அதை விட்டிட்டு எந்தக் கோயிலுக்குப் போகிறாய் என்று கொல்லு நானும் அப்புறம் வாறன்,'' என்று சொன்னதுதான் தாமதம்,

"வேறெங்க போறது? நம்ம நெடுங்குளம் வயிரவருக்குத்தான் பொங்கல்,'' என்றதும் அதை ஆமோதிப்பவர் போன்று தம்புவின் அம்மா,

"ஓம் மணித்தம்பி, நெடுங்குளம் வயிரவர் கோயிலுக்குத்தான் போகிறம். ஆறுமாதத்திற்குமுன் எனது கடைசி மகனுக்கு பொக்கிளிப்பான் வந்தது.

(தொடரும்)

இவ்வாரப் பலன்



மேடம்: உத்தியோகத்தில் இருந்து வந்த மறைமுக எதிர்ப்புகள் குறையும். செய்தொழிலில் ஏற்பட்டிருந்த குழப்பநிலை, கடன் சுமை குறையத் தொடங்கும். அரசாங்க அதிகாரிகளால் வந்த தொல்லை நீங்கும். கணவன் மனைவியிடையே இருந்து வந்த மனவேறுபாடுகள் குறையும். வியாபாரிகளுக்கு இதுவரை இருந்துவந்த கடன் தொல்லை, சிக்கல் குறையும்.



இடபம்: திடீர் திடீரென எதிர்பாராத செலவுகள் வந்து சேரும். செய்தொழிலில் தடைகளும், தாமதங்களும், எடுக்கும் முயற்சிகளில் ஏமாற்றங்களையும் தவிர்க்க இயலாது. வியாபரிகளுக்கு பணப்புழக்கம் குறைய ஆரம்பிக்கும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவால் மருத்துவச் செலவுகள் ஏற்படும். வழக்குகளில் சாதமான முடிவு கிடைக்காது.



மிதுனம்: எடுத்த காரியம் எல்லாம் வெற்றிதான். இதுவரை நிறைவேறாதிருந்த திருமண காரியங்கள் நிறைவேறும். எதிரிகளின் தொல்லை குறையும். மதிப்பும் மரியாதையும் உயரும். செய்தொழில் முன்னேற்றம் உண்டாகும். வியாபாரம் பெரும் ஆதாயம் அதிகரிக்கும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவால் மருத்துவச் செலவுகள் உண்டாகும்.



கடகம்: கணவன் மனைவியிடையே இருந்துவந்த வேற்றுமை நீங்கும் பிரிந்து வாழும் கணவன் மனைவி இணைந்து வாழக் கிரகநிலை சாதகமாக உள்ளது. திருமணமாகாதோருக்குத் திருமணம் நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு மதிப்பும் கௌரவமும் உயரும். வழக்குகளில் சாதகமானதீர்ப்புகள் வந்து சிலருக்கு நிம்மதி கிடைத்தே தீரும்



சிம்மம்: கடன் தொல்லை இல்லை. பணப் பற்றாக்குறை என்ற பிரச்சினைகூடப் படிப்படியாகக் குறையும். உத்தியோகத் தர்களுக்கு அலுவலகத்தில் உள்ள பிரச்சிகைகள் நீங்கும். வியாபாரிகளுக்கு வியாபாரம் பெருகும். கொடுக்கல் வாங்கலில் இருந்துவந்த சிரமம் நீங்கும். மருத்துவச் செவுகள் உண்டாகும். பிரயாணங்களில் கவனம் தோவை.




கன்னி: எதற்கு எடுத்தாலும் கோபமாகப் பேசுவதை விட்டு விடுங்கள். சிலருக்குக் கடன் பிரச்சினை பெரிதாகித் தொல்லை கொடுக்கும். என்றாலும் சமாளித்து விடுவீர்கள். உத்தியோகத் தர்களுக்கு வேலையிடத்தில் மன நிம்மதிக் குறைவு உண்டாகும். செய் தொழிலில் ஆதாயம் குறையும். சிலருக்கு அரசாங்கத்தால் அனுகூலங்கள் உண்டாகும்.



துலாம்: பிள்ளைகளால் நன்மைகள் ஏற்படும். உறவினர் ஒருவரால் மனதுக்குக் கஷ்டம் உண்டாகலாம். திருமண வாய்ப்புகள் இந்த வாரம் நல்ல பதிலைச் சொல்லாது. அதனால் முயற்சிகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். கடன் தொல்லை குறையாது. அதிகாரிகளின் ஆணவமான பேச்சுக்களையும் நீங்கள் சந்திக்க நேரும்.



விருட்சிகம்: கணவன் மனைவியிடையே இருந்துவந்த கருத்து வேற்றுமைகள் நீங்கும். பிரிந்து வாழ்ந்த தம்பதிகள் ஒன்று சேருவதற்கான சந்தர்ப்பம் உண்டு. வழக்குகளில் சாதகமான தீர்ப்புகள் வந்து சிலருக்கு மன நிம்மதி கிடைத்தே தீரும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவால் மருத்துவச் செலவுகள் உண்டாகும்.




தனுசு: திருமணம் நடைபெறாதவர்களுக்கு திருமணம் நடைபெறும் நரம்புத் தளர்ச்சி, ரத்த அழுத்தம், மூட்டுவலி போன்ற நோய்களால் சிலருக்கு மருத்துவச் செலவுகள் உண்டாகும். நடைமுறையில் சம்மந்த மில்லாத வீண் செலவுகள் அதிகமாகப் பணத்தைக் கரைய வைக்கும். பிரயாணங்களில் கவனம் தேவை.



மகரம்: தள்ளிப்போட்டு வந்த காரியங்களை எல்லாம் இப்போது எடுத்துப்போட்டுச் செய்தால் வெற்றி உங்கள் பக்கம்தான். தைரியமாகச் செயல்படுங்கள். பலன் கூடுதலாகிப் பணம் வந்து சேரும். உடல் ஆரோக்கியம் கூடும். தொலைதூர உறவினர் களால் நன்மை உண்டாகும். வியாபாரம் பெருகும். பொருளாதாரம் உயர்வடையும்.



கும்பம்: கடன் தொல்லை அதிகரிக்கும். எதிர்பார்த்தபடி வருமானம் வராத காரணத்தால் ஏமாற்றம் அதிகரிக்கும். வழக்குகளில் தீப்புத் தாமதமாகும். வேலை செய்யுமிடத்தில் வீண்பழி கேட்கவேண்டி வரலாம். வியாபாரிகளுக்கு வியாபாரம் சிறப்பாக இருக்கும். ஆதாயம் குறையும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவால் மருத்துவச் செலவுகள் உண்டாகும்.



மீனம்: தைரியமும் தன் நம்பிக்கையும் அதிகரிக்கும். கடன் தொல்லை தீரும் நிலை படிப்படியாக உருவாகும். செய் தொழிலில் சிறப்புகள் கூடும். வியாபாரம் விறுவிறுப்புடன் நடக்கும். நிலுவையில் உள்ள வழக்குகளில் நல்ல தீர்ப்பு வந்து சேரும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டுக் கிடைக்கும்.

அந்த நாள் வாராதோ?

(நாலிருசீரிரட்டை வியனிலைச் சிந்து)

- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா -

ஞாயிறைப் போற்றியே பொங்கலிட் டோமிந்த
ஞாலம் செழித்திடவே! - எல்லாம்
போயின காலத்தின் கோலமாய் இப்போது
பொங்கலும் போலியாச்சே!

உழுது பயிரிட்டு ஊரும் உறவுமாய்
உணர்வுடன் பொங்கலிட்டோம் - இன்று
தொழுது பிறதேசம் தோறும் அலைகிறோம்
தொன்மைச் சிறப்பிழந்தோம்!

வானத்தில் ஞாயிறு வாசலில் மாக்கோலம்
வண்ணமாய்த் தோரணங்கள் -புதுப்
பானையில் பொங்கல் பலகாரம் எல்லாமே
பார்க்காத பொங்கலிங்கே!

கோதையர் காலையில் முற்றம் பெருக்கிமாக்
கோலம் இடுவதெல்லாம் - பழங்
காதையி லேவரும் காட்சிக ளானதக்
காலமெப் போதிரும்பும்?

புத்தம் புதுக்காலை பூம்புனல் நீராடிப்
புத்தாடை தானணிந்தே - வெடி
மத்தாப்புத் தின்பண்டம் என்றே சிறார்கள்
மகிழ்ந்தஅக் காலமெங்கே?

முற்றத் திலேபுதுப் பானையில் மாவிலை
மஞ்சளோ டிஞ்சியிலை - கட்டிச்
சுற்றங்கள் சூழவே பொங்கிப் படைத்துச்
சுவைத்தஅக் காலமெங்கே?

தித்திக்கும் சர்க்கரை செந்நெல் லரிசியும்
தீம்பாலும் தேன்கரும்பும் - சேர
எத்திக்கும் வாசைன ஏறிடப் பொங்கியே
இன்புற்ற காலமெங்கே?

தையோடு நல்லதோர் காலம் வருமென்றே
தங்குக இன்பமென - நம்பிக்
கையோடு பொங்கலில் வாழ்த்தி மகிழ்ந்தே
கழித்தஅக் காலமெங்கே?

கீழ்த்திசை வானிலே தோன்றும் கதிரொளிக்
கீற்றில் நிலம்வெளுக்க - வாய்
வாழ்த்திடும் பொங்கலோ பொங்கலெ நந்தநாள்
வாராது பொய்விடுமோ?

பொதுவாக்கெடுப்பு க் குறித்த பேச்சுவார்த்தைக்கு சம்மதம் தெரிவித்த பிரிட்டன்-ஸ்காட்லாந்து தலைவர்கள்

ஸ்காட்லாந்தின் விடுதலைக்காக பாராளுமன்றத்தில் பொது வாக்கெடுப்பு நிகழ்த்துவது குறித்து இருநாட்டுத் தலைவர்களும் சந்திக்க மறுத்து வந்த நிலையில் இப்போது இன்னும் சில நாட்களில் இவர்களின் சந்திப்பு நிகழும் என்று பிரிட்டனின் பிரதமர் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஸ்காட்லாந்தின் முதலமைச்சர் அலெக்ஸ் சால்மண்ட் பொது வாக்கெடுப்பு நியாயமாகவும், முடிவெடுக்கும் விதமாகவும் நடைபெறுவதற்குத் தேவையான சட்ட ரீதியான அதிகாரம் அதற்கு வழங்கப்படவேண்டும், என்றார்.

ஸ்காட்லாந்தின் நாடாளுமன்ற உறுப்பினரான மைக்கேல் மூர், ஸ்கை நியூசுக்கு அளித்த பேட்டியில் இந்தப் பிரச்னை குறித்து இன்னும் சில விடை தெரியாத வினாக்கள் இருப்பதாகத் தெரிவித்தார். இருந்தாலும் பிரிட்டன் அரசாங்கத்தின் விருப்பத்திற்கேற்ப இந்த வாக்கெடுப்பை நடத்துவோம் என்றார்.

அலெக்ஸ் சால்மண்டின் செய்தித் தொடர்பாளர் இதுபற்றிப் பேசும்போது பல வினாக்கள் இருப்பதை உறுதி செய்தார். சுதந்திரம் கேட்கின்ற தேசியவாதிகளின் நோக்கம் என்ன என்பது எங்களுக்குத் தெரியவில்லை. எங்கள் வங்கிகளை எப்படி முறைப்படுத்துவோம் பிரிட்டன் மக்களும் பணம் போட்டுள்ள இரண்டு பெரிய வங்கிகள் எங்களிடம் உள்ளன. அவை இரண்டாண்டுகளுக்கு முன்பு திவாலாயின. இதை நாங்கள் எப்படி சரிசெய்வோம்.

எங்கள் ஓய்வூதியப் பணத்தை இனி யார் வழங்குவார்? எவ்வளவு வழங்குவார்கள்? நிறைய விடயங்கள் பேசித் தெளிவு பெற வேண்டும். இப்போது எடுக்கும் இந்த முடிவு இன்னும் முந்நூறு ஆண்டுகளுக்கு உரியதாகும். எனவே இதற்கு கால அவகாசம் தேவை, என்றார்.

சுதந்தர ஸ்காட்லாந்து பல பொருளாதார சிக்கல்களை எதிர்கொள்ளும் என்பது பொருளியலாளரின் கணிப்பு. ஸ்காட்டிஷ் தேசியக் கட்சியும் அரசாங்கமும் வாக்கெடுப்புக்கு கால அவகாசம் தேவை என்று கருதும் சூழ்நிலையில் டேவிட் கேமரூனுடன் வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தை நடத்துவதாக அறிவித்துள்ளன.

இலங்கையில் உண்மை முன்னேற்றம் இல்லாவிடில் பொதுநலவாய மாநாட்டில் கனடா பங்கேற்காது

நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆணையைத் தொடர்ந்து இலங்கையானது உண்மையான முன்னேற்றத்தை மேற்கொள்ளா விட்டால் அடுத்த வருடம் இலங்கையில் இடம்பெற உள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டை பகிஷ்கரிப்பதென்ற தனது நோக்கத்தில் கனடா உறுதியாக இருக்கின்றது என்று அந்நாட்டின் போஸ்ட் மீடியா செய்திச் சேவை தெரிவித்தது.

மனித உரிமைகள் தொடர்பான கவலைகளை தீர்த்து வைக்க ஆணைக்குழு அறிக்கை தவறிவிட்டது என்று கனடா கூறுகிறது. 2013 இல் கொழும்பில் இடம்பெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பாக கனடா தனது மனதை மாற்றுவதற்கு முன்னராக நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக உண்மையான மாற்றம் ஏற்பட வேண்டும் என்று கனடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹார்பரின் பேச்சாளர் வியாழக்கிழமை தெரிவித்துள்ளார்.இது வார்த்தைகள் செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட கேள்வியாகும் நடவடிக்கையிலேயே இது தங்கியுள்ளது. உண்மையான முன்னேற்றத்தை பார்ப்பதற்கு நாம் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. முன்னேற்றம் ஏற்படாவிடில் அந்த சந்திப்புக்களுக்கு நாங்கள் போகமாட்டோம் என்று பிரதமரின் பேச்சாளர் அன்ட் ரூ மார்டெளஸ் கூறியுள்ளார்.

இதேவேளை நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை போதியதாக இல்லை என்று கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பாயிட் கூறியிருந்தார். ஐ. நா. நிபுணர்குழு அறிக்கையில் எழுப்பப்பட்டிருந்த அந்த பாரதூரமானதும் நம்பகரமானதுமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சுயாதீனமான விசாரணையை நடத்துமாறு நாங்கள் தொடர்ந்தும் அழைப்பு விடுக்கிறோம் என்று வியாழனன்று பாயிட் கூறியிருந்தார்.

லண்டனில் ஏலம் விடப்படும் மகாத்மா காந்தியில் பென்சில் ஓவியம்

பென்சிலால் வரையப்பட்ட மகாத்மா காந்தியின் அபூர்வ ஓவியங்கள் லண்டனில் இம்மாத இறுதியில் ஏலம் விடப்பட உள்ளன. ஆங்கிலோ-யூத சமுதாயத்தைச் சேர்ந்த பிரபல ஓவியர் கிளியர் வின்ஸ்டன். இவரது மகள் தியோடரா இந்த ஓவியங்கள் குறித்து கூறுகையில், "எனது பெற்றோர் 1930ம் ஆண்டுகளில்

20ஆம் பக்கம் பார்க்க

ஜெயலலிதாவை பிரதமராக்க பா.ஜ.க.ஒத்துழைக்க வேண்டும்

ஜெயலலிதாவைப் பிரதமராக்க பா.ஜ.க. ஒத்துழைக்க வேண்டும் என்று துக்ளக் ஆசிரியர் சோ கோரிக்கை விடுத்தார். துக்ளக் இதழின் ஆண்டு விழா சென்னையில் நடைபெற்றது. இந்த விழாவில் பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி, குஜராத் முதல்வர் நரேந்திர மோடி, நடிகர் ரஜினி, இந்து முன்னணி அமைப்பாளர் ராம.கோபாலன், இயக்குநர் கே.பாலசந்தர், எழுத்தாளர் குருமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர். விழாவில் பேசிய துக்ளக் ஆசிரியர் சோ, 2014 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் மத்தியில் புதிய அரசு அமைவதில் அ.தி.மு.க .வின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும். திறமையான அரசை பா.ஜ.க.வால் மட்டுமே வழங்க முடியும். குஜராத் முதல்வர் நரேந்திர மோடியை பிரதமர் வேட்பாளராக பா.ஜ.க. அறிவித்தது. அவர் பிரதமரானால் நாடே பெரும் உற்சாகம் அடையும். ஒருவேளை பா.ஜ.க.வுக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமல் போய், மதச் சார்பற்ற கட்சிகள் என்ற பெயரில் தடை கிளம்புமானால் பா.ஜ.க. ஆதரவுடன் ஆட்சி அமையலாம் என்ற நிலை ஏற்பட்டால் ஜெயலலிதாவை பிரதமராக்க பா.ஜ.க. ஒத்துழைக்க வேண்டும் என்றார். நிகழ்ச்சியில் அத்வானி பேசுகையில், பாராளுமன்றத்தில் பா.ஜ.க. பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிறது. மத்திய அரசின் தவறான செயற்பாடுகளைக் கண்டிக்கும் பிரச்சினைகளில் அ.தி.மு.க. எங்களுக்கு எந்தக் குறைவும் அற்ற முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

இந்த இடத்தில் நான் ஒன்றை தெளிவுபடுத்திட விரும்புகிறேன். அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி இயல்பான கூட்டணி. மத்திய மாநில அரசுகளின் உறவு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளில், பா.ஜ.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் பொதுவான கொள்கைகளே இருக்கின்றன. மற்றபடி எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை இப்போதே கூறிவிட முடியாது என்றார்.

TRAFFIC TICKET?

நீங்கள் போக்குவரத்து விதிமுறைகளை மீறிய குற்றத்திற்காக பொலிசாரால் ரிக்கட் பெற்றுள்ளீர்களா?

காப்புறுதிக் கட்டணம் அதிகரிக்கும் என்றோ,
தகமைப் புள்ளிகள் குறையும் என்றோ,
குற்றக் கட்டணம் கிடைக்கும் என்றோ பயப்படுகிறீர்களா?

உங்களுக்காக வாதாடி வெற்றிபெற

Call: K. Sutharsan
416-560-6926

ஐ. நா. நிபுணர் குழுவின் அறிக்கை 17

சென்ற இதழ் தொடர்ச்சி

2. ஆணைக்குழுவின் சுயாதீனம் மற்றும் பக்கசார்பற்ற தன்மை

305. குற்றஞ்சாட்டப்பட்ட மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்களை புலனாய்வு செய்யும் அமைப் பொன்று சுயாதீனமான, பக்கசார்பற்ற மற்றும் திறமை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதைச் சர்வதேச சட்டம் தேவைப்படுத்துகிறது. சுயாதீனம் என்பது நிஜ சுயாதீனம் மற்றும் அதுபற்றிப் பகிரங்கமாகக் கருதப்படுவதுமாகும்.

306. எல்.எல்.ஆர்.சி.யைப் பொறுத்த வரையில், சுயாதீனமாகச் செயற்படுவதற் கான அவர்களது திறன் மற்றும் பக்கசார்பற்ற தன்மை ஆகியவற்றை விட்டுக்கொடுக்கக் கூடிய பாரிய அக்கறை முரண்பாடுகளை குறைந்த பட்சம் அதன் மூன்று உறுப்பினர்கள் கொண்டுள்ளார்கள் என்பதோடு, அவர்கள் சுயாதீனமானவர்கள் என்ற பொதுமக்கள் கருத்துணர்வைப் பாதிப்பதுமாகவுள்ளது. ஆணைக்குழுவின் தலைவர்கள் ஏப்பிரல் 2007 முதல் டிசம்பர் 2008 வரை சட்ட மா அதிபராக இருந்துள்ளார் என்பதன் படி, எல்.எல்.ஆர்.சி. முன்னிலையில் நேரடியாக இருக்கும் பல விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்தின் பிரதான சட்ட அலுவலராக கடமைகளைப் புரிந்துள்ளார். மேலும், முன்பிருந்த விசாரணை ஆணைக் குழுவொன்றில் (இலங்கையில் 2005 ஆகஸ்ட் முதல் நிகழ்ந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட பாரிய மனித உரிமைகள் மீறல்கள் பற்றி விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழு) அவரது செல்வாக்கு பாரியதொரு அக்கறை முரண்பாட்டைக் குறிப்பதோடு, ஆணைக் குழுவின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு நியமிக்கப்பட்ட சர்வதேச சுயாதீன புத்திஜீவிகள் குழுவின் பாரிய பகிரங்க விமர்சனத்துக்கான காரண மாகவும் அது இருந்தது. யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது, அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தி மாற்றமடைந்து வரும் இராணுவ மற்றும் மனிதாபிமான நிலமைகள் பற்றிய அதன் கருத்துக்களுக்குச் சாதகமாக வாதாடிய ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தர தூதுவர் இரண்டாவது உறுப்பினராவர், மூன்றாவது உறுப்பினர் முதலில் வெளிநாட்டமைச்சின் சட்ட ஆலோசகராக இருந்து பின் ஆணைக்குழுவின் விசாரணைக்கு உட்பட காலப்பகுதியில் அமைச்சின் சர்வதேச சட்ட விவகாரங் களுக்கான ஆலோசகராகப் பணியாற்றினார்.

307. அவர்களின் ஏனைய தகைமைகள் எதுவாக இருந்தாலும், அத்தகைய அக்கறை முரண்பாடுகளுக்கு ஆளாகி யுள்ளவர்கள் தாம் அரசாங்கத்தின் உயர் நிலை அதிகாரிகளாகக் கடமை புரிந்த காலகட்டத்தில் நிகழ்ந்த குற்றஞ் சாட்டப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்களை பாரபட்சம் இன்றிப் புலனாய்வு செய்து அவற்றுக்குப் பொறுப்புக்கூறல் தொடர்பான பங்களிப்பை செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் ஒரு அமைப்பில் உறுப்பினர்களாக இருப்பது முற்றிலும் பொருத்தமற்றதாகும். எக்கோணத்தில் இருந்து பார்த்தாலும், தாம் உயர் பதவிகளை வகித்த ஒரு அரசாங்கத்தின் அல்லது அவர்களைத் தானாகவே நியமித்த ஜனாதிபதியின் செயற்பாடு களை அவர்கள் சுயா தீனமாக மதிப்பிடு செய்யமுடியும் என எதிர்பார்ப்பது உண்மையிலேயே முடியாத தொன் றாகும். ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் எல்.எல்.ஆர்.சி.க்கு வெளியே ஆனால் அதன் செயற்பாட்டுக் காலப் பகுதியில் பகிரங்கமாக சொன்னவைகள் இது தொடர்பான அச்சங்களை மேலும் வலுப்படுத்துவதாயிருக்கின்றன.

308. மேலும், விசாரணை ஆணைக்குழுக் கள் அல்லது பொறுப்புக்கூறலை உறுதிப் படுத்துவதற்கான பாத்திரத்தைக் கொண்ட உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுக்களைப் போன்ற ஒப்பிடக்கூடிய அமைப்புக்கள் பங்காளர்களின் கலந்துரையாடும் செயற்பாடொன்றினூடாக அமைக்கப்பட வேண்டும் என்பது சர்வதேச சிறந்த பழக்க வழக்கங்களின் நியதி யாகும்: உறுப்பினர்களிடையே மனித உரிமைகள் துறையில் மற்றும் தோதான விடத்து, மனிதாபிமான சட்டத்தில் நிபுணத்துவம் உடையவர்களை உள்ளிட்ட அவற்றின் உறுப்பினர்களின் தகமை மற்றும் பாரபட்ச மற்ற தன்மையை பொதுமக்களுக்கு தெளிவாக்குவதற்கான அடிப்படைத் தத்துவத்தின் படி, குறிப்பாக அவர்கள் மனித உரிமைகள் மீறல் களுக்கு இலக்காகிய பெண்கள் மற்றும் ஏனைய தோதான குழுக்களின் போதிய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும்."

309. எல்.எல்.ஆர்.சி. பற்றிய குழுவின் கேள்விகளுக்கு அதன் எழுத்து மூலமான பதிலில் எல்.எல்.ஆர்.சி.யின் தொகுப்பு இலங்கையின் பல்லின மற்றும் பன்முக அரசியலைப் பிரதிநிதித்துவப்படுத்து வதாகவும் தமது துறையில் சிறந்து விளங்கிய பல சமூகங்களைச் சேர்ந்த மாண்புமிக்கவர்களை அது உள்ளடக்கு கிறது" என அரசாங்கம் அழுத்தமாகத் தெரிவித்துள்ளது. ஆயினும், குழுவின் கருத்துப்படி, எல்.எல்.ஆர்.சி.இன் அங்கத் துவம் இலங்கைச் சமூகத்தின் பன்முகத் தன்மையைப் போதியளவு பிரதிநிதித் துவம் பிரதிபலிக்கவில்லை என்பதோடு, சகல ஆணையாளர்களினதும் பின்னணி மற்றும் நிபுணத்துவம் ஆணைக்குத் தெளிவாகவே சம்பந்தப்பட்டதாயில்லை. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுள் ஒவ்வாத அளவில் அதிக எண்ணிக்கை யிலான பெண்கள் இருந்த போதிலும் அவர்கள் எப்படித் தாக்க முற்றார்கள் என்பதற்குக் கவனம் செலுத்த வேண்டிய நிலையில், எட்டு ஆணையாளர்களுள் ஒரு பெண் மாத்திரமே இருக்கிறார்.
அதே போன்று, ஒரேயொரு ஆணையாளர் மாத்திரமே. அவரே ஒரேயொரு பெண் ஆணையாளருமாவார் . தமிழராக இருப்ப தோடு, ஒரேயொரு ஆணையாளரே முஸ்லிம் பின்னணியைக் கொண்டவராக இருக்கிறார்.

310. ஆயினும், மிக முக்கியமாக, அரசாங் கத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட முன்னாள் அதிகாரிகளுடன் எல்.எல்.ஆர்.சி. அவர்கள் சார்பில் கனமாக வுள்ள, ஏற்கனவே எடுத்துக் கொள் ளப்பட்ட சுயாதீனம் மற்றும் பாரபட்சம் அற்ற தன்மை போன்ற விடயங்களுக்குப் புறம்பாக இக் காரணி எல்.எல்.ஆர்.சி. பற்றிய பொதுமக்கள் உணர்வைப் பாதித்து, அதனுடன் ஒன்றோ டொன்று சேர்ந்து செயற்படவோ அல்லது அதன் பெறுபேறுகளுக்கு நம்பகத் தன்மையைப் பெற்றுக் கொடுக்கவோ என்பது பற்றிய மக்களின் தீர்மானத்தை எடுக்கும் மனநிலையிலும் ஒரு தன்மையை ஏற்படுத்தும்.

311. இவ்வாறாக, பொறுப்புக்கூறல் பொறித்தொகுதிகளின் சுயாதீனம் மற்றும் பாரபட்சமற்ற தன்மையை உறுதிப்படுத்து வதற்கான சர்வதேச தரங்களுக்கெதிரே நிறுத்திப் பார்க்கும் போது எல்.எல்.ஆர்.சி. அதன் அமைப்புத் தொடர்பாக பாரிய அளவில் குறைபாட்டினைக் கொண்டி ருந்தது. அதன் அமைப்பு அதன் சுயா தீனத்தையும் பாரபட்சமற்ற தன்மையையும், குறிப்பாக யுத்தத்தின் இறுதிக் கட்டங் களின் போது அரசாங்கத்தையும் பாது காப்புப் படையினரையும் குற்றவகையில் சம்பந்தப் படுத்துவதைக் கேள்விக் குள்ளாக்குவதோடு, பொறுப்புக்கூறலை முன்னெடுத்துச் செல்வதற்கானதொரு அமைப்பு அது என்ற நியாயத்தை பலவீனப்படுத்துகிறது.

3. எல்.எல்.ஆர்.சி. இன் ஏனைய வடிவமைப்பு அம்சங்கள் (அ) பகிரங்க அறிக்கை விடுத்தல்

312. எல்.எல்.ஆர்.சி. போன்றதொரு ஆணைக்குழுவின் நடவடிக்கைகள், மேற்கொண்டு புலனாய்வுகளை அல்லது வழக்காடலை நடத்தல், மனிதப் புதை குழிகளில் இருந்து எச்சங்களைப் பரிசோதித்தல், இழப்பீடு, பல்வேறு நிறுவகச் சீர்திருத்தங்கள் மற்றும் மீண்டும் நேராதிருப்பதற்கான உத்தரவாதங்கள் போன்ற இன்னோரன்ன சிக்கல்களுக்குத் தீர்வு காணக்கூடிய அதன் தீர்மானங்களை மற்றும் அதன் பந்துரைகளைக் கொண்ட தொரு அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் முடிவுற வேண்டும் என சர்வதேச சிறந்த பழக்க வழக்கங்கள் குறிப்பிடுகின்றன. வெளியிடுவதனால் குறிப்பிட்ட ஒருவர் இனங்காணப்பட்டு அதன் விளைவாக அவரது உயிருக்கோ அல்லது பௌதிக பாதுகாப்புக்கோ ஆபத்து நேரக் கூடும் என்பதற்காக மாத்திரம் சிலவற்றைத் தடுத்து மற்றும் சுருக்கி அவை பகிரங்கப் படுத்தப்பட வேண்டும் என்பதையும் சிறந்த பழக்க வழக்கங்கள் தேவைப்படுத்து கின்றன.

எல்.எல்.ஆர்.சி.யின் ஆணையோ அல்லது விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டமோ இறுதி அறிக்கை ஒன்றை விடுப் பதைத் தேவைப்படுத்தவில்லை. மக்கள் நம்பிக்கையை பாதித்து, மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கையின் செயற்பாட்டுத் தாக்கத்தை மற்றும் பின்தொடர் நடவ டிக்கை எடுப்பது தொடர்பில் அவ்வா ணைக்குழு அதன் ஆணைக்குப் பதிலளித்துள்ளதா என்பதை மதிப்பீடு செய்யமுடியாத அளவுக்கு இலங்கையின் முன்னைய விசாரணை ஆணைக்குழுக் களின் வரலாறு ஒரு உருமாதிரியை எடுத்துக் காட்டுகிறது. எல்.எல்.ஆர்.சி.யின் இறுதி அறிக்கையின் பிரதியொன்று ஐக்கிய நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளப்படும் என்றிருந்த போதிலும் அதனை இலங்கை மக்களுடன் பகிர்ந்து கொள்வதே மிக முக்கியமானதாகும். எல்.எல்.ஆர்.சி. அதன் சகல தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகளை அதிக அளவில் பகிரங்கமாக விநியோகிப்பதை நல்ல பழக்க வழக்கங்கள் தேவைப் படுத்துவதாயிருக்கும்.

(ஆ) பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சி கள் பாதுகாப்புக்குப் போதிய நடவடிக்கைகள் இன்மை

313. எந்த ஒருவனதும் பௌதிகப் பாதுகாப்பு மற்றும் அந்தரங்கத்தை நியாயமான மற்றும் எதிர்பார்க்கக் கூடிய மூன்றாம் நபர்களிடம் இருந்து அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் என்பதை சர்வ தேச மனித உமைகள் சட்டம் தேவைப் படுத்துகிறது. சூழ்நிலைப் பொருத்த மனித உரிமைகளை மையமாகக் கொண்ட ஆணைக்குழுக்களின் அமைப்பு விடயத்தில் இத்தரம் தெளிவாக வழங்கப்பட்டுள்ளது:

ஆணைக்குழுவுக்குத் தகவலை வழங்கும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பு, பௌதிக மற்றும் மனோதத்துவ நல்வாழ்வு மற்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டால், அவர்களின் அந்தரங்கம் ஆகியவற்றை உறுதி செய்ய பயனுறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும். இது தொடர்பாக எல்.எல்.ஆர். சி.க்கு சாட்சிய மளிப்பதா இல்லை எனச் சிந்திப்பவர் களுக்கு நிச்சயத் தன்மை, வருவ துரைக்கக் கூடிய மற்றும் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்காக இது தொடர் பில் அதன் ஆற்றல் மற்றும் அதிகாரத் துக்கான ஒரு தெளிவான சட்ட அடிப்படை இருத்தல் வேண்டும். பாதிக்கப் பட்டவர்களின் தேவைக்காகவே பெரும் பாலும் பொறுப்புக்கூறல் பொறித்தொகுதி கள் உள்ளன என்பதால் இச்செயற் பாட்டின் மையத்தில் அவர்களை வைத்தல் வேண்டும்.

இதற்காக, பாதிக்கப்பட்டோரும் சாட்சிகளும் கண்டிப்பாகச் சுய விருப்பத்தின் அடிப்படையிலேயே பொதுவாகச் சாட்சி வழங்குவதற்காக அழைக்கப்பட வேண்டும் என்பதற்கான ஏற்பாட்டை சர்வதேச தரங்கள் வழங்குகின்றன. சாட்சி பகர்வதற்கு முன்பும் அதன் பின்னரும் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவியளிப்பதற்காக சக மற்றும் மனோதத்துவ சேவை யாளர்கள் அனுமதிக்கப்பட வேண்டும். மற்றும் சாட்சியம் அளிப்போன் செலவு களை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். உதாரணமாக கௌத்தமாலா விலும் சியர்ரா லியோனிலும், இரகசியத் தன்மைக்கான உத்தரவாதத்தையும் பேருவிலும் தென் ஆபிக்காவிலும் மனோதத்துவ உதவியையும் அத்துடன் தென் ஆபிக்காவைப் போன்று சாட்சி களுக்கான முறையான பாதுகாப்பு ஆகியவை போன்ற பாதுகாப்பு மற்றும் உதவி நடவடிக்கை வரிசையினை ஏனைய நாடுகளின் ஆணைக்குழுக்கள் பாதிக்கப் பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் வழங்குகின்றன.

314. எல்.எல்.ஆர்.சி.க்கு வழங்கப்பட்ட ஆணையோ விசாரணை ஆணைக்குழுச் சட்டமோ சாட்சியம் வழங்க முன்வரும் ஆட்களுக்கு எவ்வித பாதுகாப்பு நடவடிக்கைகளையும் குறிப்பிடவில்லை. மாறாக விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 13ஆம் பிவு சாட்சி வழங்கும் எவருக்கும் நீதிமன்றம் ஒன்றின் முன்னிலையில் சாட்சி வழங்கும் ஒரு வருக்கு அத்தகைய நீதி மன்றத்துக்குச் சாட்சி வழங்குவது தொடர்பாக உரித்தாகும் சகல வரப்பிரசாதங்களுக் கும் உத்தாகும் எனக் குறிப்பிடுகிறது.

(தொடரும்)

சிதம்பர ஆதி நடேசர் ஆலயம்

கனடாவில் ஒரு சிதம்பரம்

அர்ச்சனைச் சீட்டு இல்லாத ஒரே ஆலயம்

2191 WARDEN AVENUE (Warden & Sheppard) 416-751-2022

மனம் உருகி வழிபடும் அடியவர்கள் கேட்கும் வரங்களை அள்ளிக் கொடுக்கும் வள்ளல் சிதம்பர ஆதி நடராசப் பெருமானின் அருளைப் பெற்றவர்கள் பலர்.

தினமும் ஆறுகாலப் பூசைகள் இடம்பெறுகின்றன.

பூசை நேரங்கள்: காலை 9:30 மணி, காலை 10:30 மணி, மதியம் 12:00 மணி
மாலை 5:00 மணி, மாலை 6:00 மணி, இரவு 7:30 மணி

19-02-2012 ஞாயிறு மஹா சிவராத்திரி

சிவன் அடியார்களே
சிவ விரதங்களில் மிகவும் சிறந்த விரதமான சிவராத்திரி தினமன்று சிதம்பர ஆதி நடேசர் ஆலயத்தில் சிவபெருமானுக்கு நான்கு ஜாமமும் விஷேட அபிஷேக பூஜையும் ஏகாதச ருத்திர பாராயணம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அன்றைய தினம் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாய் வருகை தந்து சிவனை வழிபட்டு திருவருள் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விசேட தினங்கள்

20-01-2012 வெள்ளி - பிரதோஷ விரதம்
26-01-2012 வியாழன் - சதுர்த்தி விரதம்
05-02-2012 ஞாயிறு - பிரதோஷ விரதம்
06-02-2012 திங்கள் - தைப் பூசம்
10-02-2012 வெள்ளி - தை கடைசி வெள்ளி
19-02-2012 ஞாயிறு - பிரதோஷ விரதம்
மஹா சிவராத்திரி
21-02-2012 செவ்வாய் - மாசி அமாவாசை
25-02-2012 ஞாயிறு - சதுர்த்தி விரதம்
05-03-2012 திங்கள் - பிரதோஷ விரதம்

சிவபதம் எய்தியவா்களுக்கு அவா்களது திதியில் மோட்ச அர்ச்சனை செய்து கொடுக்கப்படும்

நீங்கள் கொடுக்கும் நன்கொடைகளுக்கு வரிவிலக்குப் பற்றுச்சீட்டு வழங்கப்படும்

6ஆம் பக்கத் தொடர்ச்சி

மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாடுகள் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற ஒரு தீர்மானம் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் தெரிந்துகொண்டு நாங்கள் அரசுக்கு முன்னால் தீர்மானங்களை வைத்தபோது அவர்கள் இன்று திணறிக்கொண்டிருக்கின்றார்கள்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அறிக்கையை ஜனாதிபதி சொல்லிக்கொண்டிருக்கிறார். அவருக்கு நெருக்கடி முற்றிக் கொண்டிருக்கிறது. எங்களால் எதுவும் செய்ய இடமிருக்கக்கூடாது என்று நினைப்பவர்கள் எங்களை செயலிழக்கச் செய்வதற்காக மக்கள் மத்தியிலே எங்கள் நல்லெண்ணத்தையும் மதிப்பபையும் உடைப்பதற்காக ராஜபக்' எங்களை பிளவுபடுத்த நினைப்பதற்கு முன்னோடியாக எங்களிடம் இருப்பவர்களும் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

51 விடயங்களை மிகத் தெளிவாக தமிழ் மக்களுடைய மாநிலத்திற்கு வேண்டுமென்று சொல்லியிருக்கின்றோம். 12 விடயங்கள் மத்திய அரசுக்கு இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றோம். எங்களுடைய ஆழமான கருத்து இன்றைய அரசியல் ஒற்றையாட்சி அமைப்பில் நாங்கள் கொடுத்த விடயங்களுக்கு தீர்வுகாண முடியாது என்பது எங்களுக்கு தெளிவாகத் தெரியும். இவற்றை அவர்கள் ஏற்றுக்கொண்டால் எப்படியாவது அரசியல் அமைப்புக்கு அவர்கள் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதும் எங்களுக்குத் தெரியும். எங்களுடைய பலம் எமது மக்கள் புலம்பெயர்ந்த மக்கள் சர்வதேசத்திலே எங்களுக்கு இன்று கிடைத்திருக்கின்ற அனுதாபம் ஆதரவு என்பவையாகும். இவற்றை இழக்காமல் எங்களுடைய மக்களின் விடிவுக்காக மிகக்கவனமாக இன்னுமொரு பேரழிவு எங்கள் மக்கள் மத்தியிலே ஏற்படாதவாறு ஜனநாயக விழுமியங்களை கட்டியெழுப்பி அதைப் பாதுகாத்து வழிநடத்துவதற்கும் போராடுவதற்கும் எமது இளம் சமுதாயத்தை நம்பி அவர்களை வரவேற்றுக்கொண்டிருக்கிறோம்.

வடக்கிலிருந்து கிழக்கு வரை 95 வீதத்திற்குமேற்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. உள்ளூரிலே அவர்கள்தான் இருக்கிறார்கள்.ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு இல்லாத அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறது. அதை நாங்கள் கவனமாக பேணிக்காக்க வேண்டும். அதனூடாக எங்கள்மக்களுடைய எதிர்கால நல்வாழ்க்கை எதிர்கால அபிவிருத்தி விடுதலைக்காக உழைப்பதற்கு அவர்களும் கட்சிக்கு ஈடாக பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களாவார்கள். அந்தக் கடமைக்கு கட்டுப்பட்டவர்களாக மிகக் கவனமாக அரசுக்கு எந்தச் சந்தர்ப்பத்தையும் கொடுக்காமல் இந்த அத்திவாரத்தை ஆட்சிபீடத்தை கவனமாகக் காப்பற்ற வேண்டும்

நல்லிணக்கச் செயற்பாட்டுக்கு உதவுமாறு சர்வதேசத்துக்கு கூட்டமைப்பு அழப்பு

இன முரண்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக அரசாங்கம் நியமித்திருந்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் அறிக்கையை நிராகரித்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஆணைக்குழுவின் அறிக்கையானது நம்பகத்தன்மை குறைபாட்டைக் கொண்டிருப்பதாகவும் அத்துடன், ஒரு வருடத்திற்கு முன்னர் அந்தக் குழு பரிந்துரைத்திருந்த இடைக்கால சிபார்சுகள் கூட அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லையெனவும் சாடியுள்ளது.

ஐ.நா. நிபுணர் குழுவின் பரிந்துரைகளை பேணும் விதத்தில் பதிலளிக்கும் கடப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்தும் நடவடிக்கைகளை சர்வதேசச் சமூகம் மேற்கொள்ளவேண்டுமென தமிழ்க் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. யுத்தத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டோரை பிரதிநிதித்துவப்படுத்துவது தனது கட்சியென தன்னை பிரகடனப்படுத்தியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கையில் உண்மையான நல்லிணக்கமானது நம்பகரமான பதிலளிக்கும் கடப்பாட்டு நடவடிக்கைகளிலும் பாதிக்கப்பட்டோருக்கு உண்மை, நியாயம், இழப்பீடுகளை வழங்குவதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதிலுமே தங்கியிருக்கிறதென சுட்டிக்காட்டியிருக்கிறது.

பதிலளிக்கும் கடப்பாட்டு விவகாரங்களுக்குத் தீர்வுகாண்பதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பதிலளிக்கும் கடப்பாட்டு நடவடிக்கைகளில் சர்வதேச தரத்தை கொண்டவையாக அமைந்திருக்கவில்லையென்றும் தெரிவித்திருக்கிறது. அத்துடன், தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதில் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் தோல்வி கண்டிருப்பதாகவும் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்காலப் பரிந்துரைகள் 2010 செப்டெம்பரில் கையளிக்கப்பட்டபோதிலும் தடுத்துவைத்தல், காணிப் பிரச்சினைகள், சட்டம், ஒழுங்கு, நிர்வாகம், மொழி, சமூகப் பொருளாதார ஜீவனோபாயக் கவலைகள் போன்ற விடயங்கள் தொடர்பான பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறது.

சுமார் 100 பக்கங்களைக் கொண்ட அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டிருக்கிறது.

கதிரைகள் வாடகைக்கு

416-751-2022

தாயின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் இரட்டைக் குழந்தைகள் உட்பட 5 சிறுவர் பலி


ஜோர்டன்

வீடொன்றில் ஏற்பட்ட தீ அனர்த்தத்தில் இரட்டைக் குழந்தைகள் உட்பட 3 குழந்தைகளும் அவர்களது 19 வயது சகோதரனும் தீயில் கருகி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் பிரித்தானிய லான்கஷியர் எனும் இடத்தில் இடம் பெற்றுள்ளது. இந்த அனர்த்தம் தொடர்பில் பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லைதம் வீதியில் அமைந்துள்ள மேற்படி வீட்டில் சம்பவதினம் இரவு பலியான பிள்ளைகளின் தாயாரான மிசெலி ஸ்மித்தின் 36ஆவது பிறந்த நாள் கொண்டாட்டம் இடம்பெற்றது.

மிசெலி தனது நண்பர்களுடன் வீட்டின் கீழ் தளத்தில் பிறந்தநாளைக் கொண்டாடிய வேளையில் அந்த வீட்டின் மாடியில் தீ அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.


ஹோலி, எலா

இதன்போது மாடியில் 4 வயது இரட்டைக் குழந்தையான ஹோலியும் எலாவும், அவர்களது இளைய சகோதரனான ஜோர்டனும் (2 வயது) தூங்கிக்கொண்டு இருந்துள்ளனர்.

இந்நிலையில் மிசெலியின் மூத்த மகனான றீஸ், தன்னுடைய சகோதரர்களை காப்பாற்ற மாடிக்கு சென்ற வேளை தீயில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

மிசெலியின் ஒன்பது பிள்ளைகளில் ஏனைய 3 மகன்மாரும் இரு மகள்களும் இந்த அனர்த்தத்தில் சிக்காது உயிர் பிழைத்துள்ளனர். இந்த தீ அனர்த்தத்தில் சிக்காது உயிர் பிழைத்துள்ள மிசெல்லி, ஒரே சமயத்தில் தனது 4 பிள்ளைகளை இழந்த அதிர்ச்சியில் இருந்து மீள முடியாத நிலையில் இருப்பதாக கூறப்படுகிறது. இந்நிலையில் இந்த தீ அனர்த்தம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

நாய்களுக்கான விசேட பியர்

பிரித்தானியாவில் நியூகாஸலிலுள்ள பிராண்ட்லிங் விலா என்ற குடிபான நிலையமொன்று செல்லப் பிராணிகளுக்கு ஊக்குவிப்புகளை வழங்கும் முகமாக அவற்றுக்கான விசேட உணவுகள் குடிபானங்கள் என்பனவற்றை பரிமாறி வருகிறது.

இதன் ஒரு கட்டமாக மேற்படி குடிபானச் சாலையில் தயாரிக்கப்பட்ட நாய்களுக்கான விசேடமான பியரை நாயொன்று சுவைப்பதை படங்களில் காணலாம்.





KING COPY

BLACK & WHITYE COPY LETTER SIZE

1.5¢ PER PAGE OVER 1000

501 - 1000 PAGES 1.75¢ Per Page

1 - 500 PAGES 2¢ Per Page

LAMINATION, CERLUX BINDING SHEET PROTECTOR 1 BOX $3.49

OPEN HOURS
MON - FRI 5-12 PM
WEEKED 9AM -10PM

COLOUR COPY LETTER SIZE 30¢

MAX. PRINT SIZE 11 x 17

2191 WARDEN AVENUE
416-751-2022

ஒரே கூரையின் கீழ்

முழுக் குடும்பத்திற்குமான பல், வாய் சம்பந்தமான வியாதிகளுக்கு வைத்தியம் செய்யப்படும்


சிகிச்சைக்கு முன்


சிகிச்சைக்குப் பின்

முரசு கரைதலை நிறுத்துதல்
பல் வேர்களை அடைத்தல்
அழகுபடுத்தும் பல் சிகிச்சை
முதியோர் பல் பராமரிப்பு
கிளிப் போடுதல்
பற்களை வெண்மையாக்கல்
ஞானப்பல் எடுத்தல்

கட்டுப்பற்கள்
நிரந்தரமான செயற்கைப்பற்கள்
பவுண்பல் கட்டுதல்
குழந்தைகளுக்கான பல் சிகிச்சை
வாய் துர்நாற்றம் அகற்றல்
பல்அடைத்தல்

என்றென்றும் இயற்கைப் பற்களின் ஆரோக்கியச் சிரிப்பிற்கு

பிரபல பல் வைத்திய நிபுணர்

டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

2191 Warden Ave, Scarborough, ON.
416-750-9969

தனது மகன் முடியாட்சியை இழக்கலாம் என அஞ்சிய மகாராணியார்



பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் இளவரசி டயானாவிடமிருந்து விவாகரத்து பெற்று கமீலா மீது காதல் கொண்டது தொடர்பில் 5ஆம் பக்கம் பார்க்க

MG MOTORS

BUY - SELL - WHOLESALE - LEASING



Chandran: 416-616-4054
(Ganesh Murugesu)

Tel: 905-472-7464 Fax: 905-472-9897
347 Main Street, Markham, ON. L3P 1Z2
Email: info@mgmotors.ca
www. mgmotors.ca

MOTORS 416-616-4054 347 Main St.

வீடு, வர்த்தக நிலையங்கள் வாங்க விற்க...
உதயன் பொன்னுத்துரை, BSc (Hons), BROKER



HomeLife/Champions
Realty Inc, Brokerage*
Each office is independently owned and operated
Office: 416-281-8090
Direct: 416-505-2120
#1 Producer (*) 2004 to 2009
www.TorontoRealHome.com

HOPPER HUT

உங்கள் கொண்டாட்டங்களுக்குத் தேவையான உணவு வகைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

கதிரைகள் வாடகைக்கு உண்டு

Tel: 416-299-4311

சிதம்பர ஆதி நடேசர் ஆலயம்

2191 WARDEN AVENUE (Warden & Sheppard) 416-751-2022

அர்ச்சனைச் சீட்டு இல்லாத ஒரே ஆலயம்

மஹா சிவராத்திரி விரதம்

19-02-2012 ஞாயிற்றுக்கிழமை

சிவன் அடியார்களே

சிவ விரதங்களில் மிகவும் சிறந்த விரதமான சிவராத்திரி தினமன்று சிதம்பர ஆதி நடேசர் ஆலயத்தில் சிவபெருமானுக்கு நான்கு ஜாமமும் விஷேட அபிஷேக பூஜையும் ஏகாதச ருத்திர பாராயணம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அன்றைய தினம் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாய் வருகை தந்து சிவனை வழிபட்டு திருவருள் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அடியார்கள் தமது கரங்களினால் பால்குடம் நீர்குடம் சுமந்து வலம்வந்து காசிவிஸ்வநாதப் பெருமானுக்கு அபிஷேகம் செய்து வில்வம் சாத்தி வழிபாடு செய்து கொள்ளலாம்.

1ம் ஜாமம்
6 மணி முதல் 9 மணி வரை

ஏகாதச ருத்திர பாராயணம், பஞ்சகவ்வியம் விஷேட அபிஷேகம் நவகலச அபிஷேகம், பருப்பு அன்னம் நைவேதனம். தாமாரைப்பூ அலங்காரம், பஞ்சமுக ருத்திர திரிசதி வில்வ அர்ச்சனை, இருக்கு வேத பாராயணம், சிவபுராண பாராயணம்

உபயம்: டாக்டர் சிவாஜி அவர்கள்

2ஆம் ஜாமம்
9:00 மணி முதல் 12:00 மணி வரை
(இலிங்கோற்பவகாலம்)

பஞ்சாமிர்த விஷேட அபிஷேகம், நவகலச அபிஷேகம், பாயச நைவேதனம், சந்தனக் குழம்பு அலங்காரம். துளசி அர்ச்சனை, வில்வாஷ்டோத்தர சதநாம பஞ்சமுக அர்ச்சனை, யஜுர் வேத பாராயணம். லிங்கா அஷ்டக பாராயணம், சிவபுராண பாராயணம்.

உபயம்: திரு. பாலசுப்பிரமணியம் மகாதேவன் குடும்பத்தினர், காரைநகர்

3ஆம் ஜாமம்:
நள்ளிரவு 12:00 மணி முதல் அதிகாலை 3:00 மணி வரை

தேன் விஷேட அபிஷேகம். ஏககலச அபிஷேகம், எள்ளுச்சாத நைவேதனம், முல்லைமலர் அலங்காரம், அஷ்டோத்தர லிங்க வில்வ அர்ச்சனை, சாமவேத பாராயணம், பஞ்சபுராண பாராயணம்

உபயம்: பசுந்தீவு கோவிந்தன் குடும்பத்தினர்

4ம் ஜாமம்:
3:00 மணி முதல் காலை 6:00 மணி வரை

கரும்புச்சாறு விஷேட அபிஷேகம், ஏககலச அபிஷேகம், வெண்பட்டு அலங்காரம், சுத்தன்னம் நைவேதனம், நந்தியவட்டை, நீலோத்பல மலர் அலங்காரம், சிவசகஸ்ர நாம அர்ச்சனை, பஞ்ச புராண பாராயணம்.

உபயம்: திரு. நித்தியானந்தராசா தம்பித்துரை குடும்பத்தினர் காரைநகர்

காலை 7:30 மணிக்கு பாரணைப் பூஜை நடைபெற்று அன்னதானம் வழங்கப்படும்